











# விடுதலைப்புலிகள்




குரல்: 129 மாசி – பங்குனி, 2006 அன்பளிப்பு: 12/=

# மகிந்த அரசு நடாத்தும் ஒட்டுக்குழு அரசியல்

**உடன்பட்டபடி ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவுக்கு மகிந்த அரசு விடாப்பிடியாக மறுத்துவருவதால் ஜெனிவாப் பேச்சுக்கள் தேக்க நிலையை அடைந்துள்ளன.**

**முதற்கட்ட ஜெனிவாப் பேச்சின் பின்னர் ஒட்டுக்குழுக்களுடன் சிங்கள இராணுவமும் இணைந்து, வெளிப்படையாகத் தோன்றி கொலைத்தாக்குதல்கள் புரிவதையும் - ஆயுதமுனையில் மக்களை மிரட்டுவதையும் சர்வதேச சமூகம் அவதானித்தபடிதான் உள்ளது.**

ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவு தொடர்பாக நோர்வே அரசும் - கண்காணிப்புக்குழுவும்; மகிந்த அரசை எவ்வளவோ வலியுறுத்தியும்கூட இதுவரை எந்தப்பயனும் ஏற்படவில்லை.

அந்தளவுக்கு, ஒட்டுக்குழு விடயத்தில் மகிந்த அரசு கடும்போக்கு நிலைப்பாட்டுடன் உள்ளது.

இந்த ஒட்டுக்குழுக்களை வைத்துக் கொண்டு எதைச்சாதிக்கமுடியும் என்று மகிந்தஅரசு எண்ணுகின்றது?

சிங்களஅரசைப் பொறுத்தவரையில் தனது முப்படைகளையும் பயன்படுத்தி போர்மூலம் புலிகள் இயக்கத்தைத் தோற்கடிக்கமுடியும் என்ற இராணுவ நம்பிக்கையை அது இழந்துவிட்டது.

அதனாலேயே, ஒட்டுக்குழுக்களைப் பயன்படுத்தி சதிஅரசியலை மேற்கொண்டு தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முடியும் என்று சிங்கள அரசு நம்புகின்றது.

'புலிகள் இயக்கம் பிளவுபட்டுள்ளது' - 'தமிழ்மக்கள் பிரிந்து நிற்கின்றனர்' என்றொரு மாயையை உலகநாடுகளுக்கு ஏற்படுத்த இந்த ஒட்டுக்குழுக்களை, மகிந்த அரசு பயன்படுத்த விரும்புகின்றது.

அதேசமயம், இந்த ஒட்டுக்குழுக்களை அரசியல் கட்சிகளாகப் பதியவைத்து, அவற்றைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான தமிழ்க்கட்சிகள் என்று உலகிற்குக் காட்டவும் சிங்கள அரசு விரும்புகின்றது.

இதன்மூலம், புலிகளுடன் மட்டுமல்ல இந்த ஒட்டுக்குழுக்கட்சிகளுடனும் பேசித்தான் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலவேண்டும் என்றொரு கருத்தை முன்வைத்து சர்வதேச சமூகத்தைக் குழப்பியடிக்கலாம் என்றும் சிங்கள அரசு நம்புகின்றது.

சிங்கள அரசின் இந்த ஆசைகளும் - நம்பிக்கைகளும் வெறும் கற்பனைகள் என்பது சர்வதேசசமூகத்திற்குத் தெரியும்.

இந்த ஒட்டுக்குழுக்களின் மக்கள் விரோதச் செயற்பாடுகளையும் - சமாதான விரோத நடவடிக்கைகளையும் சர்வதேசம் நன்றாகவே அறிந்துவைத்துள்ளது.

போரை நிறுத்திப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உலகநாடுகள் முற்படும் இந்தவேளையில் ஒட்டுக்குழு அரசியல்மூலம் இலங்கைத்தீவில் இரத்த ஆறு ஓட, மகிந்தஅரசு வழிவகைகளைச் செய்கின்றது என்ற குற்றச்சாட்டே உலக ஊடகங்களில் மேலோங்கியுள்ளது.

'ஜிகாத்' என்ற பெயரில் ஒட்டுக்குழுவொன்று இராணுவத்தின் துணையுடன் செயற்படுவதாகப் புலிகள் இயக்கம் நிரூபித்திருந்தது.

இதையிட்டு சர்வதேச சமூகம் அதிகளவு அக்கறைப்பட்டபோது முஸ்லிம் படைஅணி என்ற பெயரில் அந்த ஒட்டுக்குழுவை உள்வாங்கி அதற்கு சட்டரீதியான மதிப்பையும் மகிந்த அரசு கொடுத்துள்ளது.

இந்த ஒட்டுக்குழுக்களை வைத்துக் கொண்டு மகிந்த அரசால் புலிகளுடன் போரும் செய்யமுடியாது சமாதானமும் செய்ய முடியாது என்பதை அது புரிந்துகொள்ள வேண்டும்.

அதற்குப் பதிலாக இந்த ஒட்டுக்குழுக்களை ஏவிவிட்டு தமிழர்தாயகத்தில் கொலைகளையும் - வன்முறைகளையுமே மகிந்த அரசால் செய்யமுடியும்.

அரசபடைகளால் அல்லது அரசபடைகளின் ஆதரவுடன் இயங்கும் ஒட்டுக்குழுக்களால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படும் போது அதை வெறுமனே பார்த்துக்கொண்டு புலிகள் இயக்கமும் இருக்கமாட்டாது.

மொத்தத்தில் மகிந்தரின் ஒட்டுக்குழு அரசியல் பெரும் இரத்தக்களறிமிக்க போரைநோக்கியே இட்டுச்செல்கின்றது என்பதை சர்வதேச சமூகம் உணரவேண்டும்.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவு தொடர்பாக மகிந்த அரசிடம் வேண்டுகோள்கள் விடுப்பதற்குப்பதிலாக உலகநாடுகள் சிங்கள அரசின்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்பதே தமிழ்மக்களின் விருப்பமாகும்.

அதுதான் சமாதானத்திற்கும் உறுதியைக்கொடுக்கும். ●



# உள்ளூராட்சித் தேர்தல்கள் உணர்த்தும் ஆழமான அரசியல் உண்மைகள்

உச்ச அரசியல் அதிகாரங்களுடன் சிறிலங்காவின் உள்ளூராட்சித் தேர்தல்கள் சம்பந்தப்படவில்லை என்பது உண்மையே.

ஆயினும், தமிழ் - சிங்கள மக்களின் அரசியல் மனநிலை இந்தத் தேர்தல்கள்மூலம் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்க முடிவெடுத்த சிங்களஅரசு திருகோணமலை மாவட்டத்திலும் - அம்பாறை மாவட்டத்திலும், சில இடங்களில், தேர்தல்களை நடாத்த முடிவெடுத்தது.

இந்த விநோத முடிவின் பின்னால் சில பேரினவாத நோக்கங்கள் இருந்தன.

சிங்கள - முஸ்லிம் மக்களின் வாக்குகள் மற்றும் ஒட்டுக் குழுக்களின் செயற்பாடுகளினால் புலிகளின் ஆதரவைப் பெற்ற தமிழரசுக் கட்சியைத் தேர்தலில் பின்னடையச் செய்வதன்மூலம் புலிகளின் அரசியல் செல்வாக்கு இங்கெல்லாம் பெருமளவில் இல்லை என்று உலகிற்குக்காட்ட சிங்கள அரசு திட்டமிட்டது.

அதன்மூலம் தமிழரின் ஏக அரசியல் பிரதிநிதிகள் புலிகள் இயக்கம்தான் என்ற உண்மைநிலைப்பாட்டை உலக சமூகத்தின்முன் கேள்விக்கிடமாக்க சிங்கள அரசு விரும்பியது.

அத்துடன் தமிழரின் தாயகக்கோட்பாட்டையும் சர்வதேச அரங்கில் கேள்விக்கிடமாக்க சிங்கள அரசு எண்ணியது.

ஆனால், சிங்கள அரசின் இனவாதச் சூழ்ச்சியை அங்கு வாழ்ந்துவரும் தமிழ்மக்கள் முழுமையாக முறியடித்துவிட்டனர். எதிர்பாராதவகையில் ஒற்றுமை உணர்வுடன் ஒன்றுதிரண்டு தமிழரசுக்கட்சிக்கு வாக்களித்துத் தமிழரின் அரசியல்வேட்கையை உலகிற்குப் பறை சாற்றியுள்ளனர்.

'ஒட்டுக்குழுக்களுக்குக் கிழக்கில் அரசியல் ஆதரவுண்டு' - 'தமிழீழத் தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஆதரவளிக்கக் கிழக்குவாழ் தமிழ்மக்கள் தயாராக இல்லை'... என்பன போன்ற சிங்களப்பேரினவாதிகளின் பொய்ப்பரப்புரைகளைக் கிழக்குமாகாணத் தமிழ்மக்கள் உலகிற்கு அம்பலப்படுத்தியுள்ளனர்.

இதன்மூலம் தமிழரின் அரசியல்மனதில் பிரதேசவேறுபாட்டிற்கு சிறிதளவும் இடமில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழரின் அரசியல் நலன்களுக்கு எதிராக சிங்களத்தின் ஆளும்கட்சியும் - எதிர்க்கட்சியும் ஒன்றுபடும் என்ற உண்மையும் - சர்வதேசம் உணரும் வகையில் - இந்தத் தேர்தலில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அதாவது, திருமலை நகரத்தை விழுங்கும் இலக்குடன் சிங்களப் பேரினவாதிகள் தங்களது அரசியல்பகைமைகளையும் மறந்து ஒன்று சேர்ந்து பொதுச்சின்னத்தில் தேர்தலைச் சந்தித்தனர்.

ஆயினும், திருமலைவாழ் தமிழர்கள் தம் தமிழீழத் தேசியப்பற்றை - வாக்குகள்மூலம் வெளிப்படுத்திப் பேரினவாதிகளைப் படுதோல்வியடையச் செய்துள்ளனர்.

இவ்விதம், கிழக்குமாகாணம்வாழ் தமிழ்மக்கள், தமிழரின் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி - புலிகள் இயக்கத்தின் அரசியல் தலைமைத்துவத்தை அங்கீகரித்து ஒரு வரலாற்றுத்தீர்ப்பை உள்ளூராட்சித்தேர்தல்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த மக்கள் தீர்ப்பை சிங்கள அரசு புரிந்துகொண்டு புலிகள் இயக்கத்துடன் நேர்மையான வகையில் அரசியல் கலந்துரையாடல்களை நடாத்தமுன்வரவேண்டும்.

அதுபோல, சிங்களதேசத்தில் சிங்கள மக்களும் சற்று வித்தியாசமான முறையில் வாக்களித்துத் தங்களது மனநிலை மாற்றத்தையும் புலப்படுத்தியுள்ளனர்.

சமாதானமுயற்சிகள் தொடர்பாகக் கடும்போக்கு நிலைப்பாடெடுத்த தீவிரஇனவாதக்கட்சிகளை அவர்கள் ஓரம் கட்டியுள்ளனர்.

சிங்கள மக்களின் இந்தமனநிலையை மகிந்த அரசு உணரவேண்டும். தற்போது, பேச்சுவார்த்தையில் அது கடைப்பிடித்துவரும் தீவிரப்போக்கை மகிந்த அரசு கைவிடவேண்டும். புலிகள் இயக்கத்துடன் உடன்பட்ட விடயங்களை உடனடியாக நடைமுறைப் படுத்த அது முன்வரவேண்டும்.

சமாதான முயற்சிகளை வலுப்படுத்தும்வகையில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வழங்கப்படும். வரலாற்றுவாய்ப்புகளை அவர்கள் சரியானமுறையில் பயன்படுத்துவதில்லை என்பதுதான் கடந்தகால வரலாறு.

தற்போது, மகிந்த ராஜபக்ச அரசுக்குக் கிடைத்துள்ள இந்த அரசியல்வாய்ப்பை அவர்கள் என்ன செய்யப்போகின்றார்கள்! என்று சமாதானத்தை விரும்பும் உலகநாடுகளும் அவதானித்தபடி உள்ளன. ●

# மனவலிமையால் இனவலிமை...




Gg jp...
,wej gpd Dk
capNuhbUgg thfspy
,tSk xUjjp

,ts
grpapd rpYitRkeJ
tpLjiyapd gazk
Nghdts

JgghffpfFoyfspwF
Kddhy
JzpNthL epkphejts
rhfjJ zpejtiu
rhfbff KbahnjdW
rjjpak tpsffpats

fhgguz ,yyhJ
rzil nrajhs
Nridfs ,yyhJ
gilnaLjjhs
FUjp rpejhJ
Nghuhbdhs

kffs rfjpapd
kfjJtk czhjjpdhs

fhejpia mwpahjts
fhejpa thjpfspwF
fhejpak fwgpjjhs

tpLjjiy kdqfspwF
ngUk

gyqfnsJTk
tpyqfpl KbahnjdW
tpsffk nfhLjjhs

tpopfs ,UeJk
,Ulby ,UfFk
vkffha
tpsffha
vupejhs

Gjjfqfs jpwffhj
jjJtqfs njhpahj
,ej
tpjjfpfFs
tpLjjiy klLNk
tpijeJ fplejJ
,ts
thrygb jhzlh
thotpwFs ,UeJ
Njrggzp Kbjj
jlk kwNthk

njatqfspwfha
tpujkpUjjy mwpNthk
tpujkpUeNj
njatkhd ij
,tsplNk mwpNthk.

czhTg grpahy
NjhwfbffgllJ
czTg grp

tapwwpdhy

tiuagglJ
xU tuyhW

kdtypikahy
tiuagglJ
,dtypik

,J
tpLjjiyg NghUfF
tsk nfhLfFk Gkp
cjpujjij euhfFk
capupdhy capuhfFk
clypid cukhfFk
khdk
thotjwnfijAk
jhdk nfhLfFk

ehqfs
Mapuk Mapuk
tuhfis cUffp
xU #upaidr
nraJnfhz bUffpNwhk
mJ cUgngwW
xspjUk tiu
cUfpfnfhzNl
,UgNghk.

,ilapy tenjtUk
,ilQry nfhLjjhy
vqfs kz zpy
vggb KbANkh
mggb mggb
midtUk Nghhpy.

செந்தோழன்

# புலிகள் வழங்கியுள்ள "வெளி"





**க.வே. பாலகுமாரன்**

என்னதான் நடக்கின்றது சிங்களதேச அரசியலில்? எல்லாமே வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பது போலவும் எல்லோரும் இயல்பு நிலைக்கு வந்துவிட்டது போலவும் ஒரு தோற் றப்பாடு காண்பிக்கப்படுகின்றது. இதற் கெல்லாம் அடிப்படையாக அமைவது அமைதி முயற்சிக்கு மகிந்தர் அத்திவாரக் கல்லை ஆழமாக இட்டிருப்பதுதான் என்று வேறுகூறப் படுகின்றது. எனவே மகிந்தரின் கரத்தைப் பலப்படுத்தப் போவதாகக் கூறிக்கொண்டு எல்லாக் கட்சிகளும் முண்டியடித்து முன்னேறு வதையும் நாம் காண்கின்றோம். சிறிலங்கா அரசியலில் ஆழும் தரப்போடு கட்சிகள் இணை வதும் பிரிவதும் பின் இணைவதும் என்பதும் வழமையென்றாலும் இம்முறை பிரதான எதிர்க் கட்சியிலிருந்து பெருந்தொகை மாறுதலும் கட்சி வேறுபாடில்லாமல் மட்டுமல்ல **கட்சிக் குள்ளும் வேறுபாடு இல்லாமலும்**, நான் முந்தி, நீ முந்தி என இணைய முற்படுவதும் சற்று வியப்பாகத்தான் உள்ளது. போகிற போக்கைப் பார்த்தால் எதிரி யார், நண்பன் யார் என்பது தெரியாத நிலையும் ஒரே கட்சி யின் பல்வேறு கிளைகளாகத் தேர்தலில் போட்டியிட்டு வென்ற பின் அனைவரும் ஒரே கட்சியில், ஆளும் கட்சியில் இணைவதும் எழுதப்படாத விதியாக மாறுகிற விசித்திரத்தையும் காணமுடி கின்றது. இன்னொரு வகையில் மேலோட்டமாக அவதானித்தால் சிங்களத்தில் என்றும் உருவாக முடியாதெனக் கூறப்பட்ட தேசிய அரசாங்கமொன்றே இயல்பாக உருவாகிற ஒரு பிறழ்நிலையை யும் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை படிப்படியாக உருவாக எது பிரதான காரணம்? மகிந்தரின் அமைதி முயற்சிதான் காரணம் என்பது உண்மையா? அவ்வாறா யின் இக்கட்சிகள் யாவும் இணைந்து ஒரு தீர்வை நோக்கி நகருமா? மகிந்தரின் அரசாங்கமே ஒரு சருவகட்சி மாநாடாக /அர சாங்கமாக மாறுமா? பொறுத் திருந்து பார்க்கவேண்டிய நிகழ்வு களிவை.

இத்தீவில் சனநாயக வழிமுறையில் போராடி உரிமை களைப் பெறமுடியாத நிலையில் சனநாயக சக்திகள் எனக்கூறப் படுவோரை **உண்மையிலே "சனநாயக மயப்படுத்த"** சனநாயகத்திற்கு விரோதமானது என இப்போலி சனநாயக நாயகர் களால் வருணிக்கப்படும் ஆயுதப் போராட்டப் பாதையில் பலகாலம் பயணித்த விடுதலைப்புலிகள் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22இல் போரை இடை நிறுத்தியபின் நாம் காணும் அரசியற்கோலங் களிவை. இங்கு எழும் பிரதான கேள்வி இதுதான். சனநாயக சக்திகள் எனக்கூறப்படும் **இக்கட்சிகள் உண்மையிலே சனநாயகப் படுத்தப்பட்டுள்ளனவா? அல்லது சனநாய கப் பங்கு தேக்கத்தை அடைந்து மேலும் நகரமுடியாத நிலையில் தேங்கிவிட்டனவா? தேங்கியதன் விளைவே இன்றைய அரசியற்கோலங்களா?** எனவே சிங்கள அரசியலின் இன்றைய செல்நெறி நிலையை இப் பின்னணியில் வைத்தே கவனித்தல் வேண்டும்.

இவ்விடத்தில்தான் புதியதொரு அற்புதமான பரிமானமொன்று புலப்படுகின்றது. தற்போது **இத்தீவின் அரசியல் அதிகாரத் தில் நிலவும் "வெளி" பற்றியதே இப்பரி மானம் .** 2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் புலிகளால் வழங்கப்பட்ட இவ் 'வெளி' பல்வேறு காலகட்டங்களாக விரிகின்றது. இவ் "வெளியின் முதலாவது கட்டம். 2003ஆம் ஆண்டு மார்ச் 18 - 21ஆம் நாட்களில் யப்பானில் நடைபெற்று, ஆறாம் சுற்றுப் பேச் சோடு முடிந்தது. புலிகள் மடங்கிவிட்டார்கள் என்கிற தவறான கணக்கில் அவசரப்பட்டு 2003 ஏப்பிரல் 14, 15 ஆம் திகதிகளில் அமெரிக்கா தலைமையில் வோசிங்டனில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சருவதேச மாநாட்டிற்கு ஏற்பாடு செய்ததோடு புலிகளை ஓரங்கட்டிப் புலிகளின் செலவில் தமது கணக்கில் வரவுவைக்க ரணில் முயன்ற போதே இம் முதற்கட்டம் முடிவிற்குவந்தது. இதன் பின்னரும் 'வெளி' நீடிக்கப்பட்டு இப்போது மகிந்தர் காலத்தில் 2ஆவது கட்ட மாக ஜெனிவாப் பேச்சோடு விரிகின்றது. இவ் 'வெளி' வழங்கப்பட்டதன் முழுப் பரிமானத்தை யும் சருவதேசம் புரிந்த நிலையில், சிங்களமோ இது பற்றி எவ்வித கவனமும் எடுக்காததோடு புலிகள் தமக்கு எவ்விதம் 'வெளி' வழங்க முடியும் என்கிற விசாரணையில் ஈடுபட்டுள்ளது. யப்பானிய தூதரின் காட்டமான அறிக்கைகள், (இரண்டு அறிக்கைகள் "இடித்துரைத்து" வெளிவந்துள்ளன) நோர்வே அமைதித் தூதர் சூல்கெய்மின் சற்றுச் சினமும், வெறுப்பும், சலிப்பும் கலந்த அவதானிப்புகள், ("இலங்கை யைவிட சூடானிலே அதிக கவனம் நோர்வே செலுத்தும்'' **"நோர்வே வெளியேறத் தீர்மானிக்குமேயானால் அதற்குப் பதிலாக அனுசரணைப் பொறுப்பினை ஏற்பதற்கு வேறு எந்த நாடுமே தயாரில்லை. நோர்வே எவ்வாறு இலங்கையில் நடத்தப்படு கின்றது என்பதை நேரடியாக மற்ற நாடுகள் கண்டிருக்கின்றன"**) கடுமை யானது என்பதில் ஐயமில்லை. எப்போதுமே "நா காத்து" வந்த சூல்கெம் தான் பட்ட "சொல்லிழுக்கு" காரணமாக இவ்வாறு பேசினா லும் இதற்கப்பாலும் பிரதான காரணமாக இருப்பது - புலிகள் தற்போது வழங்கியிருக்கும் "வெளி" பற்றிய ஆழமான புரிதலை அவர் கொண்டிருப்பதே. ஏனெனில் இவ் வெளியை வெறுமனே அரசியலுத்தியாக, இராசதந்திர செயற்பாடாக, காலக்கெடுவாகப் பார்க்க முடியாது. **இங்கே அரசியல், அறவியல், அறிவியல் எல்லாமே தொடர்புபடு கின்றன.** வரலாற்றில் காலமும், வெளியும் எவ்வளவு முக்கியம் வாய்ந்தவை என்பதற்குச் சீனாவின் இவை குறித்த சொற்களின் பிரயோ கத்தின் பிரபலம் புரியவைக்கும். அதுபோலவே அறிவியலிலும் காலம், வெளியென்பன எத்தகைய முதன்மை வகிக்கின்றன என்பதும் தெரிந்தவைதான். எனவேதான் அறிவால் வாழும் இவ்வுலகம் சிங்களத்தின் **இவ் 'வெளி' பற்றிய அறிதல் மறுப்புக்கண்டு பெரிதும் கலவரமடைகின்றது.**

புலிகளால் வழங்கப்பட்டிருக்கும் இவ் "வெளி" பல்லாயிரமாண்டுகாலப் பாரிய வரலாற் றுத் தவற்றினைச் சரிசெய்ய ஒரு ஆன்ம தேடலை ஆரம்பிக்கச் சிங்களத்தால் பயன் படுத்தப்பட வேண்டும். தாம் பௌத்தர், பௌத்த நெறிகளைப் பின்பற்றுவோர் என உலகிற்கு உரத்துக்கூறும் சிங்களவருக்கு இப்போது அதனை நிரூபிக்க வாய்ப்பு. அண்மையில் இலண்டனில் IISS எனப்படும் போர் நுண்திறன் கற்கைநெறி ஆய்வுமையத்தில் மங்கள பின் வருமாறு முழங்கினார். "நாங்கள் பௌத்தர்கள். 2500 வருடத்திற்கு மேலாகப் பௌத்த நெறி களைப் பின்பற்றுபவர்கள். வெறுப்பை வெறுப் பால் வெல்லமுடியாது. அதை அன்பாலே வெல்லமுடியுமென நம்புகின்றவர்கள்". மகிந்தர் சொல்கின்றார் "போரை ஒருபோதும் தீர்வாகப் பௌத்தர்கள் முன்வைக்கமாட்டார்கள்." புத்தர் மனவெளி பற்றி அதிகம் கூறியிருக்கின்றார். கி.மு 500களில் சீனாவில் வாழ்ந்த ஞானியான லாவோட்சு "தாவோயிசம்" எனப்படும் இயற்கை சார் வாழ்க்கை முறையைப் புகுத்தியவர். அவர் வெளியின் முக்கியம் பற்றிக் கூறுவது உலகப் புகழ்பெற்ற வார்த்தைகள்.

"ஆடுகால் முப்பதும்
சக்கரத்தின் மையத்தில்
இணைகின்றன.
ஆனால் சக்கரத்தின் பயன் அதன்
வெற்றுப் பகுதியால்
கிடைக்கின்றது.

பாண்டம் பாண்டமாக
களிமண் வனையப்படுகின்றது
ஆனால் பாண்டத்தின் பயன்
அதன் வெற்றுப் பகுதியால்
கிடைக்கின்றது.

வீட்டுச் சுவர்களில்
வாயிலுக்காகவும் சன்னலுக்காகவும்
வெற்று வெளியை விடுகின்றோம்.
ஆனால் இவை வெற்று வெளி
என்பதாலே பயன்படுகின்றன."

எனவே ஊரை, உலகை ஏன் தம்மையே ஏய்க்கப் புத்தரையே முன்னிறுத்திய சிங்கள பௌத்தர்களுக்கு இப்போது தமது பௌத்த நெறியைச் செயலில் காட்ட 'வெளி' வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சிங்கள தேசத் திற்கு இப் பரிமானத்தைப் புரிய முடியாமலிருக் கின்றது. அவர்கள் மனங்களிலே இதனைப் புரிவதற்கான "வெளி" கிடையாது. அவர்கள் மனவெளியெங்கும் காழ்ப்பும், வெறுப்பும், ஐய மும், அவநம்பிக்கையும் நிரம்பிக்கிடக்கின்றன. **இதுவே இன்றைய உலகின் துயரம்.** சிங்கள தேசம் தன்னைத்தானே இன்று சபித் துக்கொள்கின்றது. ஒரு வேளையிலே பல முகம் காட்டி அம்பலமாகின்றது. எனவே சிங்களதேசம் சனநாயகப்படவில்லை; தன்னை யுணரவில்லை; இருந்தும் புலிகள் "வெளியை" நீடிக்கின்றார்கள். யுத்தமென்பது வெளியற்று மூடப்பட்ட நிலை. அமைதியென்பது வெளியா கின்றது. ஏன் சிங்களத்தால் இதைப் புரிய முடியவில்லை? ஏனெனில் இற்றைவரை தமிழ் மக்களுக்குக் காலக்கெடு விதித்தவர்களுக்கு இப்போது தமக்கே காலவெல்லை விதிக்கப்படு வதை ஏற்கமுடியவில்லை.

1979ஆம் ஆண்டு யூலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை ஜே.ஆர் கொண்டுவந்தபோது இத்தீவின் எல்லா வெளிகளும் மூடப்பட்டன. தமிழ் மக்களின் மனவெளியெங்கும் "இண்டு இடுக்கில்லாமல்" அவலத்தீ பற்றியெரிந்தது. அவர்களின் நில வெளியிலிருந்து அவர்கள் தொடர்ந்து விரட்டப்பட்டார்கள். 1979யூலை 11ஆம் திகதி ஜே.ஆர் தமிழ்மக்கள் இருப்பிற்கே காலக்கெடு விதித்தார். பிரிகேடியர் வீரதுங்காவை அழைத்து 1979, 04 -31ஆம் திகதிக்கு முன் புலிகளை அழித்துவிடுமாறு ஆணையிட்டார். இன்பத்தை யும், செல்வரத்தினத்தையும் கொன்று அவர்கள் மண்டையோட்டினைச் சிதைத்து பண்ணைப் பாலத்தடியில் வீசியபோது தாயக வெளி யெங்கும் பிரபாகரன் அலைந்தார்; உலவினார்; கரந்துறைந்தார். இக்கட்டத்தில் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? என அவரிடமே வின வினோம். அவரோ வழமைபோல புன்சிரிப்புடன் மிகச் சாதாரணமாகக் கூறினார். விரல்விட்டு எண்ணக்கூடிய தனது இன்னுயிர்த் தோழர் களைக் கூட்டிக்கொண்டு வன்னித்தாயின் அடர்ந்த காட்டுவெளிதனிலே காப்புத்தேடி வந்திறங்கிய வரலாற்றினை அவர் விளக் கினார். சிங்களப் பயங்கரவாதத்திற்கு முகம் கொடுக்கும் பொறுப்பினைத் தனது மனவெளி யில் தானே ஏற்ற அவர் தானே தனது தோழ ருக்குப் பயிற்சி வழங்கலானார். **பயிற்சி ஆசிரியனாக அன்று அவர் தொடங்கிய பணி இன்று கிளிநொச்சியில் சருவதேச இராஜதந்திரிகளுக்குக் கற்கைநெறி பயிற்றுவிப்பதில் வந்து முடிந்துள்ளது.** இவ்வாறாக இந்தியப் படை இங்கு வரப் போவதாகக் கதைஅடிபட்ட காலகட்டத்தில் ஒரு வெண்சுருட்டைப் பற்றவைத்து அது முடி வதற்கு முன் தமிழரை அழிப்போம் என்ற வர்கள், ஒரு இரவு முடிவதற்குமுன் புலிகளை இல்லாது செய்வோம் என்ற இந்தியத் தளபதி கள், புலிகளை வன்னிப்பரப்பிலே கால் தரிக் கவே இடமில்லாமல் செய்வோம் என ஜெயசிக் குறு காலத்திலே கூறிய இராணுவ வல்லு நர்கள் எல்லோருமே தமிழ் மக்களுக்குக் காலக்கெடு விதித்தவர்கள்தான்.

இப்போது எல்லோருக்குமே "கெடு" விதிக்கும் நிலையில் புலிகள் உள்ளார்கள். இதுவே வரலாற்றன்னையின் தீர்ப்பு. எனவே இங்கே இந்த நூற்றாண்டின் மிகப் பாரிய கேள்வியெழுகின்றது. இவ் "வெளி" பயன் தருமா? அல்லது பாழாகுமா? தனது "காலத் துயர்" எனும் அற்புதமான கவிதை நூலில் கவிஞர் வில்வரத்தினம் எம் மக்களின் மன வெளியெங்கனும் எதிரொலிக்கும் நீதியின் குரலை ஒலிக்கின்றார்.

"கூவிக் கூவி பரவெளியெங்கும்
அலையும் அவன் குரல்
உனது கதிர்களில் ஊடறுத்து
அதிரவில்லையா?
**ஒளிக்கனி நாடி**
**சிறகடித்த பறவைகளின்**
**சங்கீதத்தை**
**எரிந்த சாம்பரின்றும் மீட்டுத் தா**
**இருள் படிந்த புதைவுகளின்றும்**
**புதிய குருதிப் பொலிவோடு**
இவள் பிள்ளைகளை எழுப்பித்தா
ஒளி நிறை வாழ்வின்
உன்னதத்தை எமக்குத்தா."



www.eelamview.com

# முஸ்லிம் படையணி உருவாக்கம்
# சிங்கள அரசின் சூழ்ச்சிப் பொறி

***தமிழர் தாயகத்தில் தமிழ் – முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டு வரும் இந்த உறவு வளர்ச்சியைச் சிங்கள அரசு விரும்பவில்லை. இந்த உறவு நிலையைச் சிதைத்து தமிழ் – முஸ்லிம் மக்களை மோதவிட்டு அரசியல் இலாபம் தேடவே அது முயற்சிக்கின்றது இந்தச் சதி நோக்கத்துடனேயே முஸ்லிம் படைப் பிரிவின் உருவாக்கத்திற்கு சிங்கள அரசு வித்திட்டுள்ளது.***

**- சு.ரவி -**






**சி**ங்களக் கட்டமைப்பின் ஒரு அங்கமாக முஸ்லிம் படையணி ஒன்றை சிங்கள அரசு உருவாக்கியுள்ளது. கிழக்கு மாகானத்தில் முஸ்லிம் மக்கள் வதியும் பகுதிகளில் அதற்கான ஆட்சேர்ப்பிலும் படை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாக்க இந்தப் படையணி பயன்படுத்தப்படும் என்று சிங்களத்தரப்பில் காரணங்கள் கூறப்படுகின்றன.

ஆனால், தமிழ் முஸ்லிம் மக்களின் நல்லுறவைச் சீர் குலைத்து அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடும் ஒரு இழி செயல் இதுவென்று தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இனத்துரோகி கருணாவின் வெளியேற்றத்தின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் தமிழ் – முஸ்லிம் மக்களின் உறவு வளர்ச்சியடைந்து வருகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மை.

புலிகள் இயக்கத்திற்கும் முஸ்லிம் சமூகப்பெரியார்களுக்குமிடையே கிராமங்கள் வாயிலாகச் சந்திப்புகள் நடந்து இரு தரப்பிற்குமிடையே ஒற்றுமையும், நம்பிக்கையும் படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டுவருகின்றன. இந்தச் சந்திப்புகள் வாயிலாக முஸ்லிம் மக்களின் காணி மற்றும் வாணிபப் பிணக்குகளுக்குத் தீர்வுகள் காணப்பட்டு வருகின்றது. முஸ்லிம் பெரியார்கள் கிளிநொச்சி வந்து புலிகளின் தலைமைகளையும் சந்தித்துக் கருத்துப் பரிமாற்றங்கள் செய்து திரும்புகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தின் பின்னர் அதன் வேட்பாளர் பட்டியலில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இட ஒதுக்கீடு செய்யும் அளவுக்கு தமிழ் – முஸ்லிம் உறவு நிலை மேம்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தில் தமிழ் – முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டு வரும் இந்த உறவு வளர்ச்சியைச் சிங்கள அரசு விரும்பவில்லை. இந்த உறவு நிலையைச் சிதைத்து தமிழ் – முஸ்லிம் மக்களை மோதவிட்டு அரசியல் இலாபம் தேடவே அது முயற்சிக்கின்றது இந்தச் சதி நோக்கத்துடனேயே முஸ்லிம் படைப் பிரிவின் உருவாக்கத்திற்கு சிங்கள அரசு வித்திட்டுள்ளது.

'சமாதானப் பேச்சுக்கள் மூலமே சிங்கள – தமிழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு' என்று ஜனாதிபதி ராஜபக்ச அடிக்கடி கூறுகின்றார். அமைதி வழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணத்தயார் என்று புலிகள் இயக்கமும் கூறிவருகின்றது. மகிந்த அரசுக்கும் – புலிகள் இயக்கத்திற்குமிடையே ஜெனிவாவில் பேச்சுவார்த்தைகளும் ஆரம்பமாகிவிட்டன.

இந் நிலையில் சிங்கள அரசுக்கு முஸ்லிம் படைப்பிரிவின் தேவை திடீரென ஏன் ஏற்பட்டுள்ளது?

இது சமாதானத்தை வலுப்படுத்தும் நோக்கம் கொண்ட ஒரு நடவடிக்கையல்ல. அதேவேளை, சிங்கள அரசு தனது படைக்காக ஆட்சேர்க்கும் ஒரு இயல்பான செயற்பாடுமல்ல. மாறாக தமிழ் – முஸ்லிம் மக்களிடையே இன மோதலை உருவாக்கி அதன் மூலம் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க ஆசைப்படும் சிங்கள அரசின் நாசகாரத்திட்டமே இதுவாகும்.

இந் நிலையில் தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி – புலிகள் இயக்கத்தின் நற்பெயரையும் மாசுபடுத்தினால் அது சிங்களப் பேரினவாதத்திற்கு அரசியல் இராணுவ நன்மைகளை வழங்கும் என்று தாயகக் கோட்பாடு செத்துவிடும் என்று சிங்கள இனவாதிகள் ஊகிக்கின்றனர்.

தமிழரின் தாயகக் கோட்பாட்டை அண்மையில் மகிந்த ராஜபக்ச அவர்கள் நிராகரித்து – வன்மையாகக் கருத்துக் கூறியிருந்தார். இதை பின்னர் ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் மறுத்திருந்தார் என்பது வேறுகதை. இது சிங்களஆட்சியாளர்கள் அனைவருமே செய்து வரும் ஒரு திருகுதாளம் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும்.

தாயகக் கோட்பாடு செல்லாக்காசானால், தமிழரின் தேசியம் என்பதும், பொருளற்றதாகிவிடும், தன்னாட்சி உரிமைக் கோரிக்கையும் வலுவிழந்துவிடும், ஒட்டு மொத்தத்தில் தமிழரின் விடுதலைப் போராட்டம் அரசியல் அர்த்தத்தில் கீர்த்தி இழந்துவிடும். புலிகளின் அரசியல் மதிப்பும் கேள்விக்கிடமாகிவிடும் என்று சிங்கள மகிந்த அரசு எண்ணுகின்றது.

தமிழ் – முஸ்லிம் மோதலைப் பெருமெடுப்பில் தூண்டித் தமிழர் தாயகத்தில், தமிழ்பேசும் மக்களிடையே இரத்தக் களரியை உண்டுபண்ண 'முஸ்லிம் படைப்பிரிவு' சிறந்த கருவியாக அமையும் என்று மகிந்த அரசு கருதுகின்றது.

இதேவேளை, இந்த முஸ்லிம் படைப்பிரிவின் உருவாக்கத்தின் மூலம் தமிழரின் அடிப்படை அரசியல் உரிமைகளைச் செல்லாக்காசாக்க முயலும் ஒரு சூழ்ச்சிகரத் திட்டத்தையும் மகிந்த அரசு மனதில் வைத்துள்ளது.

முஸ்லிம் படைப்பிரிவைப் பயன் படுத்தித் தமிழரையும், முஸ்லிம்களையும் மோதவிட்டு கிழக்கு மாகாணத்தை ஒரு கொலைக்களமாக மாற்றினால் தமிழரின் அரசு எண்ணுகின்றது.

சமாதானப் பேச்சுக்களை மகிந்த அரசு விரும்பவில்லை என்பது உண்மை. தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு காண்பது என்பதே சிங்கள – பௌத்த பேரினவாதிகளின் அரசியல் நிலைப்பாடு.

ஆனால் சமாதானத்தைக் குழப்பிப் போரைத் தொடங்கினால் சர்வதேச கோபத்திற்கு ஆளாக நேரிடம் என்பதால் சதித்தனமான நகர்வுகளைச் செய்து அமைதி முயற்சிகளுக்குச் சமாதி கட்ட சிங்கள அரசு முயல்கிறது.

சமாதான முயற்சிகளுக்குப் புதைகுழி அமைக்கும் புவியியற்களமாக கிழக்கு மாகாணத்தை சிங்கள அரசு தேர்தெடுத்துள்ளது. கொலைகளையும் – சதிகளையும் செய்துவிட்டு – அவற்றிலிருந்து தன்னை விடுவித்து மற்றவர்கள் மேல் பழி போட கிழக்கு மாகாணம் வாய்ப்பாக உள்ளது என்று சிங்கள அரசு கருதுகின்றது.

கிழக்கில்தான் ஒட்டுக் குழுக்களையும் பெருமெடுப்பில் அது களமிறக்கியுள்ளது. தமிழரிடையே பிரதேச வேறுபாட்டைத் தூண்டி ஒரு சகோதரச் சண்டையை ஆவலுடன் எதிர்பார்த்த சிங்கள அரசு அதில் தோல்வி கண்டுவிட்டது.

இந்நிலையில்தான் அடுத்த சூழ்ச்சித் திட்டமாக முஸ்லிம் படைப்பிரிவை அது உருவாக்கியுள்ளது.

ஏற்கனவே சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழருக்கு எதிரான தங்களது அரசியல் – இராணுவ நலன்களுக்காக முஸ்லிம் மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தப் பகடை அரசியலில் இப்போது மகிந்த ராஜபக்ச அவர்கள் முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் ஆபத்தின் உச்சிக்கே கொண்டு செல்ல முயல்கின்றார்.

முஸ்லிம் படையணி என்ற பெயரில் பின்னால் சிங்கள அரசு மறைத்து வைத்திருக்கும் சூழ்ச்சித் திட்டத்தை முஸ்லிம் அரசியல் கட்சிகளும் – முஸ்லிம் பெரியார்களும் உணர்ந்து அதை முளையிலேயே கிள்ளி எறிய முயல வேண்டும்.

இல்லையேல், அது பாரிய பின் விளைவுகளை உண்டுபண்ணி – சிங்கள அரசு விரும்புவது போல தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் நிரந்தரப் பகைமைக்குள் தள்ளிவிடும் ஆபத்தையும் கொண்டுள்ளது.

முஸ்லிம் மக்களைப் பொறுத்த வகையில் அவர்கள் மிக முக்கிய வரலாற்றுக் கடமை ஒன்றை எதிர்கொண்டபடி உள்ளனர். சிங்களப் பேரினவாதிகளின் சதிநடவடிக்கையை முறியடிக்க வேண்டிய பெரும் பணி அவர்கள் முன்னே உள்ளது. முஸ்லிம் படைப்பிரிவு என்ற சிங்களச் சதியை முறியடித்து தமிழ் – முஸ்லிம் சகவாழ்விற்கு முஸ்லிம் மக்கள் பாடுபட வேண்டுமென்று தமிழ் மக்கள் வேண்டுகின்றார்கள்.



www.eelamview.com

**போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று முன்னர் கூறிவந்த மகிந்த அரசு தனது கடும்போக்கு நிலைப்பாட்டை ஜெனீவாப் பேச்சில் மாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டது. அத்துடன் ஒப்பந்தச் சரத்துக்களில் ஒன்றான ஒட்டுக் குழுக்களின் ஆயுதக்களைவுக்கும் அது சம்மதித்தது. எனினும், இன்றுவரை அதை அமுல்படுத்த மகிந்த அரசு முன்வரவில்லை.**

**- எல்லாளன் -**





# போரை நோக்கியே சிங்கள அரசு காய்களை நகர்த்துகின்றது

ஜெனீவாவில் முதற்கட்டப் பேச்சு வார்த்தை முடிந்து இரண்டாம் கட்டத்திற்கும் தேதி குறிக்கப்பட்டுவிட்டது. முதற்கட்ட பேச்சின் பெறுபேறுகளை அமுல்படுத்துவதிலேயே இரண்டாம் கட்டப் பேச்சின் தலைவிதி தங்கியுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று முன்னர் கூறிவந்த மகிந்த அரசு தனது கடும்போக்கு நிலைப்பாட்டை ஜெனீவாப் பேச்சில் மாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டது. அத்துடன் ஒப்பந்தச் சரத்துக்களில் ஒன்றான ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவுக்கும் அது சம்மதித்தது. எனினும், இன்றுவரை அதை அமுற்படுத்த மகிந்த அரசு முன்வரவில்லை.

இதேசமயம், முதற்கட்டப் பேச்சின் முடிவுகள் தொடர்பாக கொழும்பு திரும்பியதும் அரச பேச்சுப் பிரதிநிதிகள் முரண்பாடான அறிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

ஒட்டுக்குழுக்களே அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளில் இல்லை என்று படைத் தளபதிகளும்- சில அரச அமைப்புக்களும் கூறிவருகின்றனர். ஒட்டுக்குழுக்கள் தங்களது கட்டுப்பாட்டில் இல்லை என்று வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்குக் கூறிவருகின்றனர்.

எனினும் ஒட்டுக்குழுக்கள் தொடர்பான அரச தரப்பின் கருத்துக்களை ஏற்க கண்காணிப்புக்குழு மறுத்துள்ளது. ஒட்டுக் குழுக்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இவற்றின் இருப்பை அமெரிக்க அரசும் அம்பலப் படுத்தியுள்ளதுடன் - அவை நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டும் என்று மகிந்த அரசுக்கு அழுத்தங்களும் கொடுத்துள்ளன.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவுக்கு சிங்கள அரசு சம்மதிக்காது இருப்பதற்கு அதன் போர் முனைப்புத்தான் அடிப்படைக் காரணியாக உள்ளது. புலிகளின் பகுதிக்குள் இவர்களை ஊடுருவ வைத்து போராளிகளையும் - தமிழீழத் தேச பக்தர்களையும் - தமிழ்ப் புத்திஜீவிகளையும் படுகொலை செய்வித்து சமாதான முயற்சிகளைக் குழப்பியடிக்க சிங்கள அரசு சூழ்ச்சிகள் செய்கின்றது.

இந்த ஒட்டுக்குழுக்கள் சமாதான காலத்திலேயே தமிழ்மக்களைப் பீதி நிறைந்த அன்றாட வாழ்க்கைக்குள் வைத்திருக்கின்றன. கண்மூடித்தனமாக தமிழ் மக்களைக் கொன்றும் ஆட்கடத்தல்களில் ஈடுபட்டும் தமிழ்ச் சமூகத்தினுள்ளே அச்ச விதைகளை விதைத்து வருகின்றன.

இன்று கிழக்குமாகாணத்தில் இவ்வித பயங்கரச் சூழலே நீடித்துவருகின்றது. ஒட்டுக்குழுக்களின் பயங்கரவாதச் செயல்களை அமைதிவழியில் எதிர்க்க முனையும் தமிழரின் பொது அமைப்புக்கள் மீது வன்முறைத் தாக்குதலை நடாத்தி மக்களை மிரட்டியும் வருகின்றன.

இவ்விதமான அட்டூழியங்கள் தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக நடந்து வரும் சூழலில் சிங்கள அரசுடன் மேசையில் அமர்ந்து பேசுவது என்பது புலிகள் இயக்கத்திற்கு இயலாத ஒன்றாகும். அத்துடன் சிங்கள அரசு அமைதி முயற்சிகளில் உண்மையாகவும் - நேர்மையுடனும் இல்லை என்பதையே இந்த இராணுவ அராஜகங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பேச்சுவார்த்தைகளுக்குச் சம்மதிப்பதும் - பேச்சு மேசையில் அமர்ந்து தமிழர் தரப்புடன் அரசியல் உடன்பாடுகள் செய்வதும் பின்னர் அவற்றை நடைமுறைப் படுத்தாது குழப்பியடிப்பதும் சிங்கள ஆட்சியாளர்களின் வரலாற்று வழமையாகும்.

பண்டா - செல்வா ஒப்பந்தத்திலிருந்து தற்போதைய ஜெனீவா பேச்சின் முதற்கட்டம் வரை சிங்கள அரசின் இந்த சந்தர்ப்பவாத நிலைப்பாட்டைக் காணலாம்.

இதேசமயம், பேச்சுக்கள் நடக்கும் அமைதிக் காலத்தில் தமிழர்களைப் படுகொலை செய்வதையும் சிங்கள அரசு ஒரு வரலாற்று வழமையாகவே தொடர்ந்து வருவதையும் திம்புப்பேச்சில் இருந்து இன்று வரை காணலாம்.

திம்புப்பேச்சு நடக்கும்போது வவுனியாவிலும் - திருகோணமலையிலும் அரச படைகளால் ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்தப் படுகொலையுடன் திம்புப் பேச்சைக் கைவிட்டு புலிகள் இயக்கம் போருக்குத் திரும்பியிருந்தது. தமிழ்மக்கள் அரச படைகளால் அநியாயமாகக் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும்போது சிங்கள அரசுடன் பேச்சு மேசையில் இருந்து கதைத்தபடி காலங்கழிக்கப் புலிகள் இயக்கம் விரும்ப மாட்டாது என்பதைச் சிங்கள அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

மகிந்த அரசின் சமாதான முயற்சிகளைத் தமிழ்மக்கள் சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றனர். இதை ஒரு அமைதிக்கான வாய்ப்பாகத் தமிழர் எண்ணவில்லை. போருக்குத் தன்னை தயார்ப்படுத்தும் சிங்கள அரசினது சதி அரசியலின் இடைக் காலமாகவே தமிழ்மக்கள் கருதுகின்றனர்.

சிங்கள தேசத்தைப் பொறுத்த வரையில் சமாதானப் பேச்சை உண்மையாகவும் நடாத்தவில்லை - பேச்சில் நேர்மையும் கடைப்பிடிக்கவில்லை. ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய கட்சிகள் பேச்சு வார்த்தைகளையே எதிர்க்கின்றனர். தமிழரின் அரசியல் அபிலாசைகளை அவர்கள் அடியோடு நிராகரிக்கின்றனர்.

சிங்கள ஊடகங்களும் சமாதான முயற்சிகளுக்கு சமாதிகட்டுவதில் பேரினவாத சிந்தனையுடன் செயற்படுகின்றன. தமிழரின் உரிமைக் கோரிக்கைகள் மீது காழ்ப்புணர்வுகளைக் கக்கி - தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதமாகவே அவை கருத்துக்களைப் பரப்பிவருகின்றன. சமாதான முயற்சிகளில் அக்கறை காட்டும் சர்வதேச நாடுகளையும் கண்டன விமர்சனங்கள் செய்வதிலேயே அவை காலம் கடத்துகின்றன.

**திம்புப்பேச்சு நடக்கும் போது வவுனியாவிலும் – திருகோணமலையிலும் அரச படைகளால் ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்தப் படுகொலையுடன் திம்புப் பேச்சைக் கைவிட்டு புலிகள் இயக்கம் போருக்குத் திரும்பியிருந்தது. தமிழ்மக்கள் அரச படைகளால் அநியாயமாக கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும்போது சிங்கள அரசுடன் பேச்சுமேசையில் இருந்து கதைத்தபடி காலங்கழிக்கப் புலிகள் இயக்கம் விரும்பமாட்டாது என்பதைச் சிங்கள அரசு புரிந்துகொள்ள வேண்டும்.**

சமாதான முயற்சிகளை முன் நகர்த்தத் தேவையான அரசியல் விடயங்களை சிங்கள அரசு நடைமுறைப்படுத்தத் தவறும்போது சில உலகநாடுகள் அதைச் சுட்டுக்காட்டி சிங்கள அரசை எச்சரிக்கை செய்கின்றன. இப்படியான சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு அரசுகளின் கருத்துக்களில் உள்ள நியாயத்தைச் சிங்கள அரசுக்கு இடித்துரைப்பதற்குப் பதிலாக இனவாதத்தின் ஊதுகுழல்களாக மாறி சிங்கள அரசின் கடும்போக்குகளை நியாயப்படுத்தி சமாதானத்திற்குச் சமாதிகட்ட முனைகின்றன.

தமிழர் தங்களது அரசியல் உரிமைகளைச் சிங்கள அரசுடன் பேசிப் பெறமுடியாது என்ற புலிகள் இயக்கத்தின் நீண்டகாலக் கருத்தையே சிங்கள அரசு தனது நடவடிக்கைகள் மூலம் மீண்டும் - மீண்டும் சரியென்று நிரூபித்து வருகின்றது.

தமிழரின் ஆயுத பலம்தான் அவர்களுக்கு அரசியல் விடுதலையைப் பெற்றுக் கொடுக்கக் கூடியது என்ற கருத்து இன்று தமிழ்மக்கள் மத்தியில் வலுவடைந்து விட்டது.

இருந்தபோதும் அமைதிவழியில் தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும் உலக சமூகத்தின் விருப்பத்திற்கு ஒரு வாய்ப்புக்கொடுக்கவே புலிகள் இந்த நிலையிலும் சமாதானப் பேச்சை குழப்பாது இருக்கின்றனர். இந்த சமாதான காலத்தைப் பயன்படுத்தித் தமிழரின் போராட்ட நியாயங்களை உலக அரங்கில் பரப்புரை செய்வதிலும் புலிகள் இயக்கம் ஈடுபட்டுள்ளது. உலகத்தை ஏமாற்றியபடி சிங்கள அரசு எவ்வாறு தமிழர்களை இனப்படுகொலை செய்துவருகின்றது? புலிகள் இயக்கத்தின் மீது சிங்கள அரசு சுமத்த முற்படும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களின் பின்னணியிலுள்ள இனவாத அரசியலையும் - புலிகள் இயக்கம் உலகநாடுகள் மத்தியில் தெளிவுபடுத்தி வருகின்றது. அதேசமயம், சிங்கள அரசு ஒருபெரும் போரைத் தொடுத்தால் அதை எதிர்கொள்ளும் வலிமையையும் புலிகள் இயக்கம் வளர்த்து வருகின்றது.

தமிழ்மக்களைப் பொறுத்த வகையில் போர் மூலமே விடுதலை பெற முடியும் என்ற யதார்த்தமே உள்ளது. அந்தப் பெரும்போர் எப்போது தொடங்கும் என்பது சிங்கள அரசின் கைகளிலேயே உள்ளது. சிங்கள அரசு போரைத் தொடங்கும்போது தமிழினம் அதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

தமிழினம் ஒட்டுமொத்தமாக போர்க் கோலம் பூணும்போது எமது விடுதலையும் விரைவுபெறும். சிங்கள அரசு தனது படைப் பலத்தை இந்த அமைதிக் காலத்தில் பெருக்கி வருகின்றது. பாகிஸ்தான் - சீனா - ஈரான் போன்ற நாடுகளிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றுவருகின்றது. தனது ஆட்பலத்தையும் உயர்த்திவருகின்றது. இதற்காகவே ஒட்டுக் குழுக்களையும் ஆயுதமயப்படுத்தி பாதுகாத்து வருகின்றது.

இதேபோன்று புலிகளின் ஆட்பலத்தையும் அதிகரிக்க வேண்டிய தேவை போராட்டத்திற்கு எழுந்துள்ளது. தமிழ் இளைஞர் - யுவதிகள் இந்த போராட்டத் தேவையை உணர்ந்து - செயற்பட வேண்டும். அரச படைகளாலும் ஒட்டுக்குழுக்களாலும் படுகொலை செய்யப்படுவதற்குப் பதிலாக எமது இளைஞர் - யுவதிகள் போராளிகளாக மாறி தங்களையும் பாதுகாத்து மக்களையும் பாதுகாக்க முற்படவேண்டும்.

**பலம்தான் உலக ஒழுங்கை நிர்ணயிக்கின்றது.**

**பலம்தான் தமிழரின் எதிர் காலத்தையும் நிர்ணயிக்க உள்ளது.**



www.eelamview.com

"rpwpyqfh gilj ;JiwapdJ fl Lg ghl Lg; gFjpfSf Fs ; ve jj ; Jiz ,uhZtf ; FOTk; nraw gltpy iy> rpwpyq fh ,uhZtNkh muNrh mth fSld ; ve jj ; njhlh igAk ; nfhz bUf f tpy iy" vd jpUk gj ;jpUk gf $wp cyif Vkhw w Kad Wnfhz bUe jrpwpyq fhmuRf F n[dPthtpy ; gyj j mbnahd W tpOe jpUf fpd wJ.

rpwpyqfh muR $Wtjpy ; cz ik ,Uf FNkh vd rQ ryg gl l rpyUf Ff $l me j re Njfk ;mb NahL mw WgNghAs sJ. Jiz ,uhZtf ;FOf fs ; njhlh ghd tYhd Mjhuq fSld $ba mk gyg ; gLj jyhy ; rpwpyqfh muR rh tNjr r%fj jpd Kd ; mkkzg gl Lg ;Ngha epwfpwJ. rpwpyq fhtpy ;cs s murpay thjpfs ;mj jid NgUk ;mth fspd ;Nghpd thj Clfq fSk ; Nrh eJepd W> Jiz ,uhZtf ; FOf fs ; ,y yNt ,y iy> muRf Fk ; mth fSf Fk; ve jj ;njhlh GfSk ; ,y iy vd vg gb cuf ff ;fj jp dhYk ;mjid ,d W vtUk ;ek gj ;jahuf ,y iy.

Jizg gilf ; FOf fis rpwpyq fh muR ghJfhj ;J itj ;Jf ;nfhz L mtw iwg ;gad gLj jp tUfpd wik ntl lntspr rkhfpAk ;$l> xU Kul L Kl lhSf Fhpa tPkGld ;rpwpyqfh muR NgrptUt Jld ; Jizg gilfspd ; nraw ghLfisAk ; mjpfhpj;Js sJ. rh tNjr r%fj ijAk $lGwe js spj ; Jizg gilfspy ;rpwpyqfh muR Vd ; mf fiw fhl Lfpd wJ vd w tpdh vOtJ ,ay Ng.

,e j xl Lg gilfisf ; nfhz L gilj ;Jiw hPjpahd "rhjidfs ;" vjidAk nra ;Jtpl KbahJ

## சுடரவன்

tUfpd w Mjutpid kOq fbf f KaYk ;eltbf if fshfTk ; ,it mike jpUf fpd wd. mz ikapy ; %J}hggFjpapy; jkpo; ,isQh ;Rlg gl l rk gtk > kl lf fsg GggFjpapy jw NghJ mjpfhpj ;JtUk nfhs ; isr ;rk gtq fs > nfhiyfs ;vd gtw iw ehk ;,e j mbg gilapy ;itj ;Nj Nehf fNtz Lk ;

NkYk > xl Lg gilfshy ;Nkw nfhs sg gLfpd w Ml flj jy ;eltbf iffs ;jk Kld ;,ize ;J nraw gl Ntz Lk vd w kpul ly fs ;vd gdTk > tpLjiyg ; Gypfs ;Nkw nfhs fpd w nray fshf ntspAyfpw Ff ; fhl Ltjpy ; rpwpyqfh muR> mur Clfq fisAk ; Nghpdthj Clfq fisAk ;jpl lkpl l hPjpapy;gad gLj jptUfpd wJ. ,e eltbf iffs ;%yk ;rh tNjr r%fj jpd Kd ;tpLjiyg ;Gypfisf ;Fw wthspfshf fhl Ltjw F Kaw rpf fg gLfpd wJ.

jptuTk ; n[dpthg ; Ngr Rthh j ij eilngw w nghOJ tpLjiyg ; Gypfspd ; jsgjpfisf ; nfhy ; tjw F Nkw nfhs sg gl l Kaw rpfs > mjd gpd; tTzjPtpy ;,U Nghuhspfs ;tPur rhtile j epfo ;T

rpwpyqfh muR KidfpwJ.

,it ,t thW eilngw Wf nfhz bUf fxl Lg; gilfspd ;nraw ghl L ePl rp fly ;fle ;Jk ;nry ; fpd wJ. rh tNjr r%fj jpd ghh itapy ;cah eJ tUk ; tpLjiyg ;Gypfs ;kPjhd ed kjpg ig jkpoPo tpLjiy Nghuhl l epahaj ;Jtj ijr ;rpijj ;Jtpl rpwpyq fh muR jPtpukhfr ; nraw gl LtUfpd wJ. ,jndhU ntspg ghlhf "Gypfs ;ntspehLfspy ;cs s Gyk ; ngah ej kf fsplkpUe j gaKWj jpg; gzk ; gwpf; fpd whfs ;" vd w fij jPtpukhfg ;gug gg gl LtU fpd wJ. ,e eltbf ifapy ;<.vd ;b.vy ;vt ;xl Lf ; FOitrpwpyq fh muR gue jstpy ;gad gLj ;JfpwJ. mj ;Jld ;mq F nraw gl LtUk ;NjrtpNuhj Clfq ; fisAk ;,ijj jihf ,e eltbf if Kd ndLf fg ; gLfpwJ.. ,J njhlh gpy; kdpj chpikf ; FOf fs ; Kd dpiyapy ; rhl rpak ; mspf Fk ; Gyk ngah ej eghfshf <.vd ;b.vy ;vt ; xl Lf FOtpdh ; nraw ; gl likiaAk ;mwpaKbfpd wJ.

,e jg ;gpd dzpapy > tpLjiyg ;Gypfs ;Gyk ngah ; kf fsplkpUe ;J kpul ;bg ;gzk ;Nrfhpf fpd wdh ;vd mnkhpf fhitj ; jiyikafkhff nfhz L ,aq Fk;

# துணைப்படைக் குழுக்கள்... எதனை நோக்கி

vd gjid rpwpyq fh muR epr rak ; czh eNjapUf Fk; mjpYk ;md W mth fs ; nghpjha ; ek gpapUe fUzh xl Lf FOthy ; gilapdhpd ; fhy ; fSf F eLtpy ;,Ue ;Jnfhz L kl LNk Fiuf f KbAk ; vd w ajhh j jKk ; ,d W muRf F ciwj ;NjapUf Fk; ,t thW gilj ;Jiwg ; ngWkhdq fs ; mww ,j ;Jizg gilf ; FOf fisg ; ghJfhg gjw fhf rh tNjr r%fj ijAk ; Gwe js s rpwpyq fh thpe ;Jfl bf nfhz L epwfpd wJ vd why> mjw F NtWgy fhuzq fs ;,Uf fNt nra ;Ak;

,e j tifapy ;Nehf Fk NghJ mz ; ikf fhykhf mjpfhpj ;Js s Ml flj jy ; nraw ghLfs ; ftdj jpy ; nfhs s Ntz baitahf cs sd. ,t thwhd flj jy ;eltbf iffs ;,e jpa ,uhZ





tk ;,yq ifapy ;,Ue j fhyj jpy ;xl Lg gilapd ; Nkw nfhz l Ml gpbgG eltbf iffis Qhgf %l Lfpd wd. md iwf F Mapuf fzf fhd ,isQh fis> khzth fis gyte jkhfg ;gpbj ;Jg ;gapwrpa spj ;J xU gilg ghpit cUthf fpaijg ; Nghd W ,d W rpwpyqfh ,uhZtj jpd ; JizAld ; ,t ; xl Lg gilfs ;nraw gl Kidthfj ;njhpfpd wJ.

,g gilNghd w vg gilAk ;Gypgg gilf F Kd ; mjpfNeuk ;epd W gpbf fhJ vd gJ gl twpT. vdpDk ; ,t thwhdnjhU Nkhjy ; Vw gLkhdhy ; mg ghtp ,isQh fs ; ,t ; xl Lf FOf fshy ; gypf flhf ; fshf fg gLth ;,t thwhd#oy >jdf F gyKid,yh gj ijg ;ngw Wj jUk ;vd rpwpyq fh muR ek GfpwJ.

NkYk ;,d W<.gp.b.gp> Gnshl > <.gp.Mh vy ;vt ; (tujh mzp)> Nghd w Jizg gilf FOf fs murpaw; fl rpfs ;vd w ngahpy nraw gLtJ Nghd W fUzh FOitAk ;VNjh xU ngahpy ;murpay ;fl rpahf fp muqNfw w muR Kidfpd wJ. mjw fhd Ntiyfs ; Kk Kukhf ,k ngw W tUfpd wd. ,jndhU gFjpahf kl lf fsg G efhpd jkag gFjpapy; ,t xl Lg gilf FOitepiyg gLj jpAs s rpwpyq fh muR> mYtyfq fisAk ;mikj ;Jf nfhLj ;J ghJfhg igAk ;toq fptU fpd wJ.

,t ; xl Lg gilfis kw Wk; xU topapYk ; rpwpyqfh muR nraw gLj jptUfpwJ. jkpo > K] ypk; kf fSf F ,ilapyhd ey ;Ywit rpijf Fk ; Kaw rpfs ;ed Fjpl lkpl L Kd ndLf fg gLfpd wd. ,e j nraw ghLfspy ; jkpo xl Lf FOf fs ;kl Lkd wp K] ypk; xl Lf FOf fSk ; <LgLj jg gLfpd wd. mz ikapy ;,J njhlh ghfr ;nra jpfs ;ntspahd NghJ K] ypk;murpay thjpfs ;rpyh ;mtrumtrukhf ,jid kWj ;J mwpf iffs ;tpl ldh ; ,Ue ;Jk ;mz ik apy;jpUkiyapy ;w Clftpayhsh ;re jpg; gpy;,U K] ypk; jfty ;gilapdh ;ntspapl l jfty fs ;cz ik epiyia ed F njspTgLj jp As sd. ,t thwhd xl Lf FOf fs jpUkiyapy ;kl L kd wp kl lf fsg G> mk ghiw> Gj jsk ; Nghd w gFjpfspYk ;nraw gl LtUfpd wd. jw NghJ Gj jsk ; gFjpapy ; mjpfhpj ;Js s Gnshl ; xl Lf FOtpd ; gpurd dKk ; ,Nj Nehf fk ;nfhz lNj.

nfhs isfs > Ml flj jy > gLnfhiyfs > vd g tw wpd ;%yk ;jkpo ;-K] ypk; cwT Nkk ghl il rpijf f Kaw tJld ;rh tNjr kl lj jpy ;GypfSf F mjpfhpj ;J

jw NghJ jPtpukhapUf Fk ;xl Lf FOf fspd ;ntspg gilahd gpurd dk ;vd gd tpLjiyg ;Gypfis type ;J NghUf F ,Of fpd wje jpNuhghaq fNs. ,jd ; %yk ;Nghhggopia tpLjiyg ;Gypfs ;Nky ;Rkj jptpl

கருணாகுழு ஈ.பி.டி.பி, புளொட் போன்றவை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே சிறிலங்கா அரசின் ஒட்டுப்படைகளாகச் செயற்பட்டுவருகின்றன.

**அமெரிக்க இராஜாங்க திணைக்களம்.**

வெலிக்கந்த இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள ஒட்டுக்குழுக்களின் முகாம் தொடர்பாக பொதுமக்கள் தம்மிடம் முறைப்பாடு செய்ததாக 231ஆம் பிறிகேட்டைச் சேர்ந்த பிரிகேடியர் HMHA ஹேரத் ஒத்துக்கொண்டார்

**சண்டேலீடர்.**

கருணாகுழுவைச் சேர்ந்த மங்களம் என்பவரை அமைச்சர் மைதிரிபால சிறிசேன சந்தித்து சனாதிபதித் தேர்தல் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

**சிங்கள நாளிதழ் இறுதின.**

அம்பாறைப் பகுதியில் துணைப்படைகளின் முகாம் ஒன்று படையினரின் முகாமுக்கு அண்மையில் அமைக்கப் பட்டுள்ளது.

**அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாரத்ன.**

அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் துணை ஆயுதக் குழுக்கள் செயற்படுவது உண்மை. அதை நாங்கள் நேரில் கண்டுள்ளோம்.

**போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர்- கெலன் ஒலப்ஸ் டோட்ரயர்.**

அரசாங்கத்தின் ஆதரவுடன் துணைக்குழுக்கள் இயங்குகின்றன.

**ஒடுக்கு முறைகளுக்கெதிரான சர்வதேச அமைப்பின் தலைவர் - நிமய்கா பெர்னாண்டோ.**

kdpj chpikfs ;mikg Gxd Wmz ikapy ;mwpf if tpl bUe jJ.

,e j mwpf iff Fg ;Gyk ngah ;ehLfspy ;thOk ; jkpo kf fsplk ;,Ue ;Jte j vjph tpidahy > mUz L Nghd mt ;kdpj chpik mikg Gjd fUj jpy ;,Ue ;J gpd thq fp tpLjiyg ;GypfspwF kf fs ;ngUkstpy ; tpUk gpNa gzk ;nfhLf fpd wdh vd ;Wkjpd egh fs ; rpyNu Nkw nrhd dthW ele ;Jnfhs fpd wdh vd ;Wk; kPs mwpf if tpl Ls sJ.

,t thW ntspehLfspy ;tpLjiyg ;GypfSf F vjpuhfTk > jkpoPo tpLjiyg ;Nghuhl lj jpwF vjpuhf Tk ; Nkw nfhs sg gLk ;nraw ghLfis me j me j ehL by ;cs s rpwpyq fhj ;J}jufq fs ; xUq fpizj ;J nraw gLj jptUfpd wd. mz ikapy ; n[dPthtpy ; Ngr Rthh j ijfs ;ele ;Jnfhz bUe jnghOJ tpL jiyg ;GypfSf F vjpuhfTk > Ngr Rthh j ijfSf F vjpuhfTk > xU Mh gghl lk ; elj jg gl lJ. ,t ; Mhgghl lj jpy ;fye ;Jnfhz lth fs ; gyINuhg gpa ehLfspy ;,Ue ;J rpwpyq fhj ;J}jufq fspd ;Vwghl by ; mq F mDg gpit fg gl bUe jdh ; rpq fsg Nghpd thjpfSk ;xl Lg gilapdUk ;,ize Nj gpRgpRj ;Jg ; Nghd ,t thh gghl lj ij elj jpdh ; Mh gghl lf ; fhuhfspy ;Kf fpakhdtuhff fUjg gl l<.vd ;b.vy ;vt ; xl Lf FOitr ;Nrh ej xUth ;Rtp] ;nghyprhuhy ; ifJ nra ag gl likAk ;> mth ;nfhiy> Ml flj jy ;> Nghijg nghUs ;th j jfk ;> Nghd w Fw wq fSf fhfj ; Njlg gl L te jth ;vd gJk ;gpd dh ;njhpate jJ. 

cs ehl bYk ;> rh tNjr hPjpapYk ;tpLjiyg ;Gyp fSf F> mth fsJ Nghuhl l ;,yl rpaj jpwF ngUfp tUk ;Nguhjuitf ;fz L rpwpyqfh ,g NghJ fyq fpg; NghAs sJ. xl Lg gilfisg ; gad gLj jp ,e j epiyiar ;rPhFiyf f rpwpyq fh muR jPtpu Kaw rp fis Nkw nfhz LtUfpd wJ. jd ;dhy ;Nghhf fsj ;jpy ; ntd W jPh f f KbahJ vd gijj ;njhpe ;J nfhz l rpwpyq fh muR ,t thwhd mjpfhuj jpd ; tp#tjpfis ,ilapl lhy gilNghl by ; tpLjiyg ;Gypfis Mh ; kh ;j jpyhd gtpDkk ; KbAk; vd w ek gpf if ntspapl lgLj jpd wJ.

rpwpyqfhg ;Nghpdthjpfs ;jkpoh ;jug gpdhfpdjpuhf ;jhk ;gwpj j Fopfspy ; > gpd dpa tiyfspy ;jhNk tPo j jg ; gl Lg NghdNj tuyhW. mt thNw ,d W iwaxl Lg; gil tptfhuKk ; rpwpyqfh Nghpdthjk ;mjd ;mopit Nehf fp mjptpiuthf....






www.eelamview.com

இலங்கைத்தீவையே ஒருகணம் உலுக்கிவிட்ட 1983 யூலை இனப்படுகொலையை அடுத்துவந்த நாட்களில் அப்போதைய அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக இருந்த காமினி திசநாயக்கா தமிழ்மக்களை நோக்கி இப்படிக் கூறினார். “இந்தக் கலவரத்தில் தமிழர்களைக் கொண்றவர்கள் யாரென்றால் சிங்களவர்கள். இந்தக் கலவரத்தில் தமிழர்களைக் காப்பாற்றியவர்கள் யாரென்றால் அதுவும் சிங்களவர்கள். இதிலிருந்து தமிழர்கள் ஒன்றை விளங்கிக்கொள்ளலாம். தமிழர்களை அழிக்கவோ, காப்பாற்றவோ சிங்களவர்களால்தான் முடியும்” என்று. இப்படி அபத்தமான தர்க்கத்தை முன்வைப்பதாகத்தான் சிங்களத் தலைவர்கள் தங்கள் புத்திஜீவித்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். இதனால் இலங்கைத்தீவு கண்ட விளைவு என்ன?

முரண்பட்ட தரப்புகளுக்கு செல்வநாயகத்தைத் தலைமைத்துவமாகக் கொண்டு சாத்வீக வழியில் போராட்டங்களை நடத்தி உரிமையைப் பெறமுயன்ற காலமாக இருந்தது. 1976 தொடக்கம் 1983 கறுப்பு யூலை படுகொலைவரை அமிர்தலிங்கம் தமிழ் இளைஞர் ஆயுதக்குழுக்களை



Who attacked you? Sinhalese.
Who protected you? Sinhalese.
It is we who can attack and protect you!
காமினி திசநாயக்கா

வழிகள் எண்பத்தி மூன்று யூலையுடன் அடைபட்டபோது யுத்தத்திற்கான அரசியற் புறநிலை பிறந்தது என்பதை விளங்கிக்கொள்ள முடியும். 1983 கலவரத்திற்கு முன் பின்னாகச் சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழர்களை நோக்கி முன்வைத்த கோஷங்கள் யுத்தத்தைத் தவிர எல்லாப் பாதைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தன.

தமிழர்களை அழிக்கவோ, காப்பாற்றவோ சிங்களவர்களால்தான் முடியும் என்று அபத்தமான தர்க்கத்தை காமினி திஸநாயக்க முன்வைத்து ஏறத்தாழ இரு தசாப்தங்களின் பின் சந்திரிகா அரசாங்கத்தால் இறுதி வெற்றி என்று நம்பிக்கையூட்டப்பட்டு ஈவிரக்கமற்று தமிழர்கள் மீது மாறாகக் கட்டுநாயக்கா மீதான புலிகளின் தாக்குதலின்போது சிங்கள அப்பாவிப் பொதுமகனில் ஒருவர்தானும் கொல்லப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக போராளிகள் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்துக் காத்திருந்தார்கள் என்பதைவிட, தமது உயிரை மாய்த்துச் செய்யவந்த வெற்றியையே பணயம் வைத்து காத்திருந்தார்கள் என்று சொல்வதுதான் சரியானது.

இங்கேதான் கொழும்பை உலுக்கிய கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான புலிகளின் தாக்குதலை அடுத்து இப்படிச் சொல்லத்தோன்றுகிறது. “சிங்கள மக்களே உங்களை அழிக்கப் புலிகளைத் தூண்டுபவர்கள் யார்? சிங்களத் தலைவர்கள். அதிலிருந்து உங்களைக் காப்பாற்ற அவர்களால் முடிகிறதா? இல்லை, அப்பாவிப் பொதுமக்கள் யுத்தத்தில்


# சமாதான மேசையில் தமிழர் தரப்பை யுத்தத்திற்கு அழைக்கின்றது சிங்கள அரசு

கு.பிரபுத்திரன்

யுத்ததில் மேற்கொண்டு முன்னேற வழியில்லாதபோது சமாதானத் திற்கான சூழல் பிறக்கிறது, என்பது ஒரு விஞ்ஞானபூர்வ கருதுகோள். எனவே முரண்பட்ட தரப்புக்களைச் சமாதானத்திற்குக் கொண்டுவர விரும்பின் தரப்புக்களை மேற்கொண்டு யுத்தத்தில் முன்னேற வழியில்லாதவாறு தடைகளைப் போடுவது, அழுத்தத்தை பிரயோகிப்பது, அவர்களின் வள மார்க்கங்களை (LOGISTIC SUPPORT) முடக்குவது என பல வழிமுறைகளும் கையாளப்பட்டுச் சர்வதேச சமூகத்தால் ஒரு செயற்கையான புறநிலை படைக்கப்படுவது சர்வதேச சமாதான அரசியலில் வழமை.

தரப்புகள் யுத்தத்தில் முன்னேற பாதையில்லாதபோது சமாதானத்திற்கான புறநிலை பிறக்கிறது. இந்த விஞ்ஞானபூர்வ முடிவை நாங்கள் மறுதலையாகவும் பிரயோகிக்கலாம். பிரயோகிக்கவும் வேண்டும். அப்படிப் பிரயோகித்தால் அது இப்படிவரும். தரப்புக்கள் சமாதானத்தில் முன்னேறப் பாதையில்லாது போனால் அது யுத்தத்திற்கான புறநிலையைப் பிறப்பிக்கும் என்று. இத்தகைய ஒரு தர்க்கத்தின் அடிப்படையில் நின்று இன முரண்பாட்டை ஒரு வெட்டு முகமாக நோக்கலாம்.

அதற்கு இத்தீவில் தமிழர்கள் தங்கள் உரிமைக்கோரிக்கைகளை முன்வைத்த அரசியல் போக்கை நாம் கவனிக்க வேண்டும். மு.திருநாவுக்கரசு தனது சமஸ்டியா தனிநாடா என்கின்ற தனது நூலில் இப்படி எழுதுகின்றார் 1936 தொடக்கம் 1956 வரை பொன்னம்பலத்தைத் தலைமைத்துவமாகக் கொண்ட தமிழின அரசியலில் சிறிலங்கா அரசாங்கத்தை நோக்கி உரிமைகளைக் கேட்டு விண்ணப் பங்களை முன்வைத்த, விவாதங்களை நடத்திய காலமாகும். பின்னர் 1956 தொடக்கம் 1976வரை



1974 சனவரியில் இடம்பெற்ற படுகொலை ஒன்றில் தமிழ் இளைஞர்களின் சடலங்கள்

அரசாங்கத்திற்கான அச்சுறுத்தலாகக் காட்டி ஜனநாயக வழியில் உரிமைகளைப் பெறமுனைந்த காலமாக இருந்தது. 1983இல் இருந்து இன்றுவரை பிரபாகரனைத் தலைமைத்துவமாக ஏற்று ஆயுதப் போராட்டத்தின் மூலம் உரிமையைப் பெறமுனையும் காலமாக இருக்கிறது.

மேற்சொன்ன அரசியல் போக்கின்படி அவதானித்தால் தமிழர்கள் சமாதானத்தில் மேற்கொண்டு முன்னேறுவதற்கான ஏவிவிடப்பட்ட யுத்தம் இறுதியில் சந்தித்த தோல்வியும் அதனால் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியும் இறுதியாகக் கட்டுநாயக்க விமானத்தளம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலுமாக அரசாங்கத்திற்கு யுத்தத்தில் மேற்கொண்டு முன்னேற முடியாத புறநிலையை உருவாக்கியது என்பது வெளிப்படை.

ஆனால், காமினியின் தர்க்கத்தின் பண்புக்கு நேர் எதிர்

பலியாகிவிடக்கூடாதென்ற புலிகளின் ஒழுக்கப் பண்பினால்தான் முடிகிறது. எனவே சிங்களத் தலைவர்களால் சிங்கள மக்களுக்கு அழிவைப் பெற்றுத்தர முடியுமே தவிர விமோஷனத்தை அல்ல.

காமினியின் அபத்தமான தர்க்கத்தோடு தமிழர்கள் எல்லாத் தெரிவையும் கைவிட்டு மனப்பூர்வமாக முழு அளவிலான யுத்தத்திற்குப் போனார்கள் என்றால் கட்டுநாயக்காத் தாக்குதலின் பின் சிங்கள மக்கள் மனப்பூர்வமாகச் சமாதானத்திற்கு வந்தார்கள்.

ஆனால் இப்போது சமாதானத்தில் தமிழர்கள் முன்னேறக்கூடிய எல்லாப் பாதைகளையும் அடைத்ததைவிட சிங்களத் தலைவர்கள் சமாதான அரங்கில் செய்தது எதுவும் இல்லை. சமாதானத்தில் மேற்கொண்டு முன்னேற புலிகளுக்குப் பாதை இருக்கிறதா என்ற கேள்வியைத் தமிழர்களுக்குள் சிங்களத் தலைவர்கள் எழுப்பிவிட்டார்கள்.

இப்போது இங்கே நாம் மிகப் பெரிய கேள்வியோடு மதிப்பாய்வு செய்யலாம். நடக்கும் சமாதானப் பேச்சில் சிங்களத் தலைவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் மேசையில் புலிகளுக்கு எதை விட்டுவைத்திருக்கிறார்கள் என்பதையும்.

பிரிவினையைப் பற்றிப் புலிகள் பேசக்கூடாது. இடைக்கால அதிகாரசபை பற்றி?... உம்கூம். சரி சுனாமிக்கான பொதுக்கட்டமைப்புப் பற்றி...?. ம்ம். பிடிக்கவில்லை வேண்டாம். அப்போ... யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுற்படுத்துவது பற்றியாவது...? உம்கூம்... வேண்டவே வேண்டாம்

அப்போ, சிங்களத் தலைவர்களுக்குப் புலிகளிடம் இருந்து என்ன வேண்டுமாம். ■


www.eelamview.com

''சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது போராட்ட இலட்சியம்.''

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -

# சிறுவர் பராமரிப்பும் தமிழீழ நிர்வாகமும்

- கலாநிதி க.சோமாஸ்கந்தன் -



தனது பகுதியில் வாழும் சிறியோர், முதியோர் நலனில் தமிழீழ நிர்வாகம் அதியுயர் கவனஞ்செலுத்துகிறது. தெருச் சிறுவர்களையும், போக்கிடமற்ற முதியோர்களையும் தமிழீழ மண்ணில் காண முடியாது. இவர்களுடைய பராமரிப்புக்கென பெரும் பொருட்செலவில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சிறியோருக்கும், முதியோருக்கும் தனித்தனி இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சிறுவர்களுக்குக் கல்வி வசதி செய்துதரப் பட்டுள்ளது. குறிப்பாக பயனுள்ள தொழிற கல்வி வழங்கப் படுகிறது. மாதாந்த ஊதியம் பெறும் பராமரிப்பு ஊழியர்கள் சிறியோர், முதியோர் இல்லங்களில் நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்கு உளவியல் தாக்கம் அல்லது அழுத்தம் ஏற்படக்கூடாது என்பதில் கவனம் எடுக்கப்படுகிறது. சிறிலங்கா நாட்டில் ஈழத்திற்கு நிகரான கவனம் எடுக்கப்படுவதைக் காண்பது அரிது. அங்கு சிறுவர்நலன் சார்ந்த செயற்பாடுகள் வளர்ச்சிகுன்றிய நிலையில் உள்ளன.

வடக்கு கிழக்கிலுள்ள அரசகட்டுப் பாட்டுப் பகுதிகளில் வாழும் சிறுவர் நலனில் தாம் தீவிர அக்கறை எடுப்பதாக சிறிலங்கா அரசு கூறிவந்தாலும் உண்மை வித்தியாசமாக இருக்கிறது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளின் சிறுவர் நலன்காக்கும் மாவட்ட அலுவலகங்களின் எண்ணிக்கை எழுபத்தியெட்டு (78). ஆனால் இவ்வலுவலகங்களில் பணியாற்றும் சிறுவர் நலன்பேணும் பயிற்றப்பட்ட அதிகாரிகள் எண்ணிக்கை பதினாறு (16) மாத்திரமே. அத்தோடு இப் பணிமனைகளுக்கு அரசு ஒதுக்கியுள்ள நிதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. போதாமையை ஈடுசெய்வதற்காக சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெப் போன்ற நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவியை நம்பியிருக்க வேண்டியுள்ளது. தேசிய சிறுவர் ஆண்டாக 2006ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இப்பிரகடனம் சர்வதேசத்திற்கும் செல்லுபடியானது. புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பகுதியில் இப்பிரகடனம் கருத்தில் எடுக்கப் பட்டுள்ளது. அண்மையில் திருகோணமலை நகரில் நடந்த சிறுவர்நலன் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்ட சிறிலங்கா சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதி றிச்சார்ட் மவ்வர் (RICHARD MAWER, COUNTRY PROG -RAMME DIRECTOR, SAVE THE CHILDREN FUND) அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிலவும் சிறுவர் நலன்பேணும் குறைபாடு களைச் சுட்டிக்காட்டினார்.

போர்நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்ட பின்பு (2002) ஈழத்தமிழர்களின் போர்வடுக்கள் மறையவில்லை. உளவியல் தாக்கங்கள் தொடர்கின்றன. சிறுவர்கள் இதனால் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர். சிறுவர் பாடசாலைகள் மீதும் பொதுமக்கள் வீடுகள் மீதும் நடத்தப்பட்ட குண்டுவீச்சுக்கள் இளம் பராயத்தினரின் எதிர்காலத்தினை முற்றாகப் பாதித்துள்ளது. பெற்றார் இருவரையும் இழந்த சிறுவர்கள் கணிசமானளவில் காணப்படுகின்றனர். அதேபோல் தாய் அல்லது தந்தையைப் பலிகொடுத்த சிறுவர்களும் உள்ளனர். திரு கோணமலை மாவட்டத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் வாழும் 8500 சிறுவர்களில் 60 வீதமானோர் கடும் வறுமை காரணமாக அங்கு புகலிடம் தேடியுள்ளனர். 741 பிள்ளைகள் பெற்றார் இருவரையும் இழந்துள்ளனர். 2580 பிள்ளைகள் பெற்றாரில் ஒருவரை இழந்துள்ளனர். நிதிப்பற்றாக்குறை காரணமாக மேலதிக எண்ணிக்கையில் சிறுவர்களை அனுமதிக்கமுடியாத நிலை பரவலாக வடக்கு கிழக்கில் ஒரு பொதுப் பிரச்சினையாக இருக்கிறது.

வறுமை காரணமாக போஷாக்கின்மையும், கர்ப்பிணித் தாய்மாரின் உடல்நலக் குறைவும் தமிழர் பகுதிகளில் இருப்பதை தொண்டு நிறுவனங்கள் அவதானித்துள்ளன. பிறக்கும் குழந்தைகள் எடை குறைந்தவையாகவும் நோய் எதிர்ப்புச் சக்தியற்றவையாகவும் இருக்கின்றன. சிசு மரணவீதம் சராசரிக்கும் கூடுதலாக இருப்பதால் எமது இனம் ஆபத்தை எதிர்நோக்கு கின்றது. உயிர் பிழைக் கும் சிறுவர்கள் வளர்ச்சி குன்றியவர்களாகவும் பல்வேறு உடல் நோய் களுக்கு உட்படுபவர் களாகவும் இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் கர்ப்பிணித் தாய் மார்களுக்கான போஷா க்கு உணவு நிலையங்களை உருவாக்கி பெரும் பொருட் செலவில் நற்பணியாற்றி வருகின்றனர். சிறுவர் நலனில் எமது விடுதலை அமைப்புக் காட்டிவரும் அக்கறையும், கரிசனையும் அளப்பரியது. எமது எதிர் காலம் சிறுவர்களின் வளர்ச்சியில் தங்கியுள்ளது.

சிறுவர் விவகாரம் அரசியலாகிவிட்டது. தமிழர்களுக்கு எதிரான கருத்தியல் போரில் அது முக்கிய அங்கம் வகிக்கிறது. சிங்கள அரசின் பிரச்சார உத்தியின் அடித்தளமாக இரு அம்சங்கள் இடம்பெறு கின்றன. ஒன்று தமிழர் களுடைய விடுதலைப்போர் ஒரு பயங்கரவாதம், அடுத்தது விடுதலைப் புலிகள் தமது படையில் சிறுவர்களை பலவந்தமாகச் சேர்க்கிறார்கள். இப்பிரச்சாரப் பாரம்பரியத்தைத் தொடங் கியவர் சிறிலங்கா வின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமராவார். எமது சிறுவர்கள் மீது கரிசனை காட்டுவதாகப் பாசாங்கு செய்யும் சிங்களத் தலைவர்கள் தமது பகுதிச் சிறுவர் களின் கேவலநிலை குறித்துக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. கடலோரப் பகுதிகளிலும் உல்லாசப் பயணிகள் விடுதிகளிலும் சிறுவர்கள் விபச்சாரம் அமோகமாக நடைபெறுகிறது. இதில் பிரபல கொழும்பு அரசியல் வாதிகளுக்கும் பங்குண்டு. அதேபோல் பெருமளவு மூவினச் சிறுவர்கள் தெற்கில் உயிராபத்தை விளைவிக்கும் தொழில்களில் ஈடுபடு கின்றனர். மலையகச் சிறுவர்களும் மிகக் குறைந்த ஊதியத்திற்குத் தொழிலாற்று கின்றனர். இவர்களுடைய கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் பற்றி யாரும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. கிட்டத்தட்ட கொத்தடிமைகளாக மலையகச் சிறுவர்கள் நடத்தப்படுவதை மனித உரிமை ஆர்வலர் கள் கண்டுள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்ட பின் யுனிசெப் நிறுவனம் 2003இல் வெளியிட்ட வட கிழக்கு சிறுவர் உரிமைகள் பற்றிய அறிக்கையில் ஈழத் தமிழ்ச் சிறுவர்களின் கவலைக்குரிய

**300 சிறுவர்களில் ஒருவர் வீதம் பெற்றாரில் ஒருவரையாவது இழந்துள்ளதாகவும் 100% சிறுவர்கள் போசாக்கின்மையால் உடல்நலம் பாதிப்புற்று இருப்பதாகவும் அறிக்கைகள் அறியத்தருகின்றன. வட கிழக்கிலுள்ள பள்ளிக்கூடங்களில் 30% போரினால் சேதமடைந்துள்ளன என்றும் சிறுவர்களுக்குரிய மருத்துவ சேவைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும் யுனிசெப் கண்டறிந்துள்ளது. வட கிழக்கில் சிறுவர்நலன் படுமோசமாகப் பாதிப்படைந்திருப்பதற்கு, ஒன்றோடொன்று தொடர்புடைய இரு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. போரின் பாதிப்பு முதற் காரணம், கொழும்பு அரசின் அசிரத்தையும் இனப்பாகுபாடும் இரண்டாவது காரணம்.**

நிலவரம் விவரிக்கப்பட்டுள்ளது. 50,000 சிறுவர்கள் பள்ளிக்கூடம் செல்வதில்லை என்றும், 100 சிறுவர்களில் ஒருவர் வீதம் சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் வாழ்வதாகவும் இவ்வறிக்கை தெரிவிக்கின்றது. 300 சிறுவர்களில் ஒருவர் வீதம் பெற்றாரில் ஒருவரையாவது இழந்துள்ளதாகவும் 100% சிறுவர்கள் போஷாக்கின்மையால் உடல்நலம் பாதிப்புற்று இருப்பதாகவும் அறிக்கைகள் அறியத்தருகின்றன. வட கிழக்கி லுள்ள பள்ளிக்கூடங்களில் 30% போரினால் சேதமடைந்துள்ளன என்றும் சிறுவர்களுக் குரிய மருத்துவ சேவைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும் யுனிசெப் கண்டறிந்துள்ளது. வட கிழக்கில் சிறுவர்நலன் படு மோசமாகப் பாதிப்படைந் திருப்பதற்கு, ஒன்றோடொன்று தொடர்புடைய இரு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. போரின் பாதிப்பு முதற்காரணம், கொழும்பு அரசின் அசிரத்தையும் இனப் பாகுபாடும் இரண்டாவது காரணம்.

2002க்குப் பின் நிலைமை சீரடையலாம் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது. ஆறுகட்டப் பேச்சுவார்த்தைகள் செப்ரம்பர் 2002க்கும் மார்ச்சு 2003க்கும் இடைப்பட்ட காலத்தில் உலகின் பல பாகங்களில் நடத்தப்பட்டாலும் வட கிழக்கில் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள் கடும் தோல்வியடைந்தன. சிரான் (SIHRN) கட்டமைப்பு உருவாகும் தறுவாயில் இருந்தபோது கொழும்பு அரசு கொடுத்த வாக்குறுதியை மீளப்பெற்று சீரானைத் தோல்விகாணச் செய்தது. இதன்போது வயது குறைந்த சிறுவர்களை எல்.ரி.ரி.ஈயினர் தமது படையில் சேர்க்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. சிறுவர்களுடைய நலன் இதன்மூலம் பாதிப்படைவதாக போர் நிறுத்த கண்காணிப்புக்குழு வலியுறுத்தியது. "போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நடவடிக்கைத் திட்டம்'' (ACTION PLAN FOR WAR AFFECTED CHILDREN) இதற்காக உருவாக்கப்பட்டது. வட கிழக்குச் சிறுவர்களுக்கு நன்மை செய்வதற்காக இந்த நடவடிக்கைத் திட்டத் தின் பங்காளிகளாக எல்.ரி.ரி.ஈ, சிறிலங்கா அரசு, யுனிசெப் என்ற முத்தரப்பினர் இடம் பெற்றனர்.

யுத்த நிறுத்தம் ஈழத்தமிழர்களுக்கு இயல்பு வாழ்க்கையை தரத் தவறியுள்ளது. இதில் சிறுவர்களும் பயன் பெறாதுள்ளனர். சிறுவர்களின் பள்ளிப் படிப்பில் முன்னேற்றம் ஏற்படவில்லை. தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. சிங்கள நாட்டுப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் எண்ணிக்கை விகிதம் தமிழ்ப் பள்ளிக் கூடங்களில் நிலவும் விகிதத்திலும் பார்க்க அதிகமாக இருக்கிறது. பலமுறை சுட்டிக் காட்டியும் புதிய தமிழாசிரியர்கள் நியமிக் கப்படவில்லை. தமிழ்ப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் இலவச பாடநூல்கள் தரம் குறைந்தவையாகவும் குழறுபடிகள் நிறைந்தவையாகவும் உள்ளன. அவை பெரும் பாலும் சிங்கள மாணவர்களுக்காகத் தயாரிக் கப்பட்ட நூல்களின் மொழிபெயர்ப்புக் களாகவே இருக்கின்றன. இவற்றிலுள்ள எழுத்துப் பிழை, கருத்துப் பிழை, வரலாற்றுத் திரிபு போன்றவற்றை தமிழாசிரியர் சங்கம் கடந்த சில வருடங்களாகச் சுட்டிக்காட்டிய போதும் முன்னேற்றம் ஏற்படவில்லை. இப்படியான விபரங்கள் நெசோர் (NESOHR) அறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

தமிழ்மொழி மூலமான கற்பித்தல் நடக்கும் பள்ளிக்கூடங்களில் கடந்த 10 வருடங்களாக 40% ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவருகிறது. 2005இல் புதிய ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். இவர்கள் தேவைக்கு எண்ணிக்கையில் உள்ளனர் என்பதோடு திறமையாகச் செயற்படுவதற்கு இரண்டிற்கும் மேற்பட்ட வருடகாலம் பிடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாத சுனாமியில் 24 கல்வி வலயங்களில் 09 கல்வி வலயங்கள் வடக்கு கிழக்கில் பாதிப் படைந்துள்ளன. 2005 ஜனவரியில் தொகுக்கப் பட்ட புள்ளி விபரங்களின்படி 2400 பள்ளிச் சிறுவர்கள் வட கிழக்கில் உயிரிழந்துள்ளனர். கல்முனை கல்விவலயத்தில் 1502, முல்லைத்தீவு கல்விவலயத்தில் 130, மட்டக்களப்பு கல்விவலயத்தில் 235, மூதூர் கல்விவலயத்தில் 217, அக்கரைப்பற்று கல்விவலயத்தில் 141.

54 பள்ளிக் கட்டடங்கள் முற்றாக அழிந்துள்ளன. அழிவுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 436மில்லியன். தளபாட இழப்பின் பெறுமதி ரூபா 72.8மில்லியன். கொம்பியூட்டர் கருவிகளின் இழப்புப் பெறுமதி ரூபா 49.1 மில்லியன். பகுதியாக இடிந்த பள்ளிக் கட்டடங்களின் இழப்புப் பெறுமதி 107.9 மில்லியன். வட கிழக்கு கல்விக்கந்தோர் கட்டடங்கள் இடிந்துள்ளன. அவற்றின் பெறுமதி ரூபா 21.4மில்லியன். மாணவர்களின் உயிரிழப்பு எண்ணிக்கை மேலதிக விபரங்கள் கிடைக்கும்போது இன்னும் உயரலாம் என்று வட கிழக்கு மாகாண கல்வி நிர்வாக அலுவலகம் தெரிவிக்கின்றது. அதன் பிரசாரம் பிந்திக் கிடைத்த கணக்கின் படி முல்லைத்தீவில் 800 பள்ளிச் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 16 பள்ளிக் கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 1938 பொதுமக்கள் முல்லைத்தீவில் இறந்திருப்பதாகவும் அரச அதிபர் இமெல்டா சுகுமாரின் உத்தியோகபூர்வ அறிக்கை தெரிவிக்கின்றது.

படையினர் அமைதி உடன்படிக்கைக்குப் பின்பும் வட கிழக்குச் சிறுவர்களின் கல்விக்கு ஊறுவிளைவித்து வருகின்றனர். வலிகாமம் வடக்கில் முன்பு 46 பள்ளிக்கூடங்கள் இருந்தன. அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த 29 பள்ளிக்கூடங்களில் 16 மூடப்பட்டுவிட்டன. மிகுதி 13 பள்ளிக் கூடங்களும் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே தற்காலிக இடங்களில் செயற்படுகின்றன. காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி சுன்னாகம் கந்தரோடையில் தனியார் வீடுகளில் இயங்குகின்றது. பள்ளிச்சிறுவர்களின் வருகை மிகக் குறைவாகக் காணப்படுவதால் அது மிக விரைவில் மூடப்படலாம் என்று கல்வித் தலைமை தெரிவிக்கின்றது. இராணுவத்தின் தலையீடு ஆரோக்கியமான கற்கைக்கு இடையூறாக இருப்பது கண்கூடு. பள்ளிக் கூடங்களின் வாசல்களில் இராணுவத்தினர் கூட்டம் கூட்டமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதை நியாயப்படுத்த முடியாது. அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள பாடசாலைகளும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. காலையில் சிறுவர்கள் பள்ளிக்கூடம் செல்லும் அதே நேரத்தில் பெரும் எண்ணிக்கையான துருப்புக்களை ஏற்றிச்செல்லும் இராணுவ வாகனங்கள் தெருக்களில் அதிவேகமாக ரோந்து செல்கின்றன. இது சிறுவர்களுக்கு உயிராபத்தை விளைவிக்கும் செயற்பாடாகும்.

வட கிழக்குச் சிறுவர்களின் கற்கையில் படையினரின் தலையீடு நன்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. யாழ். குடாவின் பிரதான பள்ளிக் கூடங்களையும் யாழ்.பல்கலைக் கழகத்தையும் நலிவுறச் செய்வதே சிங்களப் படையினரின் அடிப்படை நோக்கமாக இருக்கிறது. பருத்தித்துறை ஹாட்லி ஆண்கள் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என்பன படையினரின் பிடியில் இருக்கின்றன. இப்பள்ளிக்கூடங்களின் விளையாட்டுத்திடல் இராணுவத்தினரின் தேவைக்காகச் சுவீகரிக் கப்பட்டுள்ளது. மாணவர்களும் ஆசிரியர்களும் கடும் உடற்பரிசோதனைக்குப் பின்பு பள்ளிக்கூடத்திற்குள் செல்ல அனுமதிக்கப் படுகின்றனர். தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் இந்த நடைமுறை காணப்படுகிறது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஒரு பகுதி இராணுவத்தினரின் பாவனைக்கு



www.eelamview.com

எடுக்கப்பட்டுள்ளது. அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயுள்ள பள்ளிக்கூடங்கள் படையினரின் தீவிர கண்காணிப்பில் உள்ளன.

ஏறத்தாழ 52 யாழ்.குடாநாட்டுப் பள்ளிக்கூடங்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ளன. சென்றவருடம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தைத் திருத்தி புதிய கட்டடம் அமைப்பதற்காக கட்டிடப் பொருள்களை பெப்பிரவரி 03, 2005ஆம் நாள் கொண்டு சென்றபோது படையினர் நுழைவு அனுமதியை மறுத்தனர். எழுதுமட்டுவாள் வடக்கில் ஐந்து கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள் கல்விகற்கும் எழுதுமட்டுவாள் வடக்கு சாவகச்சேரி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நிலைகொண்டுள்ள படையினர் அதைவிட்டு விலக மறுக்கின்றனர். மட்டக்களப்பு கொம்மாந்துறை விநாயகர் வித்தியாலய வளாகத்தை படையினர் தமது தேவைக்குப் பயன்படுத்துகின்றனர். கடும் உடற்பரிசோதனைக்குப் பின்பு மாணவர்களும் ஆசிரியர்களும் இப்பள்ளிக்குள் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புதல் என்பது பள்ளிவாழ்வை உள்ளடக்கியதாக இருப்பதால், வட கிழக்கு மாணவர்களின் இயல்புவாழ்க்கை இன்னும் எட்டப்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

வடக்கு கிழக்கில் பரவலாக நிலவும் போஷாக்கின்மை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். கொழும்பு அரசு தொடர்ச்சியாக தமிழர்களுக்கு நடத்திய பொருளாதாரத்தடையும் எம் மக்களின் வறுமையும் போஷாக்கின்மையின் கூட்டுக்காரணிகளாக அமைகின்றன. உலகவங்கியின் மனித மேம்பாட்டு ஆய்வலகு (HUMAN DEVELOPMENT UNIT, WB) வெளியிட்ட பெப்பிரவரி, 2005 அறிக்கை வட கிழக்கில் நிலவும் போஷாக்கின்மை இலங்கைத்தீவின் பிற பகுதிகளிலும் பார்க்க கூடுதலாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது. வட கிழக்குப் போஷாக்கின்மை 46 வீதமாகவும் இலங்கைத்தீவின் பிற பகுதிகளில் அது 29 வீதமாக இருப்பதையும், ஆகக் கூடுதலான போஷாக்கின்மை மட்டக்களப்பிலும் (53%) அதற்கடுத்ததாக வவுனியாவிலும் (51%) நிலவுவதையும் உலகவங்கி அறிக்கை நிரூபிக்கின்றது. மேற்கூறிய சுட்டு விகிதங்கள் அனைத்தும் சிறுவர் சிறுமியர்கள் பற்றியதாகும். இவ்வறிக்கையில் முல்லைத்தீவு, கிளிநொச்சி பற்றிய ஆய்வு முடிவுகள் வெளியிடப்படவில்லை. ஆனால் பின்வரும் மாவட்டங்களின் போஷாக்கின்மை விகிதம் அதிலுள்ளன. திருகோணமலை (45%), மன்னார் (28%), அம்பாறை (44%), யாழ்ப்பாணம் (43%).

**வடக்கு கிழக்கிலுள்ள சிறுவர் பராமரிப்பு இல்லங்கள்**

| மாவட்டம் | இல்லங்களின் தொகை | சிறுவர் சிறுமிகளின் தொகை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 45 | 2151 |
| கிளிநொச்சி | 16 | 1671 |
| முல்லைத்தீவு | 11 | 952 |
| மன்னார் | 08 | 210 |
| வவுனியா | 10 | 429 |
| திருகோணமலை | 18 | 1083 |
| மட்டக்களப்பு | 42 | 2305 |
| அம்பாறை | 15 | 776 |
| **மொத்தம்** | **165** | **9577** |

எல்.ரி.ரி.ஈ, யுனிசெப், சிறிலங்கா அரசு ஆகிய முத்தரப்பினர் இணைந்து உருவாக்கிய "போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நடவடிக்கைத் திட்டம்" செயலிழப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. இத்திட்டத்தை நடை முறைப்படுத்துவதால் எல்.ரி.ரி.ஈ அமைப்பிற்கு நன்மையும் அனுகூலமும் வந்தடையும் என்று அது நம்புவதற்கு இடமளிக்கப்படவில்லை. குடும்பத்தினருடன் இணைக்கப்பட்ட சிறுவர்களின் இணைப்பிற்குப் பிந்தியகால ஆலோசனை மற்றும் உதவிகளுக்கான உத்தரவாதம் வழங்கப்படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக முத்தரப்பினருக்கும் இடையில் திருப்திகரமான ஒருங்கிணைப்பு ஏற்படவில்லை, இதனால் நடவடிக்கைத் திட்டத்தை அமுலாக்குவதில் பின்னடைவு ஏற்பட்டது. எதிர்பார்த்த பலனை தரத்தவறிய தற்கான மூலகாரணங்களாக இவை இடம் பெறு கின்றன.

மேற்கூறிய நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாம்கள் ஊடாக 170 வரையிலான சிறுவர்கள் எல்.ரி.ரி.ஈயின் பொறுப்பிலிருந்து யுனிசெப் மூலம் மீளளிக்கப்பட்டனர். இச்



சிறுவர்களில் சிலர் கவனிப்பாரற்ற நிலையில் மீண்டும் எல்.ரீ.ரீ.ஈயிடம் வந்தடைந்தனர். அதாவது சமுதாய நீரோட்டத்தில் சேர்ப்பிக்கப்பட்டபின் அவர்களுக்குரிய கவனிப்பு திருப்திகரமாக அமையவில்லை. இடைத்தங் கல் முகாமூடாக அனுப்பப்பட்ட சிறுவர்கள் எல்.ரி.ரி.ஈ நேரடியாக அனுப்பிய சிறுவர் களிலும் பார்க்க கூடுதலான நன்மைகளை அடையவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. இருபாலாருக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கவில்லை. இடைத்தங்கல் முகாமூடாக சிறுவர்களைத் திருப்பி அனுப்புவதை எல்.ரி. ரி.ஈ நிறுத்தியதற்கு இது காரணமாக அமைகிறது. அத்தோடு எல்.ரி.ரி.ஈ மீதான கண்டன விமர்சனத்தைத் தளர்த்துவதற்கு யுனிசெப் ஒத்துக் கொள்ளவில்லை. இதே கால கட்டத்தில் நெசோர் (NESOHR) எனப்படும் வடக்கு கிழக்கு மனித உரிமைச் செயலகம் (NORTH EAST SECRETARIAT ON HUMAN RIGHTS) உருவாக்கபபட்டதால், அதனூடாகச் சிறுவர்களை குடும்பத்தினரிடம் சேர்ப்பிக்கும் நடைமுறையை எல்.ரி.ரி.ஈ செயற்படுத்தத் தொடங் கியது.

இதனடிப்படையில் 2003ஆம் ஆண்டு வரை எல்.ரி.ரி.ஈயினால் அவரவர் குடும்பத்தினரிடம் சேர்ப்பிக்கப்பட்ட வயது குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை 800. அதேபோல் 2003ஆம் ஆண்டிற்குப்பின் குடும்பத்தினரிடம் சேர்ப்பிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 553. 2003ஆம் ஆண்டிற்குப்பின் திருப்பி அனுப்பப்பட்டோர் பற்றிய புள்ளி விபரங்களில் இருந்து பெறப்பட்ட கீழ்க் காணும் தரவை இதில் தருகிறோம்.

**(01)** திருப்பி அனுப்பப் படுமுன் எல்.ரி.ரி.ஈயில் 03 ஆண்டுகள் இருந்தவர் எண்ணிக்கை- 23

**(02)**திருப்பி அனுப்பப்படுமுன் எல்.ரி.ரி.ஈயில் 02 ஆண்டுகள் இருந்தவர் எண்ணிக்ை- 32

**(03)**திருப்பி அனுப்பப்படுமுன் எல்.ரி.ரி.ஈயில் 01 ஆண்டுவரை இருந்தவர் எண்ணிக்கை - 215

**(04)**திருப்பி அனுப்பப்படுமுன் எல்.ரி.ரி.ஈயில் 01 ஆண்டிலும் குறைவாக இருந்தவர் எண்ணிக்கை - 283

இத்தரவிலிருந்து பெறப்படும் முடிவு யாதெனில் திருப்பி அனுப்புதல் மிகவும் வேகமாக நடைபெறுகிறது. வயது குறைந்தோர் எல்.ரி.ரி.ஈயிடம் வந்து இணைவதற்கான காரணங்கள் பல இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். வறுமையும், முறையான பராமரிப்பு வசதிகள் இல்லாமையும் முக்கிய காரணமாக இடம்பெறுகின்றது. பராமரிப்பு வசதிகள் சீராகும்போது வயது குறைந்தோரின் எல்.ரி.ரி.ஈ நோக்கிய வரவு மட்டுப்படும் என்பது தெளிவு. உணவு முதற்கொண்டு கல்வி உள்ளடங்கலான தங்குமிட வசதிகளை எல்.ரி.ரி.ஈ தாராளமாக வழங்குகிறது. வயது குறைந்தோர் பெரும்பாலும் பெற்றோர், பாதுகாவலரை இழந்தவர்களாகவும் சமூகத்தால் கைவி டப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

சிறிலங்கா ஆயுதப் படையினரின் தமிழ்ச் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளும், படுகொலைகளும் தொடர்ந்தவண்ணம் உள்ளன. ஆயுதப் படையினரும் அவர்களோடு இணைந்து செயற்படும் ஆயுதக்குழுக்களும் வயது வேறுபாடின்றி ஆட்கட த்தலில் ஈடுபடுகின்றனர். இதற்காக இலக்கத் தகடற்ற வெள்ளைநிற மோட்டார் வாகனங்களை இவர்கள் பயன்படுத்துகின்றனர். தமிழ்ச் சிறுவர்கள் மத்தியில் குறிப்பாக பள்ளிக்குச் செல்லும் சிறுவர் சிறுமிகள் மத்தியில் அச்ச உணர்வும் பாதுகாப்பின்மையும் நிலவுகின்றது. ஆட்கடத்தலுக்கு உட்படுவதிலும் பார்க்க எல்.ரி.ரி.ஈ யிடம் தஞ்சமடை வது மேல் என்ற கருத்து சிறுவர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது. சிறிலங்கா ஆயுதப்படையினரின் தமிழீழச் சிறுவர்களுக்கு எதிரான அண்மைக்கால வன்முறைச் சம்பவங்கள் சிலவற்றை இங்கு தருகின்றோம்.

பேசாலை, மன்னாரிலுள்ள நூறு வீட்டுத்திட்டத்தினுள் நுழைந்த சிறிலங்கா கடற்படையினர் டிசெம்பர் 23, 2005ஆம் நாள் நடத்திய தாக்குதலில் ஒரு தமிழ்க் குடும்பம் முற்றாக அழிக்கப்பட்டது. இதில் 3 வயதினரான டிலக்சன் என்ற ஆண் சிறுவன் கொல்லப்பட்டான். சம்பவ இடத்தைப் பார்வையிட்ட மன்னார் அரச அதிபர் எரியுண்ட வீட்டிற்குள் ஒரு சிறுவனின் கையை மாத்திரம் கண்டதாகச் சாட்சியம் வழங்கியுள்ளார். ஐந்து நாட்களுக்குப் பின் டிசெம்பர் 28, 2005ஆம் நாளன்று கொடிகாமம், தென்மராட்சியைச் சேர்ந்த 15 வயதினரான தம்பிராஜா அருளானந்தன் என்ற இளைஞர் தனது குடும்பத்தினர் முன்னிலையில் சிறிலங்கா ஆயுதப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலைச் சம்பவத்திற்குமுன் சில வாரங்களாக இக் குடும்பத்தினர் சிறிலங்கா ஆயுதப்படையினராலும் அவர்களோடு சேர்ந்தியங்கும் ஈ.பி.டி.பி ஆயுதக்குழுவினராலும் தொடர்ச்சியாக மிரட்டப்பட்டுவந்துள்ளனர். இதுபற்றிய விரிவான அறிக்கையை வடக்குக் கிழக்கு மனித உரிமைச் செயலகம் வெளியிட்டுள்ளது.

ஜனவரி 16, 2006ஆம் நாளன்று அக்கரைப்பற்று மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்குப் பின்புறமாகச் செல்லும் வீதியில் வைத்து 16வயதினரான கோபால கிருஷ்ணன் சுரேஷ் என்ற மேசன் தொழிலாளி ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் ஒரு எல்.ரி.ரி.ஈ அனுதாபி என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. சிறிலங்கா ஆயுதப்படையினராலும் ஆயுதக் குழுவினராலும் பல சிறுவர்கள் இக்காலப் பகுதியில் சூட்டுக்காயங்களுக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர். அவற்றில் ஒருசில சம்பவ விபரங்களைத் தருகின்றோம். டிசெம்பர் 07, 2005ஆம் நாள் யோகராசா யோகேஸ்வரி (24), துரைராசா வதனி(18) என்ற இரு சகோதரிகள் ஆயுததாரிகளால் வீடுபுகுந்து சுட்டுக் கொல்லப்பட்டனர். யோகராசா யோகேஸ்வரியின் இரண்டுவயதுக் குழந்தை படுகாயம் அடைந்தது.

வவுனியாவில் செயற்படும் இராணுவத்திற்கு உதவும் துணைப்படையினரின் கிரனேற் வீச்சுத் தாக்குதலில் சகோதரர்களான தமிழ்ச்செல்வன் (13), சுரேஜா (14) ஆகியோர் படுகாயமடைந்தனர். படையினர் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தும்போது அப்பாவிகள் மீது துவக்குச் சூடு நடத்தும் நடைமுறையை ஆயுதப்படையினரும் ஆயுதக்குழுக்களும் செயற்படுத்துகின்றன. இதனால் பொதுமக்கள் தெருக்களிலும் பொது இடங்களிலும் நடமாட அஞ்சுகின்றனர். இவ்வாறு சூட்டுக்கு இலக்காகியவர்களால் சுட்டவர்களை அடையாளம் காண இயலவில்லை. தாக்குதல் நடத்துவோர் கறுப்புத்துணிகளால் முகத்தைச் சுற்றிக் கட்டியிருப்பது அடையாளம் காண்பதைத் தடுக்கின்றது. யாழ்.நீதிமன்றம் கறுப்புத் துணியால் முகத்தை மூடியபடி உலாவ வேண்டாம் என்று கட்டளையிட்ட பின்பும் படையினர் இந்த வழமையை இதுவரை கைவிடவில்லை.

சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைச்சட்டம், பெண்களுக்கு எதிரான பாகு பாடுகளை நீக்குவதற்கான சட்டம், சிறுவர்கள் உரிமைச்சட்டம் என்பனவற்றை சிறிலங்கா அரசு அங்கீகரித்துள்ளது. (INTERNATIO -NAL COVENANT ON CIVIL AND POLITICAL RIGHTS, CONVENTION ON THE ELIMINATION OF DISCRIMINATION AGAINST WOMEN, CONVENTION OF THE CHILD) இம்மூன்று சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக சிறிலங்காவின் குற்றவியல் சட்டம் 1995ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. 18 வயதிற்குக் குறைந்தவர்களை சிறுவர் கள் என்று இத்திருத்தம் வரையறை செய்கின் றது. இவர்களுக்குத் தீங்கு விளைவிப் பவர்கள் அல்லது துன்புறுத்துபவர்களுக்கு சிறைத் தண்டனை வழங்குவதற்கு மேற்கூறிய சட்டத்திருத்தம் வகை செய்கின் றது. சிறுவர்களைப் படையில் சேர்க்கிறார் கள் என்று குற்றஞ் சுமத்தும் சிறிலங்கா அரசு தான் இயற்றிய சட்டத்தைச் சரிவர நிறைவேற்றுகிறதா என்ற கேள்வி எழுகின் றது.

அண்மைக்காலமாக புத்த விகாரைகளில் 'அபித்தயாக்கள்' என்று அழைக்கப்படும் மிகவும் வயது குறைந்த ஆண் சிறுவர்கள் மதக் கல்விக்காகச் சேர்க்கப்படும் முறைமை பற்றிய கேள்விகள் எழுந்துள்ளன. இவர்கள் ஆண்கள் மாத்திரம் வாழும் விகாரைகளில் பாதுகாப்பாக வாழ்கின்றார்களா, சட்டத்தின் முன்னிலையில் இச சிறுவர்களின் அந்தஸ்து என்ன? போன்ற வினாக்களுக்கு விடை கிடைக்கவில்லை. பாலியலுறவுக்குச் சம்மதிக்க மறுத்தவொரு அபித்தயா சிறுவனை ஒரு பிக்கு தாக்கிப் படுகாயம் விளைவித்த செய்தி சென்றவாரம் கொழும்புத் தினசரிகளில் பிரசுரமாகியது. இச்சிறுவர்களை புத்தமதபீடம் தத்து எடுப்பதாக வாதிடுவோர் திருமணமாகாத ஆண்கள் சிறிலங்கா சட்டத்தின்கீழ் தத்து எடுப்பதற்குத் தகுதி அற்றவர்கள் என்பதை மறுத்துவிடுகிறார்கள். அத்தோடு புத்த விகாரை ஒரு சிறுவர் பராமரிப்பு இல்லமும் அல்ல. எல்.ரி.ரி.ஈ மீது தாக்குதல் தொடுக்கும் அரசு தனது உள் வீட்டு விவகாரத்தை முதற்கண் சீராக்க வேண்டும்.





www.eelamview.com

# தமிழீழத் தேசிய வாழ்வும் முதற்கட்டச் சவால்களும்

சாரணன்

மனிதன் ஒரு சமூகப்பிராணி. தேசியம் சமூகம் வாழ்வில் ஒரு பிரதான கட்டமைப்பும் ஒரு பிரதான வாழ்நிலை வடிவமுமாகும். வாழ்நிலை முன்னேற்றத்திற்கு தேசிய அரசியல், தேசிய கலாச்சாரம் தேசிய சிந்தனை என்பன பிரதான அம்சங்களாகும். மனிதனின் குழுநிலைக் கலாச்சார குறுவட்ட மனப்பாங்கிற்குப் பதிலாக பரந்த தேசிய கலாச்சாரத்தையும் தேசிய மனப்பாங்கையும் கட்டி எழுப்புவது தேசியவாதத்தின் தலையாக பொறுப்புக்களுள் ஒன்றாகும்.

தமிழீழத் தேசியமானது ஒரே வேளையில் முப்பரிமானங்களைக் கருத்தில் எடுக்கவேண்டியதாய் உள்ளது. ஒன்று அகரீதியான அர்த்தத்தில் தமிழீழ மக்களுக்கு உள்ளேயான தேசிய வளர்ச்சி என்பது; இரண்டாவதாக தமிழீழ மக்கள் நேரடியாகப் பொருதும் சிங்கள மேலாதிக்கத்திற்கு எதிரானதும், சுயாதிபத்தியத்திற்குமான நிலை என்பது; மூன்றாவதாக சர்வதேச சக்திகளை எதிர்கொள்வது என்பது.

இதில் நேரடி எதிரியான சிங்கள இனவாத சக்திகள் தனித்து நின்று செயற்படாது அவர்கள் வெளிநாட்டுச் சக்திகளையும் தம்மிடம் ஒருங்கே அரவணைத்துக் கொள் கின்றனர். அரசு எனும் ஒரு பலத்தைப் பயன்படுத்தி சிங்கள இனவாத ஆட்சியாளர் வெளிநாட்டுச் சக்திகளை இலகுவாகத் தம்பக்கம் வளைத்து வருகின்றனர்.

தமிழீழத் தேசியப் போராட்டமானது ஜனநாயகத்திற்கும் நீதிக்குமான போராட்டமாக உள்ளது. ஆனால் இதில் சம்பந்தப்படும் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளும் அதனைத் தத்தமது நலன்களுக்கேற்பவே கையாண்டும் அணுகியும் வருகின்றன. இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு அரசியற் சூழலில் தமிழீழ விடுதலைப் போராட்டமே பெரிதும் முற்போக்கானது.

இன்றைய நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஒருபுறம் தனது நேரடி எதிரியான சிங்கள இனவாதத்தையும் அதன் வெளிநாட்டு ரீதியான கூட்டாளிகளையும் எதிர்கொள்ள வேண்டியதாய் இருக்கின்றது. மறுபுறம் அது அகரீதியான தேசிய பகிர்மாணிப்பை, தேசிய மனப்பாங்கை, தேசிய சிந்தனையை வளர்த்தெடுக்க வேண்டியதாய் இருக்கின்றது.

இடதுசாரிகளோ, அன்றி வலதுசாரிகளோ சிங்கள இனவாதிகள் அனைவரும் இடது, வலது என்பதற்கப்பால் முதலில் இனவாதிகளேயாவர். இத்தகைய இனவாதிகள் எத்தகைய வெளிநாட்டுச் சக்திகளுடனும் அப்பட்டமாகச் சோரம் போவது இயல்பு. இதற்காக மேற்படி இச்சக்திகளையும் தமிழீழத் தேசியம் ஒரேமாதிரி அணுகவேண்டுமென்றில்லை.







சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பைப் பெறவேண்டியது தமிழீழத் தேசியத்திற்கு அவசியம் என்பதால் பரந்த சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பைப் பெறவல்ல வழிமுறைகளைத் தமிழீழத் தேசியம் அதிகம் நடைமுறைச் சாத்தியமான பொறுப்புணர்வுடன் தேடவேண்டியுள்ளது. இப்போது நடைமுறையில் சர்வதேச சமூகத்தின்பால் தமிழீழப் போராட்டமானது அதிக பொறுப்புணர்வைக் காட்டிவருகின்றது.

அதேவேளை சிங்கள இனவாதத்தின் பக்கமுள்ள யுத்த விரும்பிகள், இராணுவ சிந்தனையாளர்கள் யுத்தத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டுவருகின்றனர். இப்போது காணப்படும் சர்வதேச நிலவரத்தின் கீழ் யுத்தமொன்று வெடிக்குமாயின் அதனைப் "பயங்கரவாதம்" என்று முத்திரை குத்திவிடலாம் என்ற நம்பிக்கையின் பேரில் சிங்கள இனவாதிகள் யுத்தத்தைத் தூண்டி வருகின்றனர். இவர்கள் விடுதலைப் புலிகளை வலுச்சண்டைக்கு அழைக்கின்றனர். அவர்கள் சர்வதேச சமூகத்தை ஏமாற்றி இனவாதப் படுகொலைகளை அரங்கேற்ற விரும்புகின்றனர்.

ஜே.வி.பியினரின் யுத்தத் தேவை மிகவும் அடிப்படையானது. அது உண்மையில் ஒரு இனவாத யுத்தத்தின் மூலம் தன்னை முற்றிலும் இராணுவமயப்படுத்த விரும்புகின்றது. அது தனது இனவாதத்தைத் "தேசபக்த யுத்தம்" என வர்ணித்து தனது உறுப்பினர்களை இராணுவத்தினுள் பெருந்தொகையில் இணைத்துக் கொள்ளவும், காணப்படும் இனவாத சிங்கள இராணுவத்தைத் தனது, அதாவது ஜே.வி.பி இராணுவமாக மாற்றிக்கொள்ளவும் யுத்தத்தை ஒரு கருவியாக ஜே.வி.பி பயன்படுத்த விரும்புகின்றது. சர்வதேச சமூகம் இத்தகைய சூழ்ச்சிக்கு உடந்தையாகிவிடக்கூடாது என்பதே இப்போதைய தேவையாகும்.

சிங்கள ஆட்சியாளர்களும், சிங்களக் கட்சிகளும் அவை எவையேயாயினும் வெளிநாடுகளை ஒடுக்குமுறைக்குப் பயன்படுத்தத்தான் முனைப்புக் காட்டுவினவே தவிர, பிரச்சினையைத் தீர்க்க முயல மாட்டா. இந்நிலையில் ராஜபக்ஷ அரசாங்கம் தீர்வைப் பற்றிக் கண்துடைப்பாகக் கதைத்தாலும் செயலில் இராணுவ ஒடுக்குமுறையே அவரதும் திட்டமாகும்.

அடுத்து இராணுவத்தை எடுத்துக்கொண்டால் அது 100 வீதம் சிங்கள இராணுவமாகும். அத்துடன் அது முழு அளவில் இனவாத சிந்தனை ஊட்டப்பட்ட இராணுவமாகும். மேலும் நீண்டகாலமாக யுத்தத்தின் நலன்களை அனுபவித்து பெருச்சாளிகளான ஒரு இராணுவ உயர்குழாம் வளர்ந்திருக்கின்றது. அத்தகைய பெருச்சாளிகள் தமது நலன்களுக்காக யுத்தத்தைத் தூண்டிவருகின்றனர். இத்தகைய நிலையில் சிங்கள இனவாதமானது முற்றிலும் யுத்தமுகம் கொண்டு காணப்படுகின்றது.

மேற்படி இத்தகைய உள்நாட்டு வெளிநாட்டுச் சவால்களை எல்லாம் எதிர்கொண்டு தமிழீழத் தேசியமானது தனது அகவழித் தேசிய நிர்மாணிப்பிலும் ஈடுபடவேண்டியுள்ளது.

தேசிய சமூக நிர்மாணமென்பது முதலாளித்துவ சமூக பொருளாதார வளர்ச்சியுடன் தோன்றியது. ஆனால் இலங்கைத்தீவில் சிங்களவர் மத்தியிலும், தமிழர் மத்தியிலும் அப்படி ஒரு தேசிய முதலாளித் துவ வர்க்கமில்லை. சிங்கள இனவாதப் பெருந்தேசியத்திற்கு சிங்கள வர்த்தககுழாமும் மத்தியதர வர்க்கத்தினரும் தலைமை தாங்கினர். தமிழ்த் தேசியத்தைப் பொறுத்தவரை தலைமை தாங்கக்கூடிய விழிப்பு நிலையில் தமிழ் மத்தியதர வர்க்கமே இருந்தது. ஆனால் அந்த மத்தியதர வர்க்கமும் துரதிஷ்டவசமாக அரசாங்க உத்தியோகத்தைச் சார்ந்த வர்க்கமாக இருந்ததால் அவ் வர்க்கமானது வெளிப் படையாகத் தமிழ்த்தேசிய அபிலாசைகளைக் கையில் எடுக்கத் தயங்கியது. அவற்றையெல்லாம் கூட இட்டு நிரப்பவேண்டிய பணி தற்போதைய தலை முறையின் கையில் உள்ளது.

தமிழீழப் போராட்ட மானது மத்தியதர வர்க் கத்தை அதன் மதில்மேற் பூனை நிலையிலிருந்து இழுத்து தமிழீழப் போராட்டத்தின் பக்கம் கொண்டுவந்து விட்டது. இது தேசியத்திற்கு அகரீதியாகக் கிட்டிய ஒரு நல்ல வெற்றியாகும் அதேவேளை இனவொழிப்பு இராணுவ நடவடிக்கையின் விளைவால் மொத்தம் ஒரு மில்லியன்வரையான தமிழ்மக்கள் தீவு கடந்து வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் இப்போது சிங்கள அரச பிடிக்கப்பாலான ஒரு மத்தியதரவர்க்கத்தினராய் மாறியுள்ளதால் இவ்வாறு வெளிநாடுகளில் வாழும் இத்தமிழ் மத்திய தரவர்க் கத்தினரது ஆதரவும் அனுசரணையும் தமிழ்த் தேசிய வளர்ச்சிக்கு நேரடி நெம்புகோலாயுள்ளன. தாம் வாழும் பல்வேறு தேசங்களில் இருந்தும் அவர்கள் எழுப்பும் குரல்கள், போராட்டத்திற்கு அளிக்கும் ஆதரவு என்பன தமிழீழத் தேசிய வளர்ச்சிக்கான அத்தியாவசிய நிபந்தனைகளுள் ஒன்றாய் மாறியுள்ளது.

இந்நிலையில் தற்போது உள்ளும் புறமும் தமிழீழத் தேசிய மனப்பாங்கையும் தேசிய சிந்தனையையும் தேசிய அபிலாசைகளையும் வளர்த்தெடுக்க வேண்டிய பணி முதன்மை பெற்றுள்ளது. 21ஆம் நூற்றாண்டுக்குரிய உலகளாவிய உள்நாட்டு வளர்ச்சிநிலைமைக்கேற்ப தமிழீழத் தேசியத்தைப் புதுமெருகுடன் வளர்த்தெடுக்க வேண்டிய பணி இப்போது உள்நாட்டு வெளிநாட்டு ரீதியில் பரந்துவாழும் அனைத்து தமிழீழம் பற்றிய நல்லெண் ணங்கொண்டவர்களின் கரங்களிலுமுள்ளது.

சிறிய இனம் ஆனால் பெரிய தியாகங்களுடன் தனது உயரிய அபிலாசைகளைக் கையில் ஏந்தி நிற்கின்றது. தமிழீழத்தைத் தவிர வேறுவழிகளில் அவர்களுக்கு வாழ்வில்லை என்றே வரலாற்று அனுபவம் சொல்லுகின்றது.



www.eelamview.com

**- சென்ற இதழின் தொடர்ச்சி -**

சமூக ஜனநாயகம் என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு சமூகமாக அரசியற் செயற்பாடுகளில் பின்பற்றுவதற்குள்ள உரிமையாகும். இது ஒரு சமூகத்திற்கு உள்ள கூட்டுரிமையாகும். பெரும்பான்மை ஜனநாயகம் எவ்வாறு தனிப்பட்டவர்களின் நலன்களுக்குப் பாதுகாப்பாகின்றதோ அதேபோல சமூக ஜனநாயகம் ஒரு சமூகத்தின் கூட்டு நலன்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றது.

தமிழ் மக்கள் ஒரு சமூகம் என்ற வகையில் சமூக ஜனநாயகத்தின் அடிப்படையில் எழுந்த தமிழ் மக்களின் கூட்டு உரிமைக்காகவே வரலாற்று ரீதியாகக் குரலெழுப்பினர். காலனித்துவ ஆட்சிக் காலத்தில் அதிகாரங்கள் ஓரளவாவது வழங்குவதற்கு முன்னர் பிரதிநிதித்துவ அமைப்பு முறையில் சமூக ஜனநாயகம் பேணப்படாத போதே குரல் எழுப்பத்தொடங்கினர். அந்தக் குரல்கள் ஒற்றையாட்சி அமைப்பிற்குள் சமூக ஜனநாயகத்தைக் கோருவதிலிருந்து தொடங்கி சமஷ்டி ஆட்சிக்குள் கோருவதாக வளர்ந்தது. இன்று இலங்கையின் அரச அதிகாரக் கட்டமைப்பிலிருந்து முற்றிலும் விலகி நிற்கின்ற தமிழீழக் கோரிக்கை வரை வளர்ந்து நிற்கின்றது.

மறுபக்கத்தில் சிறிலங்கா அரசாங்கம் யாப்பு மூலமும், யாப்பிற்கு வெளியே பாராளுமன்ற சட்டங்கள் மூலமும், ஒப்பந்தங்களின் மூலமும் சமூக ஜனநாயகக் கோரிக்கைக்குச் செவிமடுப்பதாகக் காட்டிவந்தது. ஆனால் அவையெல்லாம் நடைமுறையில் எந்த வித பலனையும் தரவில்லை என்பது தமிழ் மக்கள் கண்ட வரலாறு. அதேவேளை இந்தக் கோரிக்கைகளுக்கு மாறாக இலங்கை, அரச அதிகாரக் கட்டமைப்பினைச் சிங்கள மயமாக்குவதில் மிகவும் கச்சிதமாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தது.

இந்தப் போக்கில் பிரசித்தமாகக் கருதப்பட்ட ஒன்றுதான் பண்டா - செல்வா ஒப்பந்தம். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இது மூன்றாவது ஒப்பந்தம். முதலாவது ஒப்பந்தம் கொழும்புத் தமிழர்களுக்கான தேர்தல் தொகுதி தொடர்பாக 1979இல் கைச்சாத்திடப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தம் "மகேந்திரா ஒப்பந்தம்"என அழைக்கப்பட்டது. தமிழர் தலைவர்களில் ஒருவராக விளங்கிய வைத்திலிங்கம் துரைசுவாமியின் "மகேந்திரா" இல்லத்தில் வைத்துக் கைச்சாத்திட்டமையினாலேயே மகேந்திரா ஒப்பந்தம் என அழைக்கப்பட்டது. தமிழர்களின் பிரதிநிதித்துவ கோரிக்கை தொடர்பாகக் கைச்சாத்திடப்பட்ட இவ் ஒப்பந்தம் பற்றி கைச்சாத்திட்ட சிங்களத் தலைவர்களே கவனம் எடுக்காததினால் பின்னர் அது பேசாமலே விடப்பட்டது. தமிழர்களைத் திருப்திப்படுத்தாவிட்டால் சுயாட்சிக் கோரிக்கையை அன்றைய காலணித்துவ ஆட்சியாளர்கள் கைகழுவி விட்டுவிடுவார்களோ என்ற அச்சம்தான் சிங்களத் தலைவர்கள் மகேந்திரா ஒப்பந்தத்திற்கு வந்தமைக்கான காரணம். ஆனால் இவர்கள் எதிர்பார்த்ததிற்கு மாறாகவே காலணித்துவ ஆட்சியாளர்கள் டொனமூர் யாப்பு மூலம் அரைவாசிப் பொறுப்பாட்சியினை வழங்கவே மகேந்திரா ஒப்பந்தமும் காணாமல்போனது. தமிழர்களின் எதிர்ப்புக்குரலை சிறிது காலத்திற்காவது அடக்கி வைப்பதற்கு இந்த ஒப்பந்தங்கள் சிங்களத் தலைவர்களுக்குத் துணையாயிருந்தது என்பது வரலாற்று உண்மையாகும். அதனாற்தான் அன்று தொடக்கம் இன்றுவரை எதிர்ப்புக் குரல்களைத் தற்காலிகமாகவாவது தணியச் செய்வதற்கு ஒப்பந்தங்களை ஒரு கருவியாகச் சிங்களத் தலைவர்கள் பயன்படுத்துகின்றார்கள். 1919 ஒப்பந்தங்களிலிருந்து தொடங்கி மகேந்திரா ஒப்பந்தம், பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என இவை எதுவுமே இதற்கு விதிவிலக்காக இல்லை.

அரச அதிகாரக் கட்டமைப்பில் சிங்கள அடையாளங்களைத் தேசியக்கொடி மூலம் உருவாக்கிச் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர்கள் ஒரு தேசமாக வாழ்வதைச் சிதைத்து, அரச இயந்திரத்தை முழுமையாகச் சிங்கள மயமாக்கும் வகையில் தனிச்சிங்களச் சட்டத்தினைக் கொண்டு வந்த போது தமிழர்களின் எதிர்ப்புக் குரல்களும் மக்கள் இணைந்த போராட்டங்களாக வளரத்தொடங்கின. காலிமுகத்திடல் சத்தியாக்கிரகப் போராட்டம், திருமலை யாத்திரை என எதிர்ப்புக் குரல்கள் வளர்ந்தபோது அதனைத் தவிர்க்கும்வகையில் சிறிலங்கா அரசு பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு வந்தது.




இவ் ஒப்பந்தத்தில் வட - கிழக்குத் தமிழர்களின் தாயகம் என்பது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தமிழ் மக்கள் குறைந்தளவிலாவது தங்களுடைய அபிலாசைகளைப் பேணக்கூடிய வகையில் பிராந்திய சபைகளை உருவாக்குவதற்கும் வழி செய்யப்பட்டது. வடக்கு ஒரு பிராந்தியமாகவும் கிழக்கு ஒன்றிற்கு மேற்பட்ட பிராந்தியங்களாகவும் இருக்கும் என்றும் விரும்பினால் பிராந்தியங்கள் இணைந்து ஒரு பிராந்திய சபையாகச் செயற்படலாம் எனவும் கூறப்பட்டது. அரச கரும மொழியைப் பொறுத்தவரை சிங்களமொழி அரசகருமம் என்பதற்குப் பாதிப்பு ஏற்படாமல் பிராந்திய மொழியாகத் தமிழ் மொழியினைக் கொள்ளலாம் எனவும் கூறப்பட்டது. குடியேற்ற விடயங்களில் கூட ஒரு நெகிழ்வுத் தன்மையைப் பின்பற்றும் வகையில் குடியேற்ற விடயங்களில் அந்தந்தப் பிராந்திய மக்களிற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் எனக்கூறப்பட்டது.

உண்மையில் ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களுக்கு எதிரான ஒரு அரசியலைத்தான் பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வருவதற்காக நகர்த்தியிருந்தார். தலைமைச் சிங்களச் சட்டத்திற்கூடாக அவருக்குத் தக்க இனவாதத்தினைக் கிளறிவிட்டதன் மூலம் கட்சி, அரச இயந்திரம், அரசாங்கம், மக்கள் என முழு நாட்டையுமே இனவாதிகளின் கூடாரமாக மாற்றினார். இலங்கையை முழுமையான சிங்கள நாடாக மாற்றுவதற்கான உத்தரவாதங்களையும் இனவாதிகளுக்கு வழங்கியிருந்தார். அந்த உத்தரவாதங்கள் எல்லாம் ஏனைய இனங்களை அவர்களது அடையாளங்களை, அரச அதிகாரக் கட்டமைப்பில் மறுதலிப்பதாகவே இருந்தது. தற்போதைய சனாதிபதி மகிந்த ராசபஷ்சவைப் போல தேர்தல் வெற்றிக்காக எதையுமே செய்யத் தயாராக இருந்தார். தேர்தலில் வென்றபின் உத்தரவாதங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தனிச் சிங்களச் சட்டத்தினை நிறைவேற்றினர். அதுவே தமிழ் தேசத்தை உசுப்பிவிட்டது. தமிழ் மக்கள் வீராவேசத்துடன் எதிர்ப்புக் குரலைக் காட்டத்தொடங்கவே முன்னர் கூறியது போல எதிர்ப்புக் குரலைத் தணிக்கும் வகையில் ஒப்பந்தத்திற்கு வந்தார்.

உண்மையில் பிரதமர் பண்டாரநாயக்கா ஒப்பந்தத்திற்கு வந்தாரே தவிர சிங்கள தேசம் ஒப்பந்தத்திற்கு வரவில்லை. அவ்வாறு வருவதற்கான தயாரிப்பு வேலைகள் எவற்றையும் சிங்களத் தலைவர்கள் செய்யவில்லை. செய்யும் நிலையும் எவருக்கும் இருக்க வில்லை.

இந்த இடத்தில்தான் சிங்கள சமூக உருவாக்கம் பற்றிய தெளிவினை அறிந்துகொள்வது அவசியமானது.

சிங்கள சமூக உருவாக்கம் என்பது சிங்கள பௌத்த கருத்து நிலைகளால் கட்டியெழுப்பப்பட்ட சமூக உருவாக்கமாகும். இது வெறும் அரசியலோடு மட்டும் இணைந்ததாக இருக்கவில்லை. வரலாறு, மதம் ஐதீகங்கள் என்பவற்றோடு இணைந்த ஒன்றாக இருக்கின்றது. சிங்கள அரசியல்வாதிகள் செய்ததெல்லாம் இக்கருத்து நிலை கட்கமேல் குந்திக்கொண்டது தான்.

**தமிழ்த் தேசத்தின் போராட்டங்கள் தொடர்ந்தும் வலுவடைந்தன. அரசு அதனை அடக்குவதற்குக் கூட்டுத்தண்டனை கொடுக்க முன்வந்தது. அதுதான் 1958ஆம் ஆண்டு இனக்கலவரம். அதனை இனக்கலவரம் எனக்கூறுவது பொருத்தமானதல்ல. இன அழிப்பு எனக்கூறுவதே பொருத்தமானது. சிங்கள தேசம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைக் கோரிக்கையை அடக்குவதற்காக வழங்கப்பட்ட முதலாவது கூட்டுத்தண்டனை இது.**

இக்கருத்து நிலைகளின்படி இலங்கை என்பது சிங்கள மக்களுக்கு மட்டும் சொந்தமானது. ஏனையவர்கள் வேண்டுமானால் வாழ்ந்துவிட்டுப் போகலாம் ஆனால் சொந்தம் கொண்டாட முடியாது.

பண்டாரநாயக்காவின் ஆரம்ப காலக் கருத்துக்கள் இதற்குமாறாக இருந்தன. அவர் இலங்கையின் பன்மைத் தன்மையினை ஆரம்ப காலங்களில் ஏற்றுக்கொண்டார். அந்தப் பன்மைத்தன்மைக்குள் சிங்கள தேசத்தின் அடையாளங்களைப் பேணுவதாக அவரது கருத்துக்களும் நடவடிக்கைகளும் அமைந்தன. இதனால் தான் சிங்கள மகாசபையினை உருவாக்கி சிங்கள அடையாளங்களுக்காகக் குரல் கொடுத்த அதேவேளை சமஸ்டிக்கோரிக்கையை முன்வைத்து இலங்கையின் பன்மைத்தன்மைக்காகவும் குரல் கொடுத்தார். அரச நிர்வாக விடயத்தில் இரு மொழிக் கொள்கையினையும் ஏற்றுக் கொண்டார்.

ஆனால் இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் இக்கருத்துக்களிலிருந்து மாறலானார். அதிகாரம் காலனித்துவ ஆட்சியாளர்களின் கைகளில் இருந்தபோது பண்டாரநாயக்காவின் பன்மைத் தன்மை பற்றிய கருத்துக்கள் சிங்கள மக்களைப் பெரிதும் பாதிக்கவில்லை. அதை விட அவருடைய சிங்கள அடையாளங்களுக்கான குரல்கள் அவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தன. ஆனால் சுதந்திரத்தின் பின்னர் கூடிய விரைவில் இலங்கையைச் சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமான நாடாக மாற்றிவிட வேண்டும் என்ற அவாவே அவர்களிடம் நிறைந்திருந்தது. அவ்வாறு மாற்ற வேண்டுமானால் ஏனைய இனங்களுக்கான அடையாளங்கள், இருப்புக்கள் இல்லாமல் செய்தல் வேண்டும். எனவே அவற்றை விரைவாகச் செய்ய வேண்டும் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். பிரஜாவுரிமைச் சட்டம், வாக்கு உரிமைச் சட்டம், சிங்களக் குடியேற்றங்கள் என நகர்ந்தபோதும் அவை சிங்கள மக்களைப் போதியளவு திருப்திப்படுத்தவில்லை. அரச இயந்திரம் சிங்களமயமாக வேண்டும் என அவர்கள் அவசரம் காட்டினர். சுருக்கமாகக் கூறினால் சிங்கள சமூக உருவாக்கத்திற்கு ஏற்ற அரசுருவாக்கம் ஏற்பட வேண்டும் என்பதில் அவர்கள் அவசரம் காட்டினர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்தப் போக்கு வினையாகியிருந்தாலும் தேசியக்கொடிக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கள் காரணமாகவும், தனது தமிழ் வாக்குவங்கி பறிபோய்விடும் என்ற அச்சம் காரணமாகவும் தனிச் சிங்களச் சட்டக் கோரிக்கை தொடர்பாகச் சற்று தயக்கம் காட்டியது. ஆனால் பண்டாரநாயக்கா இந்தப் போக்கினைத் தெளிவாகவே புரிந்துகொண்டார். ஐ.தே.கட்சியினை முறியடித்துத் தான் ஆட்சிக்கு வருவதற்கான குறுக்கு வழி இது என்பதையும் கண்டு கொண்டார். வாக்குறுதிகளை அள்ளி வீசினார். பௌத்தமத குருமார்கள், சிங்கள ஆசிரியர்கள், சிங்களத் தொழிலாளர்கள், சிங்கள விவசாயிகள், சிங்கள ஆயுள்வேத வைத்தியர்கள் என்கின்ற சிங்கள தேசத்தினர் ஐம்பெரும் சத்தியாவற்றையும் உசுப்பிவிட்டார்.

இவ் ஐம்பெரும் சக்திகளும் பண்டாரநாயக்காவை ஆட்சியில் அமர்த்தியது. சிங்கள அரசுருவாக்கத்திற்கான செயற்பாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக நகர்த்துவார் என எதிர்பார்த்தது. பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டம் என்ற ஒன்றை நகர்த்தினார். தமிழ்த்தேசம் வீறு கொண்டது. அரசின் இருப்பு ஆட்டம் கண்டது. ஒப்பந்தத்திற்கு வந்தார்.

**மதுசங்கர்**

ஒப்பந்தத்திற்கு வந்த பண்டாரநாயக்காவுக்குத் தான் உசுப்பிவிட்ட சிங்கள தேசமே தன்னை எதிர்க்கின்றபோது எதுவும் செய்ய முடியவில்லை. கட்சிக்குள்ளேயே எதிர்ப்புகள் வந்தன. அவர் உசுப்பி விட்ட பௌத்த குருமார்கள் பண்டாரநாயக்காவின் வீட்டிற்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்தனர். இந்த எதிர்ப்புச் செயற்பாடுகளை அரசியல் அறுவடையாக்க விரும்பி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை எதிர்த்துக் கண்டியாத்திரை சென்றார். பண்டாரநாயக்காவின் அமைச்சர்கள் சிலர் உண்ணாவிரதிகளோடு கூட்டுச்சேர்ந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இறுதியில் உண்ணாவிரதம் இருந்த பிக்குகளுக்கு முன்னாலேயே ஒப்பந்தத்தினைக் கிழித்தெறிந்தார் பண்டாரநாயக்கா. வரலாற்றில் மீண்டும் ஒரு தடவை தமிழர்தேசம் ஏமாற்றப்பட்டது.

தன்மீது பாயும் சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்தப் பண்டாரநாயக்கா மீண்டும் சிங்கள அடையாளப்படுத்தலில் இறங்கினார். வாகனங்களில் பொறிக்கப்பட்ட ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாகச் சிங்கள சிறி எழுத்தினைக் கொண்டுவந்தார். தமிழரசுக்கட்சி சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டத்தில் குதித்தது. வடகிழக்கிற்கு வந்த அரச பேருந்துகளில் சிங்களச் சிறி பொருத்தப்பட்டது. தனியார் வாகனங்களுக்குத் தமிழ் இளைஞர்கள் தமிழ்ச் சிறி பொறித்த தகடுகளைப் பொருத்தினர். யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பெண்கள் சிங்களச் சிறி பொறித்த பேருந்துகளுக்கு முன்னால் படுத்துச் சத்தியாக்கிரகம் செய்தனர். அரசு பலரைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

தமிழ்த் தேசத்தின் போராட்டங்கள் தொடர்ந்தும் வலுவடைந்தன. அரசு அதனை அடக்குவதற்குக் கூட்டுத்தண்டனை கொடுக்க முன்வந்தது. அதுதான் 1958ஆம் ஆண்டு இனக்கலவரம். அதனை இனக்கலவரம் எனக்கூறுவது பொருத்தமானதல்ல. இன அழிப்பு எனக்கூறுவதே பொருத்தமானது. சிங்கள தேசத்தால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைக் கோரிக்கையை அடக்குவதற்காக வழங்கப்பட்ட முதலாவது கூட்டுத்தண்டனை இது. இக் கூட்டுத்தண்டனை பின்னர் 1977, 1983 என வளர்ந்தது தான் வரலாறு. இக் கூட்டுத்தண்டனை அரசு இனவாதிகளின் கூட்டு முயற்சி. தமிழ்த் தேசத்தின் அபிலாசைகளைப் புத்தாக்கம் செய்ததில் இக் கூட்டுத்தண்டணையின் பங்கு அளப்பரியது.

(தொடரும்....)



www.eelamview.com

# கைமாறிய கனவுகளோடு களங்காணும் 2ம் லெப் மாலதி படையணி

மலைமகள்

வல்வெட்டித்துறை ~ தீருவில் வெளியில் பன்னிரு வேங்கைகளின் வித்துடல்களும், எரியக் காத்திருக்கும் சிதையின் மேல் அடுக்கப்பட்டன.

"இந்தியா எமது மக்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் கீழே வைத்த ஆயுதங்களை இப்போது மறுபடி மேலே உயர்த்துகிறோம்"

என்று ஒரு குரல் ஓங்கி ஒலித்தது. சுடுகலன்கள் மேலே உயர்த்தப்பட்டன. வானத்தைக் கிழித்தபடி மரியாதை வேட்டுக்கள் செந்நிறமாகப் பயணித்தன.

இந்திய ~ ஈழப்போர் தொடங்கிவிட்டது.

நாவற்குழிப் படைத்தளத்திலிருக்கும் இந்திய இராணுவம் முன்னேறினால் மோதவென கோப்பாயில் பதினைந்து பேர்கொண்ட பெண்களணி தயாரானது. கைகளில் இரண்டொரு நாட்களின் முன் அவசர அவசரமாக வழங்கப்பட்ட AK47, ஒரேயொரு ரவைக்கூட்டுடன் அதுகூட எல்லோரிடமுமில்லை. ஏனையவர்கள் ரவைகளைத் துணி முடிச்சில் கட்டியபடி, குண்டுகளுடன்.

2ஆம் லெப் மாலதி, 2ஆம் லெப் கஸ்தூரி, வீரவேங்கைகள் விஜி, ஜெனா, தயா, ரஞ்சி தம்மிடம் உள்ளவற்றுடன் தயார் நிலையில்.

முன்னேறிவந்த இந்தியப் படைகளுக்கும் இவர்களுக்கும் சண்டை ஆரம்பித்தது. கடும் சண்டை. ரவை முடிய முடிய நிரப்பி நிரப்பிச் சண்டை. பெரும் பலத்துடன் பெருந்தொகையில் வந்து நின்ற உலகின் அன்றைய நான்காம் வல்லரசுப் படைகளோடு நின்று சண்டையிட முடியாத களநிலைமை எம்மவர்களைக் கோப்பாய் சந்திநோக்கி, சண்டையிட்டவாறு பின்னகர்த்தத் தொடங்கியது.

மாலதிக்குத் தொண்டையில் பெருங்காயம். நடக்க முடியவில்லை. இராணுவமோ நெருங்கிக்கொண்டிருந்தது. மாலதியை இழுத்துச் செல்ல விஜி முயற்சித்துக்கொண்டிருந்தார். முடியவில்லை. வல்லரசுப் படைகளுடனான போரில் தன்னால் இழப்பு வரக்கூடாது என்று முடிவெடுத்த மாலதி சயனைட்டை அருந்தினார்.

"என்னை விட்டிட்டு ஆயுதத்தைக் கொண்டுபோய் அண்ணையிட்டைக் குடு"

என்றபடி தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரானார்.

கருவி கைமாறியது கனவுகள் கைமாறின.
மாலதி,
தாய் நிலம் விடியும்
எனும் கனவோடு
மண்ணிலே நீ விழுந்தாய்.
உன் பெயர் சொல்லி
எம் படையணி தன்னை
அண்ணன் வளர்த்தெடுத்தான்.
(நன்றி ~ கவிதை அம்புலி)

☆☆☆☆

சூரியக் கதிர் ~ 01 எதிர் நடவடிக்கையின் முடிவில், விடுதலைப்புலிகள் மகளிர் படையணி, தன்னை 2ஆம் லெப்.மாலதி படையணியாக உருமாற்றியிருந்தது.

சூரியக் கதிர் ~ 02 நடவடிக்கைக்கு சிங்களப் படைத்தலைமை தயாரானது. 2ஆம் லெப்.மாலதி படையணி வடமராட்சியின் வாதரவத்தை, கப்புதூ, மண்டான், வல்வை வெளி, தொண்டமனாற்றுச் சந்திப் பகுதிகளில் நிலைகொண்டது.

சிங்களப் படையினரின் நடவடிக்கையில் தெரிந்த வேறுபாடு, அவர்களின் வரவு வாதரவத்தைப் பக்கமாக இருக்கலாம் என்ற ஊகத்தை ஏற்படுத்தியது. எமது வேவு நடவடிக்கை தொடங்கியது.

வாதரவத்தையின் வெளிப்புறக் காப்பரண்களைக் கடந்து எம்மவர்கள் உள் நுழைய, இரவைப் பகலாக்கும் மின் விளக்குகள் ஒப்பவில்லை. கப்டன் கோபியின் அணி மறுபடி மறுபடி முயன்றது. காப்பரண்களுக்கு முன்னால் நாட்டப்பட்டுள்ள கம்பங்களில் சில மின் விளக்குகள் எமது புறமாகவும், சில படையினரைப் பார்த்தபடியும் கட்டப்பட்டிருந்தன. எமக்கு எதிர்த்திசையில் கட்டப்பட்ட மின் விளக்கு ஒளிரும்போது எம் திசையிலிருக்கும் கம்பம் சிறுகோடாக நிழலை விழுத்தும். அந்த நிழலைப் பயன்படுத்திக்கூட பகையரணை நெருங்க பலமுறை முயன்றும் ......

படையினர் நடவடிக்கையைத் தொடங்கப்போகின்றனர் என்று உள்ளுணர்வு சொன்னது. இன்று நான்காவது நாள் எப்படியாவது போயாக வேண்டும்.

இப்போது முன்னிலவு. பின்னிருட்டு நள்ளிரவில் மின் பிறப்பாக்கி ஓய்வெடுக்கும் 10 ~ 15 நிமிட இடைவெளியைப் பயன்படுத்தி உள்நுழைந்து, நிலைமையை அவதானித்து திரும்பிவரும் முடிவை கோபி எடுத்தார்.

இது சரிவருமா, இல்லையா என்று யோசித்துக்கொண்டிருக்க நேரமுமில்லை. இதை விட்டால் படைத் தளத்தினுட்புக வேறு வழியுமில்லை.

1996 ஏப்பிரல் 02 கோபியின் அணி நகர்ந்தது. முன்னணி அவதானிப்பு நிலையை அடைந்தது. சற்று நிதானித்து, மேலும் முன்னகர்ந்து தடைக் கம்பியை நெருங்க முன்பே வழியில் இராணுவம் எதிர்ப்பட்டது.

முயற்சியைக் கைவிட முடியாது. போகத்தான் வேண்டும். மெல்லப் பக்கவாட்டாக விலகி, மீண்டும் முன்னேற, மறுபடியும் இராணுவம் எதிர்ப்பட்டது. மீண்டும் பக்கவாட்டாக விலகி, முன்னோக்கி நகர முயல, மின் பிறப்பாக்கி ஓய்ந்தது.

இனித் தாமதிக்க முடியாது. பத்து நிமிடங்களுள் உள்நுழைந்து வெளித்திரும்ப வேண்டும் ஒட்டத்தில் போய் முதலாவது தடைக் கம்பியை உள் நுழைவதற்காக உயர்த்திப் பிடிக்க, ஒருவர் உள் நுழைய முயல, தடைக் கம்பியிலிருந்து ஐந்து மீற்றர் முன்னே இராணுவம் நிற்பதைக் கண்ட கோபி, சைகை காட்டி, நகர்வை நிறுத்தினார். அதற்குள் மின் விளக்குகள் உயிர் பெற்றன.

இனி ஒரு கணம் அங்கே நிற்பதும் தற்கொலைக்கு ஒப்பானது. இவர்கள் விலகத்தொடங்க சிறிலங்கா இராணுவம் சுடத்தொடங்க, இவர்களும் கைக்குண்டுகளை வீசியபடி சுட்டுச் சுட்டுப் பின்னகர, அந்த வெட்டை வெளிச் சண்டையில் கப்டன் கோபி 2ஆம் லெப்.மாலதி படையணியின் முதல் மாவீரராகி, இப்போது பத்தாண்டுகள்.

2ஆம் லெப்.மாலதியின் பெயரைச் சுமக்கும் படையணி, முதல் மாவீரர் கப்டன் கோபியைப் போலவே முடியாதென்று எதையும் விடாது, எங்கும் எப்போதும் முயன்றபடி.

☆☆☆☆



உண்மை வெற்றி ~ 01 எதிர் நடவடிக்கையின் ஆரம்ப நாட்களிலேயே கொம்பனிக்குரிய வேவு அணியில் ஒருவராக லெப்.தமிழ்பிரியா பயிற்றுவிக்கப்பட்டார். நிதானமும் அமைதியுமான இயல்பைக்கொண்ட அவருக்கு வேவு மிகவும் பொருத்தமான பணிதான்.

தாக்குதலணிகளின் காப்பரண்களைக் கடந்து முன்புறம் போய் இரவெல்லாம் சிங்களப் படைக்கு மிக அருகேயும், பகலில் சற்றுப் பின்னே வந்து உயரமான மரங்களில் ஏறி நின்று படையினரைக் கண்காணிப்பதுமான கடின வேவுப் பணியில் தமிழ்பிரியா ஈடுபட்டார்.

உருத்திரபுரம் புனித பற்றிமா கல்லூரியில் நிலைகொண்டிருந்த சிங்களப் படையினரை 1996.09.26 அன்று நாம் உட்புகுந்து தாக்கியழித்த நடவடிக்கையில் காயமடைந்த போராளிகளுக்கு வழிகாட்டிப் பின்னே நகர்த்திவிட்டு, மறுபடி முன்னேவந்து காயக்காரர்களைப் பின்னே கூட்டிப்போய் என்று, நடவடிக்கை முடியும் வரை இடைவிடாத நடைதான்.

> புளியங்குளச் சந்திப் பகுதியை வேறு படையணிகள் பாதுகாக்கும். சந்திக்கருகே இராணுவம் வந்து நிலைகொண்டு சண்டைபிடிக்கு மானால் தளத்தைத் தக்கவைப்பது கடினம். நீண்டகாலம் புளியங்குளச் சந்தியை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமானால் நீங்கள் அவர்களுக்கு வெளிப் புறமாகத் தடுப்பரண்களை அமைத்து நின்று சண்டையிட்டு எதிரிக்குச் சேதத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். அதை நீங்கள் போய் செய்யுங்கள் என்றார்.
>
> தமிழீழத் தேசியத் தலைவர்

மாபெரும் படை நகர்வொன்று சிங்களப் படைகளால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. எப்படி, எப்போது எங்கே என்பது தெரியவில்லை. 2ம் லெப்.மாலதி படையணியின் கொம்பனி ஒன்று உடங்காவில் நிலைகொண்டிருந்தது. பரந்துபட்ட நிலப்பரப்பைக் கண்காணிப்பில் வைத்திருக்கப் போதிய ஆளணியில்லாததால் 2ஆம் லெப் மாலதி படையணியின் வேவு அணிகள் சம்பளங்குளம், ஒதியமலை, உடங்கா, தண்ணீர் முறிப்புப் பகுதிகளில் உலாவிக்கொண்டிருந்தன.

உடங்காப் பகுதியில் இரு தடவைகள் சிறிலங்காப் படையினரின் வேவு அணிகளைச் சந்தித்து, எமது அணிகள் தாக்கியிருந்தன. இந்தா, அந்தா என்றிருந்தது சண்டை தொடங்கும் நாள்.

1997.05.13 அன்று தொடங்கியது 'வெற்றி நிச்சயம்' என்று பெயர் சூட்டப்பட்ட, சிங்களத்தின் தோல்வி நடவடிக்கை. உடங்கா வெட்டையில் நின்ற 2ஆம் லெப்.மாலதி படையணியின் வேவு அணியையே வெற்றி நிச்சயம் நடவடிக்கைப் படைகள் முதலில் சந்தித்தன.

வெற்றி நிச்சயம் எதிர் நடவடிக்கையின் முதல் மாவீரராக லெப்.தமிழ்பிரியா வரலாற்றில் பொறிக்கப்பட்டார்.

☆☆☆☆

"புளியங்குளச் சந்திப் பகுதியை வேறு படையணிகள் பாதுகாக்கும். சந்திக்கருகே இராணுவம் வந்து நிலைகொண்டு சண்டை பிடிக்குமானால், தளத்தைத் தக்கவைப்பது கடினம். நீண்டகாலம் புளியங்குளச் சந்தியை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமானால் நீங்கள் அவர்களுக்கு வெளிப்புறமாகத் தடுப்பரண்களை அமைத்து நின்று, சண்டையிட்டு எதிரிக்குச் சேதத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். அதை நீங்கள் போய் செய்யுங்கள்"

என்றார் தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள். வீரர்களின் வாழ்வில் முடியாது என்று ஒன்று இருக்கின்றதா? புறப்பட்டது 2ஆம் லெப்.மாலதி படையணி. நெடுங்கேணியிலிருந்து புளியங்குளத்துக்குக் கால் நடையாகவே வந்து சேர்ந்தது.

தலைவர் சொன்னபடி தளத்துக்கு வெளிப்புறமாகத் தடுப்பரண்களை அமைத்தது. வவுனியா ~ கிளிநொச்சி நெடுஞ்சாலையின் இருபுறமும் சிறகுகள் வடிவில் விரிந்து நின்று, புளியங்குளத் தளத்துக்குக் காப்பு வழங்கியது. தனக்கு முன்னே படையணியின் வேவு அணியினரை உலாவவிட்டது.

1997.06.23 அன்று அதிகாலை பெருமெடுப்பில் ராங்கிகள் இரைய, குண்டுவீச்சு விமானங்கள் கூவ, எறிகணைகளை மழையாக வீசியபடி முன்னேறி வந்த படையினரோடு முதலில் மோதியது மேஜர் அரசியின் தலைமையிலான ஐந்து வேவுப் போராளிகளே.

பழைய காயங்கள், நோய் காரணமாக களமுனை மருத்துவ வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்களை முன்னரங்குக்கு நகர்த்தி, முன்னரங்கில் நின்றவர்கள் தம்மைத் தயார்ப்படுத்தும் வரை வேவு அணி சண்டையிட, எல்லோரும் தயாரானதும் அவர்கள் பின்னகர, முன்னரங்கப் போராளிகள் சண்டையிட்டனர்.

எறிகணைகளால் தூக்கி விசிறப்பட்டு மண்குவியல்களான காப்பரண்களைக் கைகளால் விறாண்டி விட்டுப் படுத்திருந்து அடித்தவர்களும், இயங்கு நிலைத்தடையேற்பட்ட கனரக ஆயுதங்களை சீர் செய்து, சீர் செய்து அடித்தவர்களும், காயங்களைக் கட்டிவிட்டுத் தொடர்ந்து நின்று சண்டையிட்டவர்களும் வெற்றியை எமக்கே உரித்தாக்கியிருந்தனர்.

காலை 5.00 மணியளவிலிருந்து மாலை 5.00 மணியளவு வரை தொடர்ந்த அந்தப் பெருஞ்சண்டையில் படையணி 2ஆம் லெப்.மாலதியின் பெயரையும் கப்டன் கோபியின் பெயரையும் நிலைநிறுத்தியிருந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உலுப்பிய இரு பெரும் சமர்களான இந்திய இராணுவப் போரையும், வெற்றி நிச்சயம் நடவடிக்கையையும் எதிர்கொண்டு, முதல் மாவீரர்களை ஈகம் செய்த நிமிர்வில், இனிவரும் சமர்களையும் வெற்றிகொள்ளும் துணிவில், களமெங்கும் காத்திருக்கின்றது படையணி.

"ஆயிரத்து நூற்று இருபத்தைந்து மாவீரர்களை மண்ணுக்கு ஈந்து பெருமையோடு நிமிர்ந்துகொள்கின்றது படையணி"

☆☆☆☆





www.eelamview.com

# அசாத்திய ஆற்றல்

***புளியங்குளத்திலும், புதூரிலும் அவன் அமைத்த முகாம்கள் சாதாரண பார்வையில் களமருத்துவ முகாம்களாகவும், அலகும் பார்வையில் இராணுவ பயன்பாட்டிற்குரிய முகாம்களாகவும் தென்பட்டன. இவ்விரு இடங்களும் முற்றுகைக்கு உள்ளாகித் தாக்குப்பிடித்து, பின் முற்றுகை உடைத்த நிகழ்வுகள் தமிழீழப் போர் மருத்துவ வரலாற்றில் சாதனைப் பதிவுகளாயின.***


**- தூயவன் -**

**1990**ஆம் ஆண்டு யாழ்நகரை இரும்பரக்கனாக அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது ஒல்லாந்தர் உருவாக்கிய கோட்டை. இதனை இலங்கை இராணுவம் பலமான தளமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றது. பல நூறு வருடங்களின் பின்னர், பகைவன் கோட்டையொன்றைக் கைப்பற்றுவதற்கான முற்றுகையைத் தமிழர் வீரவரலாறு சார்பாகப் புலிகள் நடாத்திக்கொண்டிருக்கின்றார்கள். ஒரு லட்சம் தீவுப்பகுதி மக்கள் ஏதிலிகளாயினர். பல இலட்சம் தீபகற்ப மக்கள் அல்லலுறுகின்றனர். இதற்கு நேரடிக் காரணமான இராணுவ முகாம் வீழ்த்தப்பட்டேயாக வேண்டும். இம்முகாமிற்குப் பிரதான விநியோகப் பாதையாக விளங்கும் பண்ணைப் பாலம் தகர்க்கப்படல் வேண்டும். ஐம்பது மீற்றர் முன்னால் பகைவனின் பதுங்கிக் குறிபார்த்துச் சுடும் வீரர்கள் விழித்திருக்கின்றார்கள். அவர்களின் கழுகுப்பார்வை இவர்களின் பகுதியைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றது. பகைவன் கண்களில் மண்ணைத்தூவி பண்ணைக் கடற்கரை நோக்கி வெடிமருந்துகளை நகர்த்தவேண்டும். எக்கணமும் உயிர் பறிபோகும் ஆபத்தான இப்பணியைத் திவாகர் செய்து கொண்டிருந்தான். எது நடக்கலாகாது என எதிர்பார்க்கப் பட்டதோ இது நடந்தேவிட்டது. ஆனால் சிறு அதிஸ்டத்துடன் எதிரியின் ரவையொன்று இவனது காலைத்துளைத்துச் சென்றுவிட்டது.

கண்விழித்துப் பார்க்கையில் யாழ் மருத்துவமனையில் படுத்திருந்தான். காயம் மாறுகையில் அக்காலின் நீளம் ஒரு இஞ்சி கட்டையாகி இருந்தது. கீழ்க்காலின் ஒரு பகுதி தொடுகை உணர்வை இழந்திருந்தது. அக்காலை இழுத்திழுத்தே நடக்கவேண்டியிருந்தது. தனக்கேற்பட்ட வலுக்குறைவை நடையின் வேகத்தைக் கூட்டுவதன் மூலம் ஈடுசெய்ய முற்பட்டான். அம் மருத்துவமனையில் போர்க் காயமுற்ற நூற்றுக்கணக்கான போராளிகள் சிகிச்சை பெறுகின்றார்கள். அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவது மிகவும் சிரமமாக இருந்தது. இவனது ஆலோசனைகளும் பண்பான செயற்பாடுகளும் அதனை இலகுவாக்கியது. அப்பொறுப்பை முழுமையாகச் செய்யுமாறு கேட்கப்பட்டான். அதற்கு இவன் கால அவகாசம் கேட்டான். அடிப்படைப் பயிற்சி முடிவடைய முன்னரே தான் காயமடைய நேர்ந்ததையும், அதனைத்தான் பூரணப்படுத்தினால் தான் தன்னால் முழுமையான போராளியின் மனநிலையில் செயற்பட முடியும் என்பதையும் தெளிவுபடுத்தினான். இயலாக் காலுடன் கடின பயிற்சிகளை நிறைவுசெய்து பணிக்குத் திரும்பினான். காயமடைந்தவர்கள் பலரின் மனச் சமநிலையில் மாற்றமிருந்தது. அவர்களுக்குத் தாயாய், தாதியாய், தலைவனின் பிரதிபலிப்பாய், நண்பனாய் எனப் பலராய்ச் செயற்பட்டான். மருத்துவ நிபுணர்கள், மருத்துவம் கற்பவர்கள், ஏனைய மருத்துவப் பணியாளர்கள் அனைவருடனும் அன்பாகவும் போராளிக்குரிய பிரத்தியேக பண்பை வெளிக்காட்டும் வண்ணமும் உறவாடினான். அனைவர் மனதிலும் ஆழ இடம்பிடித்தான். மனித மனங்களையும் வளங்களையும் முகாமைத்துவம் செய்வதிலும் இவன் ஒரு நடைமுறை நிபுணனாகச் செயற்பட்டான்.

போர்க்காலத்தில் பொருளாதார, மருந்துத்தடைகளால் மக்கள் இன்னல்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வாழ்க்கைத் தரத்திலும் அக்கறை செலுத்தவேண்டி இருந்தது. தமிழீழ சுகாதார சேவைகள் நிறுவன மயப்படுத்தப்பட்டது. இதன் துணைப்பொறுப்பாளராகப் பணியாற்றப் பணிக்கப்பட்டான். இக்காலகட்டத்தில் தான், வரலாற்றின் மிகப் பெரும் துன்பமாக யாழ்ப்பாண இடப்பெயர்வு நிகழ்ந்தேறியது. யாழ் மருத்துவமனையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளும் பொதுமக்களும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தனர். அவர்களைப் பாதுகாப்பாக நகர்த்தவேண்டியிருந்தது. இவ் மனிதாபிமானப் பணியின் பாரத்தின் பெரும்பகுதி இவன் தோள்களில் இறங்கியது. ஒற்றைக்காலில் சுற்றும் பம்பரமாக, இரவு பகல் பாராது இருபத்தினான்கு மணிநேரமும் இவன் சுழன்றது இன்னும் ஞாபகங்களில் உள்ளது.

மக்கள் அனைவரும் வெளியேறிவிட்டனர். இடிவிழுந்த சுடுகாடாக சோபையிழந்து யாழ்மண் காட்சியளித்தது. போராளிகளின் கள மருத்துவமனையாக 'ஞானம்ஸ்' உல்லாச விடுதிக் கட்டிடம் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றது. பணியின் களைப்பால் சிறிது கண்ணயர்ந்த திவாகர் திடீரென எழுந்து "எண்பத்தொண்டில் இந்த ஹொட்டல்ல காமினி திசநாயக்கா வந்திருந்தபோதுதான் ஆமிக்காரங்கள் யாழ்ப்பாணம் நூல் நிலையத்தை எரித்தவங்கள். அதுமாதிரி இனியும் ஏதாவது செய்வாங்கள். அதனால், யாழ் மருத்துவபீட நூலகத்தில் உள்ள நூல்களையாவது பாதுகாக்க வேண்டும்" எனக் கூறினான். இவனது எண்ணம் அங்கிருந்தவர்களுக்கு அதீதமாகப்பட்டது. அண்ணளவாக மருத்துவ பீடத்திற்கு முன்னால் 750M தூரம்வரை பகைவன் வந்துவிட்டான். வாகனங்களைக் கிட்டக்கொண்டுபோகும் சத்தம் கேட்டாலே போதும் எறிகணைகளால் பொழிவான். தமிழீழ மருத்துவக் கல்லூரி மாணவர்களைத் துணைக்கழைத்தான். தள்ளி உருட்டிச் செல்லக்கூடிய கட்டில்கள் சிலதைப் பாரஊர்திகளில் ஏற்றினான். புறப்பட்டுவிட்டான். மருத்துவபீடப் பின்பக்க மைதானத்திற்கு வெளியில் பாரவூர்திகளை நிறுத்திவிட்டு, எல்லோரும் உள்ளே சென்றார்கள். கையினால் மின்சூழ்களின் வெளிச்சம் பொத்தி மறைக்கப்பட, மாடியில் இருந்து மனிதச் சங்கிலியாக எல்லோரும் நின்று கைமாறிக் கைமாறிப் புத்தகங்களை உருளும் கட்டில்களில் ஏற்றி, தள்ளிவந்து பாரஊர்திகளில் ஏற்றி, சாவகச்சேரிப் பகுதிக்குப் பாதுகாப்பாக அனுப்பிவைத்தார்கள். யாழ்நகர் பறிபோகும் கவலையில் அனைவரும் துவண்டிருக்கையில் அவன் அறிவுபூர்வமாகச் சிந்தித்தது மற்றவர்களை வியப்பில் ஆழ்த்தியது.



**மேஜர் திவாகர்**
**சந்திரசேகரம் புலேந்திரன்**
**மாதகல், யாழ்ப்பாணம்.**
பிறப்பு - 19.02.1971
வீரச்சாவு - 01.02.1998




இடம்பெயரும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்யுமாறு ஐ.நா.சபை அதிபர் அறிக்கை விட்டிருந்தார். எவ்வுதவிகளும் வந்துசேர எவ்வழிகளும் இல்லாத நிலை. மாரி மழையில் வாந்தி பேதியோ, வயிற்றோட்டமோ வந்து பல்லாயிரம் மக்கள் மடிய நேரலாம். எனும் மனித அவலம் எதிர்பார்க்கப்பட்டது. திரவஊடகமோ, நுண்ணுயிர் கொல்லி மருந்துகளோ ஒரு மருத்துவ நெருக்கடியைச் சமாளிக்கக் கூடியவாறு கையிருப்பில்லை. மருத்துவ சேவைக்கான நிர்வாகக் கட்டமைப்போ சீர்குலைந்துள்ளது. அவ்வேளை திவாகர் பின்வருமாறு கூறினான். மக்கள் கல்வியறிவுள்ளவர்கள். அடிப்படைச் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பவர்கள். திடீரென ஏற்பட்ட இவ்நெருக்கடியால் அவர்கள் கவனம் சிதறும். அதனால் மீண்டும் மீண்டும் சுகாதார விழிப்புணர்வை ஊட்டுவதனூடாகப் பிரச்சினையை வரவிடாமல் தடுக்கலாம். இவனது இக்கருத்து விரைவாகச் செயலுருப் பெற்றதால் எதிர்பார்த்த அவலம் வராமல் தடுக்கப்பட்டது.

யாழ் மருத்துவமனை பறிபோனதால் எம் போரிடும் வலு குறைந்துவிட்டது. இதன் தொடராக எதிரி தென்மராட்சி வடமராட்சி பிரதேசங்களைக் கைப்பற்ற முயற்சிப்பான். ஆயிரக்கணக்கில் போராளிகளும் மக்களும் காயமடைவார்கள். இச் சவாலை முகம் கொடுப்பதற்கான வளப்பிரதியீட்டைக் குறுகிய காலத்தில் ஏற்படுத்த வேண்டும். அதற்குத் துறைசார் மருத்துவக் குழுக்களைக் குறிப்பாகச் சத்திரசிகிச்சைக்கான தாதியர் ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்கள் போன்ற ஆளனி வசதியை ஏற்படுத்த வேண்டும். வழமைபோல் இவனது லாவகமான செயற்பாட்டால் கைமேல் பலன் கிடைத்தது. இதனை முல்லைச்சமரில் காயமடைந்த ஆயிரத்திற்கு மேற்ப்பட்ட போராளிகளைக் காப்பாற்றியதன் மூலம் உணரமுடிந்தது. நெருக்கடியான நேரங்களில் பொறுப்புக்களை நுணுக்கமாகக் கையாண்டதால் வன்னி மண் மீண்டும் ஒரு பாரிய பொறுப்பினை இவனிடம் ஒப்படைத்தது.

ஆம் இங்கு இவன் களமருத்துவப் பொறுப்பாளனாகச் செயற்படப் பணிக்கப்பட்டான். அகண்ட முன் அனுபவமற்ற பிரதேசம், ஆங்காங்கே அடிக்கடி அகோரமாக விரியும் சமர்க்களங்கள், ஆங்கிலேயர் காலத்திற்குப் பின் திருத்தப்படாத வீதிகள். எரிபொருள், மருந்துக்கும் தட்டுப்பாடான நிலை. ஒவ்வொருவரையும் பல தடவை மரணத்தின் விளிம் புக்குக் கொண்டுபோய்க் கொண்டுவரும் மலேரியா, காயமடைந்தவர்களை வேகமாக நகர்த்தவோ, வைத்துப்பராமரிக்கவோ போதிய வளங்கள் இல்லாத நிலை. சாதாரண தலையிடி முதல் உடல் துண்டுபடும் காயங்கள் வரை அனைத்துமே சிரமத்தையே பரிசளிக்கும். இவ்வளவிற்கும் இவன் செயற்பட்டான். "கடினமாக உழைத்தோ அல்லது மிதமாக உழைத்தோ பாரிய வெற்றிகளைப் பெறலாம்" இவன் அடிக்கடி கூறும் கருத்தின் முற்பகுதியைத் தன் வாழ்வின் தத்துவமாக்கியிருந்தான்.

எதிரி ஜெயசிக்குறு சமர்முனையைத் திறந்துவிட்டான். வன்னியை இரண்டறுத்து, புலிகள் பலத்தைச் சிதறடித்து, தமிழர் தேசியத்தைச் செல்லாத விடயமாக்கும் முயற்சியில் பகைவன் மூர்க்கமாகவே ஈடுபட்டான். முதலைக்கு தண்ணியிலும் புலிகளுக்கு வன்னியிலும் பலம் என்பதை அவன் அனுபவத்தில் புரியவிரும்பிய காலம். பகை இராணுவத் தொடரணியைத் தாண்டிக்குளத்தில் ஊடறுத்துத் தாக்கும் திட்டம் தயாரானது. கைவிடப்பட்ட வயல்களினூடும், காடுகளினூடும் புலிகள் நகரத் தொடங்கிவிட்டனர். சுமார் 30 கிலோ மீற்றர் இயலாத காலுடன் நடந்தான். மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் ஒரு பிரிவுப் பொறுப்பாளன் ஒரு குழுவுடன் நகர்வது பொருத்தமற்றதாகத் தென்படலாம். எனினும் சாக்களங்களிலுள் நுழைந்து வெளிவருவது, தொடரும் சமற்களங்களில் சந்திக்கும் சவால்களுக்கு முகம் கொடுப்பதை இலகுவாக்கும் என்பதைத் திடமாக நம்பினான். களம்திறக்கும் இடமெங்கும் திவாகர் நிற்பான் என்பது வெளிப்படையானது. சமர்கள் முடிந்து தளம்திரும்பும் அவன் சில நாள் இடைவெளியில் தொய்திருக்கும் நிர்வாக சேவைகளை வேகமாக ஒழுங்கு படுத்துவான். களமுனைத் தளபதிகளுடன் கலந்தாலோசனை செய்வான். பிரதான, துணையான களமருத்துவ நிலைகளை எங்கெங்கு நிறுவுவது எனத் தீர்மானிப்பான். வரைபடம், குறிப்புப் புத்தகமும் கையுமாக வருமிவன் அவ்வவ் இடங்களில் மண்வெட்டியுடன் நின்று பதுங்குகுழிகளை அமைப்பான். ஒவ்வொரு மருத்துவ நிலையையும் மரபுசார் மினி இராணுவ முகாமாக மாற்றுவான். மருத்துவ நிலைகள் சுற்றிவளைக்கப்பட்டால் தாக்குப்பிடிக்கவும், தேவையேற்பட்டால் முற்றுகையை உடைக்கவும்; தேவையான அனைத்தையும் இராணுவ விஞ்ஞானப் பார்வையோடு செயற்படுத்துவான். புளியங்குளத்திலும், புதூரிலும் அவன் அமைத்த முகாம்கள் சாதாரண பார்வையில் களமருத்துவ முகாம்களாகவும், அலகும் பார்வையில் இராணுவ பயன்பாட்டிற்குரிய முகாம்களாகவும் தென்பட்டன. இவ்விரு இடங்களும் முற்றுகைக்கு உள்ளாகித் தாக்குப்பிடித்து, பின் முற்றுகை உடைத்த நிகழ்வுகள் தமிழீழப் போர் மருத்துவ வரலாற்றில் சாதனைப் பதிவுகளாயின.

ஜெயசிக்குறு படை நடவடிக்கை அர்த்தமற்றதாக்கப்பட வேண்டும். அதற்கு சாத்தியமானவைகள் அனைத்தும் செய்யப்பட வேண்டும். அவற்றில் ஒன்றாக கிளிநொச்சி இராணுவத்தளம் மீண்டும் கைப்பற்றப்படல் வேண்டும். இது நடைபெறுமாயின் ஜெயசிக்குறு இராணுவ ரெயில் தடம் புரளும் அல்லது தடம்மாறும். அதற்கான சமர் 10.02.1997 ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது. இச் சமர்க்களத்தின் சுற்றயல் பகுதிகளில் களமருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு. சமர் ஆரம்பித்துவிட்டது. களமருத்துவ முகாமொன்றில் திவாகர் பணியாற்றிக்கொண்டிருக்கின்றான். ஆங்காங்கே விமானத் தாக்குதல்களும் நடாத்தப்படுகின்றது. இரவு நடைபெற்ற சண்டையின் பிரதிபலிப்பாய் காயக்காரரை ஏற்றிப் பல வாகனங்கள் அவ் மருத்துவ நிலைக்கு வந்துபோகின்றன. காயக்காரர்களுக்கு அவசர உயிர்காப்புச் சிகிச்சைகளும், ஏனையவும் செய்யப்பட்டு விரைவாகப் பின்தளம் அனுப்பப்படுகின்றார்கள். வானில் ஆளில்லா வேவு விமானம் ரீங்காரமிடுவது கேட்கின்றது. வாகன ஓட்டங்களை வைத்து இவர்களுடைய முகாம் அடையாளம் காணப்படலாம் எனும் அச்சம் தலைதூக்குகின்றது. எனினும் அதனைப் பொருட்படுத்தாமல் அவரவர் தம்தம் கடமைகளில் மூழ்கியுள்ளனர். திடீரென செவிப்பறை வெடிக்கும், நிலம் அதிரும் வகையில் இரைச்சல் சத்தம் கேட்கிறது. நிலைமையைக் கணித்த திவாகர் "எல்லோரும் பங்கருக்க பாயுங்கள்" கத்தி முடிப்பதற்குள் படீர் படீர் என கிபிர்க் குண்டுகள் அவ்விடங்களில் விழுந்து வெடிக்கின்றது. வெடிமருந்துப் புகையும், தூசி மண்டலமும் விலக சில நிமிடங்கள் எடுத்தது. கண்டகாட்சி அதிர்ச்சியைக் கொடுத்தது. களமருத்துவ நிலை இருந்தஇடம் கற்குவியலாகக் காட்சியளித்தது. பச்சை மரங்களும், மருந்துப் பொருட்களும், தசைத்துண்டங்களும் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. ஆம் களமருத்துவப் பொறுப்பாளன் திவாகர் மற்றும் இரு இராணுவ மருத்துவர்கள் உட்பட நாற்பத்திமூன்று பேர் நேசித்த மண்ணில், போர்ப் பணியாற்றிய இடத்தில் விதையாகிப் போனார்கள் ●




# நம்பலாமா, ஜெனிவா-2 ஐ ?

**பொ**ஸ்ஸே கோட்டையின் உள்ளே விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் சிறிலங்கா பிரதிநிதிகளும் நுளைந்த கையோடு சூடுபிடிக்கத் தொடங்கிய ஊடக உலகம் இன்னும் தணியாமல் அதன் பின்நிகழ்வுகளைத் தடம்தொடர்ந்துகொண்டிருக்கிறது. பன்னாட்டுச் சமூகத்தின்முன் கொடுத்த வாக்குறுதிகளை உள்ளூரிலே நிறைவேற்றவும் முடியாமல் நிராகரிக்கவும் முடியாமல் திருடனுக்குத் தேள்கொட்டிய நிலையில் மகிந்தர் தடுமாற, கூட்டணிக் கட்சிகள் ஆளுக்கொரு பக்கம் கூத்தாட, புலிகளின் இயல்பு மீறிய பொறுமையை பன்னாட்டுச் சமூகம் பதட்டத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறது.

பலதரப்பினரின் பலவித கருத்துப் பரிமாறல்களுக்கிடையே நடந்துமுடிந்த ஜெனிவாப் பேச்சுகள் தமிழருக்கு என்ன சொல்கின்றன என்று பார்ப்பதாயின் வாசகர்கள் மீண்டும் ஒருதடைவை பொஸ்ஸே கோட்டைக்குள் நுளையவேண்டும்.

புலிகளுடன் பேசுவதற்கான அரச தரப்புக் குழுவை ஆயத்தப்படுத்தியதுதான் மகிந்தர் சனாதிபதி என்ற நிலையில் தமிழர் பிரச்சனை சார்பாக எடுத்த முதலாவது அடி. தனது சிந்தனைகளில் தமிழர் பிரச்சனைகளுக்குத் தீர்வு இருப்பதாகவும் அவர் கூறி வந்திருந்த வகையில் இதை அவரின் தமிழர் சார்பான கொள்கை மற்றும் நடைமுறை விளக்கத்தின் எடுகோளாகவும் கொள்ளலாம்.

அவரால் வனையப்பட்ட குழு தனது வாதங்களுக்கான அடித்தளமாக சிறிலங்காவின் அரசியலமைப்பையும் இறைமையையும் வரித்துக்கொண்டதுதான் பேச்சு வார்த்தையில் எழுந்த அனைத்து முரண்பாடுகளுக்கும் தோற்றுவாயாக அமைந்திருந்தது. இலங்கையின் அரை நூற்றாண்டுகாலத் துன்பியல் சரித்திரத்தின் மூலமே அதன் அரசியல் அமைப்பும் அதை சிங்கள இனவாத ஆட்சியாளர் பயன்படுத்திய முறையும் தான் என்ற பட்டவர்த்தனமான உண்மையை அறியாததைப்போல சிறிலங்கா குழுவினர் நடந்துகொள்ள முற்பட்டனர்.

தமிழரின் ஏகோபித்த கோரிக்கை தனிநாடுதான் என்பது எழுபத்தேழாம் ஆண்டு பொதுத்தேர்தலில் பாரிய வாக்குப்பலத்தால் ஆணித்தரமாக எடுத்தியம்பப்பட்டபோதே இலங்கை அரசியலமைப்பானது தமிழர்மீது செயற்படும்திறனைத் தார்மீகரீதியாக இழந்துவிட்டது. அன்றே வலுவிழந்துபோன தமது அரசியலமைப்பைச் சட்டங்களாலும் சட்டத்திருத்தங்களாலும் படைபலத்தாலும் தமிழர் தாயகப் பகுதியில் நிலைநாட்ட சிங்களத் தரப்பு முனைவதை தமிழர்கள் ஆயுதரீதியாக எதிர்ப்பதே இன்றைய போராட்டம். தவிர, இந்த அரசியலமைப்பை முன்னாள் சனாதிபதி சந்திரிகாகூட 'பகுபூதய' (துஷ்ட அரக்கன்) என்று விமர்சித்திருந்தார். 1983ற்குப் பின்னர் மட்டும் சுமார் ஒருஇலட்சத்து இருபதினாயிரம் உயிர்களைக் (அப்பாவித் தமிழர் 80,000, அரசபடையினர் 20,000 விடுதலைப் புலிகள் 18,000) காவுகொண்ட போருக்கு அடித்தளமிட்ட அரசியலமைப்பிற்குப் பொருத்தமாகப் பெயர்சூட்டியதிலாவது அவர் மிகச்சரியாக முடிவெடுத்திருந்தார் என்றே கூறவேண்டும்.

அத்தனைக்கும் பின்னர் இனப்பிரச்சனைக்கான தீர்வை அரசியலமைப்பில் தேடுவதற்கும், விசர்நாயால் ஏற்பட்ட பிரச்சனைக்கு அந்த விசர்நாயிடமே தீர்வுகேட்பதற்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லை. இதையே பேச்சு மேசையில் நைச்சியமான நடையில் ஆலோசகர் பாலசிங்கம் குறிப்பிடும்போது, நீங்களே உருவாக்கிய கனவுலகில் எங்கள் மக்களையும், பன்னாட்டுச் சமூகத்தையும் வாழ அழைக்கின்றீர்கள் என்றார்.

அப்படிப்பட்ட பகுபூதய அரசியல் அமைப்பை வலியுறுத்துவதற்காக மகிந்தரால் தெரிவு செய்யப்பட்ட, முன்பு திம்புப் பேச்சிலும் குட்டைகுழப்பிப் பெயரெடுத்த, ஜெனிவா பேச்சுமேசையில் கடற்படைத் தளபதியையும்,தரைப்படை பிரிகேடியரையும் பின்னேதள்ளி முன்னிடம் கொடுக்கப்பட்ட, வழக்கறிஞர் எச்.என்.டி. சில்வா, சட்டங்களை அறிந்திருந்தாரேயன்றி நடைமுறைப் பிரச்சனைகளில் அவருக்குப் பரிச்சயம் இருக்கவில்லை. மேற்தட்டுச் சிங்களச் சித்தாந்தமான தமிழருக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை, புலிகளால்தான் பிரச்சனை என்ற கண்மூடிய தீக்கோழித் தோரணைக்கு அவரும் விதிவிலக்காயிருக்கவில்லை.

பேச்சுக்கள் சூடுபிடித்துப் போய்க் கொண்டிருந்த நிலையில் சிறுவர் ஆயுதம் ஏந்துதல் என்ற விடயத்தை திருமதி அஷ்ரப் ஏந்தியதுதான் அடுத்த அபத்தம். தான் ஒரு தாய் என்ற நிலையில் இந்த விடயத்தை அணுகுவதாக அவர் குறிப்பிட்டதுதான் கபட நாடகத்தின் உச்சக்கட்டம். தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாகக் கொலைசெய்யப் படட்தோ, சிறைகளில் வதைபட்டதோ, தமிழ்ச்சிறுமிகள் காடையர்களால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதோ, பாடசாலைக் குண்டுவீச்சுக்களில் குருத்துக்கள் குடலறுந்து கிடந்ததோ அல்லது பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சிறார்கள் பெற்றாரை இழந்து நிற்பதோ அஷ்ரப் அம்மையாரின் தாய் மனதிற்கு எதுவித கிலேசத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்த அத்தனை காரணங்களின் விளைவான பாதுகாப்பின்மை உணர்வு மீதுறப்பெற்ற சிறுவர் சிலர் புலிகளிடம் புகலிடம் கோரி வருவதுதான் அம்மையாரின் தாய்மையைத் தவிக்கவைத்த விடயம்.

அம்பாறை திராய்மடுவில் கிருஸ்ண பிள்ளை சரோஜா என்ற பராயமடைந்து இரண்டு மாதங்களேயான 14 வயதுத் தமிழ்ச் சிறுமியை சாகும்வரை வல்லுறவுக்குட்படுத்திக் கொலைசெய்த முஸ்லிம் காடையர்களையும்தான் அம்மையார் பிரதிநிதித்துவம் செய்கிறார் என்கின்ற மாறுமுகம் அம்மையாரின் தாய்முகத்தின் மறுபக்கம் ஒட்டியிருப்பதை உலகம் ஒருமுறை உற்றுக் கவனிக்க வேண்டும். தமிழர் தாயகத்தில் பராயமடைந்த பெண்களுக்கான பராமரிப்பு முறைகளினால் அவர்களின் உடல்நிலை எப்படி இருக்கும் என்பதையும் அந்த நிலையில் அந்தப் பிஞ்சுக் குழந்தையின் வேதனைகள் என்ன என்பதையும் அம்மையாரின் 'தாய்மை' மறந்து ஆயுதம் ஏந்திய சிறுவர்களுக்காக வேதனைகாட்டியதுதான் உலக மகா நீலித்தனம்.

திருமதி அஷ்ரப்பின் கரிசனைக்கான பதிலில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தாம் ஒரு தந்தையின் இடத்திலிருந்து சிறுவர்களின் பிரச்சனைகளைப் பார்ப்பதாகக் குறிப்பிட்டது ஏற்பாட்டாளர்களின் தரப்பில்கூட ஒரு அர்த்தம் பொதிந்த முறுவலை வரவழைத்திருக்கிறது. அடுத்த தலைமுறையின் வாழ்விற்காக தங்கள் இன்றைய வாழ்வை தற்கொடையாகக் கொடுக்கும் ஒரு அமைப்பின் முன் அவர்களின் சிறுவர்களின் நலனைப் பற்றியே கதைவிடுவதில் உள்ள முரண்நகையை இந்தப் பதில் வெளிப்படுத்தியது அதன் காரணமாயிருந்திருக்கலாம். தவிர, தமிழ்ச்செல்வன் தொடர்ந்து பேசும்போது, சிங்கள இனவாதப் படையால் வாழ்கை மறுக்கப்பட்ட சிறுவர்களுக்கு தேசியத் தலைமை என்னென்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது என்பதையும் விலாவாரியாகக்கூறி பிரச்சனையின் வேர் எங்கிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

சிறுபான்மையினரின் ஆதரவும் தனக்கிருப்பதாகக் காட்டிக்கொள்ள மகிந்தரால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் தங்கள் சிங்கள எஜமானர்களைத் திருப்திப்படுத்த அமைந்ததே அம்மையாரின் பொஸ்ஸே முழக்கம். தவிர, சிறுவர் ஆயுதங்களை நாடுதல் என்பது ஒரு நோய்க்குறியே. அதன் மூலகாரணத்தையே உலகசமூகம் இலக்கு வைத்தல் வேண்டும்.

அடுத்ததாக அங்கே நடந்த விடயத்தை நகைச்சுவை என்பது நாகரிகமற்றது என்பதால் சுவையான திருப்பம் என்று சொல்லுவோம். கொழும்பில் தாக்குதல் அச்சம் ஏற்பட்டது என்ற காரணத்திற்காக சமாதான காலத்தில் தலைநகரில் வாழும் ஏதுமறியாத நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களை நள்ளிரவில் கைதுசெய்து இரவு ஆடையுடன் காவல் நிலையத்திற்கு இழுத்து வந்த அந்தக் கேலிக்கூத்திற்கு 'அந்நியர் இரவு' என்று பெயரிட்டு மகிழும் பொலிஸ் படையின் மா அதிபரான சந்திரானந்த டி சில்வா, சமகாலத் தொழிநுட்பங்களைப் புறக்கணித்து காகிதப் பழுவுடன் வந்து ஆதாரபூர்வமாக நிரூபிக்க முயன்ற முதல் விடயம் துரையப்பாவின் சாவொறுப்பு ஆகும். விடுதலைப்புலிகள் முதல்முதலாகத் தங்கள் நடவடிக்கையைப் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டபோது உரிமைகோரிய விடயங்களில் துரோகி துரையப்பாவிற்கு வழங்கப்பட்ட சாவொறுப்பம் உண்டு. அதை மீள நிரூபிப்பது தானாக நிற்கப்போகும் புகையிரதத்திற்கு கைகாட்டுவதைப் போல வெகுளித்தனமான ஒன்று என்பதையும் சுமார் ஒன்றரை அடி உயரமான காகித அடுக்கை ஒவ்வொன்றாகப் பார்ப்பதற்கான சவுகரியமும், நேரமும் ஒரு காவல்நிலையத்தில் இருப்பதைப்போல இங்கு கிடையாது என்பதையும் அந்தச் சங்கடமான முதியவருக்குப் புரிய வைப்பதில் புலிகள் தரப்பினர் நொந்து போனார்கள் என்றால் சிங்களவர்களால் கொல்லப்பட்ட எண்பதினாயிரத்திற்கும் அதிகமான தமிழ்மக்களின் விபரங்களைப் புலிகள் கிளறத்தொடங்கினால் என்னவாகும் என்ற எண்ணமே ஏற்பாட்டளர்களைக் கிலிகொள்ளச் செய்திருக்கும். ஆனால் புலிகளின் யதார்த்த அணுகுமுறை நடந்தவற்றைக் கிண்டுவதைவிட இனிமேல் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதிலேயே கவனம் செலுத்தியதால் இடர்பாடுகள் தவிர்க்கப்பட்டன.

இவையனைத்தையும் விட அங்கே சுடச்சுடப் பரிமாறப்பட்ட விடயம் ஒட்டுப் படைக் குழுக்கள் பற்றிய புலிகளின் அறிக்கை. மறுக்கமுடியாத ஆதாரங்களோடு முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டைக் கண்டு திகைத்துத் தான் போனார்கள். உலகின்முன் சிறிலங்காவின் நிருவாணம் அன்று மீண்டுமொருமுறை வெளிப்பட்டு சிறிலங்காவின் பன்னாட்டு ராஜதந்திர முகத்தில் பாரிய ஓட்டையை உண்டாக்கியிருக்கிறது. ஏற்கனவே இனப்படு கொலையில் பெயரெடுத்து நிற்கும் அந்த நாட்டிற்கு, ஒட்டுப்படைகள் இல்லவே இல்லை என்று பன்னாட்டுச் சமூகத்தைப் பேய்க்காட்டிய பழியும் சேர்ந்து கொண்டதன் தாக்கம் ஜெனிவா பேச்சுக்களின் பின்னான நாட்களில் புலப்படத் தொடங்கியிருக்கிறது. அமெரிக்காவின் இலங்கை சார்பான மனித உரிமை அறிக்கையின் தொனியும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரான டொனால்ட் காம்ப் அவர்கள், அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான அரச பதில் செயலர் பிராட் ஷேர்மனிடம் புலிகள் மீதான தடை நீக்கம் பற்றிக் கேட்டபோது அமெரிக்க சுதந்திரப் போராட்டநியாயங்களும் தமிழீழ விடுதலைப் போராட்ட நியாயங்களும் சமமானவை

(15ஆம் பக்கம் பார்க்க)

— இராசமைந்தன்

**அத்தனைக்கும் பின்னர் இனப்பிரச்சனைக்கான தீர்வை அரசியலமைப்பில் தேடுவதற்கும் விசர்நாயால் ஏற்பட்ட பிரச்சனைக்கு அந்த விசர்நாயிடமே தீர்வுகேட்பதற்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லை. இதையே பேச்சு மேசையில் நைச்சியமான நடையில் ஆலோசகர் பாலசிங்கம் குறிப்பிடும்போது, நீங்களே உருவாக்கிய கனவுலகில் எங்கள் மக்களையும் பன்னாட்டுச் சமூகத்தையும் வாழ அழைக்கின்றீர்கள் என்றார்.**



www.eelamview.com

**- ஆ.ந.பொற்கோ -**

# புரியாத புதிர்

முல்லைத்தீவு நகரம் இந்தியஇராணுவ முற்றுகைக்குள் சிக்கியிருந்த காலம். நகரிலிருந்து பிரிந்துசெல்லும் ஒவ்வொரு வீதியின் தொடக்கச் சந்தியிலும் பாரிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. வீதிச்சோதனைகளும் வீதிக்கண்காணிப்புகளும் பலமாக இருந்தன.

அவனுடைய குடும்பம் சின்னாற்றங்காட்டில் குடியேறி பல ஆண்டுகள் கடந்திருந்தன. தொடக்க நாட்களில் அந்த ஊரின் சூழல், இடைவெளியை ஏற்படுத்தியபோது சில நாட்களிலேயே அந்தச் சூழலோடு அவன் ஒன்றித்துப்போனான்.

அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு, நகரிலுள்ள பள்ளிக்கூடத்துக்குப் புறப்படுவான். அவனுடைய பள்ளிக்கூடம் வீட்டிலிருந்து அண்ணளவாக இரண்டு கிலோமீற்றர் தூரத்திலிருந்தது. ஊரிலுள்ள மாணவர்களும் சாரி சாரியாக வந்துகொண்டிருப்பார்கள். கிரவல் வீதியை முதன் முதலில் அவன் தரிசித்தான். அந்த வீதியின் நிறம் அவனுக்குப் புதுமையானதாகவே இருந்தது. எப்போதாவது ஒரு ஊர்தி புழுதியைக் கிளப்பி விரைந்தது.

காட்டையும், பனங்கூடல்களையும், குடிமனைகளையும் இரசித்தபடி பள்ளிக்கூடத்திற்குப் பயணிப்பான். சின்னாற்றுப் பாலத்தை நெருங்க அவனது சிந்தனைகள் சிறகடிக்கத் தொடங்கும். நாள்தோறும் சின்னாற்றைத் தரிசித்தபோதும் தெவிட்டாத காட்சியாய் அது அவனது மனதில் விரிந்துகிடக்கும்.

பள்ளிக்கூடம் விட்டுப் பசியோடு வந்துகொண்டிருந்தாலும் சின்னாற்றுப் பாலத்தில் பசி பஞ்சாய் பறந்துபோகும். ஒருபக்கம் தொடுவாயைத் தாண்டி பெருங்கடல் பரந்திருக்கும்.



இன்னொரு பக்கம் தொடுவாய் நீர் வளைந்து மறைந்திருக்கும். அதற்கப்பால் நந்திக்கடலோரப் பனங்கூடல்களின் தலைகள் தெரியும். கோடைகாலத்தில் சின்னாற்றில் மிதந்திருக்கும் பாறையில் முதலைகள் வாயைத்திறந்தபடி படுத்திருக்கும்.

மாரிகாலம் முற்றிய நாட்களில் சின்னாற்றுப் பாலத்துக்கு மேலால் தண்ணீர் பாயும். அந்தத் தண்ணீரோடு மீன்களும் பாய்ந்து பாலத்தில் விழும். அதனைப் பிடிப்பதற்கு ஊரவர்கள் குழுமியிருப்பார்கள். இந்த நாட்களில் சில வேளைகளில் பள்ளிக்கூடம் நடைபெறாது. அவனுள் கவலை குடிகொள்ளும். சின்னாற்றுப்பாலம் சின்ன மனதில் சிறகடிக்கும்.

இந்தியச் சிப்பாய்கள் சின்னாற்றுப்பால முடிவில் முகாம் அமைத்த நாளிலிருந்து அவனது சின்னாற்றுப்பால இரசனை குறைந்துபோயிற்று. பாலம் நெருங்கப் பயமே அவனைப் பீடித்தது.

உப்புக்காற்றில் அவர்களின் முகாமின் அடையாளநெடி காற்றில் கலந்து மூக்கைத் தொடும்.

இந்தியச் சிப்பாய்கள் நேரகாலமின்றித் தேங்காய்களை உடைத்துச் சப்பிக் கொண்டிருந்தார்கள். சில சிப்பாய்களின் கண்கள் பள்ளி மாணவிகளை விழுங்கிக் கொண்டிருந்தன. அந்த முகாமுக்குப் புதிதாக இராணுவப் புலனாய்வு அதிகாரியொருவன் வந்திருந்தான். அவனின் தோற்றம் மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும் தன்மையாய் இருந்தது. சரளமாகத் தமிழ் கதைத்தான். அந்த அதிகாரி பல இடங்களில் நடந்த கொலை, கொள்ளை, பாலியல்வல்லுறவுச் சம்பவங்களுக்குக் காரணமாக இருந்திருந்தான். இடுப்பில் கைத்துப்பாக்கியுடன் இறுமாப்பாய் நடப்பான். அவர்களின் காவலரணிலிருந்து சிறிது தூரத்தில் போராளியால் ஒருநாள் அவன் சுட்டுக்கொல்லப்பட்டான். ஊரவர்கள் உளமார மகிழ்ந்தார்கள்.

இந்திய ஜவான்களின் சுற்றிவளைப்பும், தேடுதல்களும், கைதுகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருந்தன. சில நாட்களில் இரவு வேளைகளில் தாறுமாறாகச் சுட்டபடி வருவார்கள். அவனும் ஊரவர்களோடு ஓடி காட்டுக்குள் பதுங்கியிருந்திருக்கிறான்.

அமைதிப்படையாக வந்தவர்களின் கொடுமைகளால் ஊரவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டபோது ஒரு இந்தியச் சிப்பாயின் செயற்பாடு சற்று மனதுக்கு ஒத்தடம் கொடுத்தது. சுற்றிவளைப்புக்களை முன்கூட்டியே தெரியப்படுத்தி உதவியிருக்கிறான். அவன் ஒரு தமிழ்நாட்டுக்காரன்.

அவன் பள்ளிக்கூடம் போகும்போது அந்தச் சிப்பாய் அவனோடு கதைப்பான். அவனுக்குப் பயமாக இருந்தபோதும் அந்தச் சிப்பாயின் செயற்பாடு பிடித்திருந்தது.

ஒருநாள் பள்ளிக்கூட நேரத்தில் சிலாவத்தைப் பக்கம் சூட்டுச் சத்தங்கள் அகோரமாய்க் கேட்டன. போராளிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையே மோதல் வெடித்திருந்தது. சில மணிநேரத்தில் சத்தம் ஓய்ந்துபோனது.

அவன் பள்ளிக்கூடம் விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தான். காவலரணிலிருந்த சிப்பாய்கள் முழுசிக் கொண்டிருந்தார்கள். வேர்த்துக் களைத்திருந்த தமிழ்நாட்டுச் சிப்பாய் அவனைக் கூப்பிட்டான்.

" என்ன உங்கடை ஆக்கள் வண்டியில (ஊர்தி) பூட்டி அடிக்கிற ஆயுதத்தை எல்லாம் கையிலைவைச்சு அடிக்கிறாங்கள். எங்களிலை நாலுபோரு லொஸ்ற்" – அவனுக்கு அன்று அந்தச் சிப்பாயின் பேச்சுப் புரியாத புதிராக இருந்தது. ஆனால் இன்று அவனும் ஒரு போராளியென்பதால் அது புரியாத புதிராக இருக்கவில்லை. ■

## பகிரப்படாத பக்கங்கள்

( 14ஆம் பக்கத் தொடர்ச்சி )

என்ற பார்வையில் பேசியதும், இணைத் தலைமை நாடுகளின் ஒட்டுப்படை சார்ந்த நிலைப்பாட்டில் மாற்றமில்லாதிருப்பதும் அதன் அண்மைய வெளிப்பாடுகள்.

பாராளுமன்றத்தில் சிறுபான்மைப் பிரதிநிதிகளின் பேச்சுக்களைக் கவனியாது அலட்சியப்படுத்துபவர் என்கின்ற முறைப்பாடு, குழுவுக்குத் தலைமைதாங்கி வந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் மேல் உண்டு. பேரினவாதத்திற்கு நாகரீகச் சாயம்போடும் மேற்தட்டுப் பௌத்த சிங்களச் சித்தாந்தவாதியான இவரை மகிந்தர் அனுப்பியதன் காரணம் இவர் சிறந்த முடிவுகளை எடுக்கக் கூடியவர் என்பதால் அல்ல. முடிவுகளையே எடுக்க முடியாதவர் என்பதால்தான்.

புலிகளின் முதன்மைப் பேச்சாளர் பாலசிங்கத்திடம் தன் எண்ணங்களைத் திடமாகச் சொல்லிவிட்டிருந்த தலைவர் இறுதியாகத் தாயகத்திலிருந்து சென்ற தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் தெளிவான விளக்கங்களைக் கொடுத்திருந்தார். பேச்சுக்களை முன்னின்று நகர்த்திய ஆலோசகர் பாலசிங்கத்திற்கோ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனுக்கோ தங்களின் இலக்கு பற்றிய குழப்பங்கள் இருக்கவில்லை. அவர்களின் நகர்வுகளுக்கான அதிகாரங்கள் தேசியத் தலைமையால் தெளிவாகத் தரப்பட்டிருந்ததால், ஒவ்வொரு வாக்கியத்திற்கும் தாயகத்தைத் தொடர்புகொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அவர்களுக்கிருக்கவில்லை.

மாறாக, ஒரு ஜனநாயக நாடு என்று கருதப்படும் நாட்டின் பிரதிநிதிகளிடம் வழக்கமாக உலக சமூகம் எதிர்பார்க்கக் கூடிய எந்தவொரு சுயாதீனமோ, இனப் பிரச்சனை பற்றிய யதார்த்தப் பார்வையோ இல்லாத ஒரு குழுவை மகிந்தர் அனுப்பியிருந்தது ஏற்பாட்டாளர்களான பன்னாட்டுச் சமூகத்தை மிகவும் அவமதித்த செயல் என்பதை மறுப்பதற்கில்லை. அத்தோடு, நாட்டின் பிரதம மந்திரியின் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கை மீதான கடப்பாடுகளிலிருந்து நழுவிநின்று அந்த உடன்படிக்கையின் பலன்களை மட்டும் பெற முயற்சித்த கபடத்தனத்தைக் கூட ஏற்பாட்டாளர்களும் பன்னாட்டுப் பிரதிநிதிகளும் கவனித்தே இருப்பார்கள்.

**சிறிலங்காவைச் சிதைத்துக் கொண்டிருக்கும் அதன் அரசியலமைப்பு என்னும் புண்ணிற்கு மருந்திடுவதாயின் அதைச் சுற்றியிருக்கும் சிங்களப் பௌத்த தீவிரவாதம் எனும் பழுங்கந்தல் அகற்றப்படவேண்டும். பௌத்தம் பற்றிய சிங்களரின் தவறான புரிந்துகொள்ளலும், பழம்பெரும் நாகரீகப் பின்னணி இன்மையால் முன்னேறிய சமூகங்களைக் கண்டு ஏற்படக்கூடிய இயல்பான அச்சவுணர்வை பேரினவாதக் கட்சிகள் தூண்டி வளர்த்ததுமே இன்றைய பௌத்த தீவிரவாதத்தின் மூலங்கள்.**

தவிர, பேச்சுக்குழுவின் பின்னணிகளோ அல்லது அவர்களின் வாதங்களின் அடிநாதமோ தமிழர் தரப்பிற்கும் நம்பிக்கையைத் தரவில்லை. மொத்தத்தில் தனது முதலாவது பரீட்சையிலேயே தமிழரினதும் பன்னாட்டுச் சமூகத்தினரதும் நம்பிக்கையைப் பெறத்தவறிவிட்டார் மகிந்தர்.

சிறிலங்காவைச் சிதைத்துக் கொண்டிருக்கும் அதன் அரசியலமைப்பு என்னும் புண்ணிற்கு மருந்திடுவதாயின் அதைச் சுற்றியிருக்கும் சிங்களப் பௌத்த தீவிரவாதம் எனும் பழுங்கந்தல் அகற்றப்பட வேண்டும். பௌத்தம் பற்றிய சிங்களரின் தவறான புரிந்துகொள்ளலும், பழம்பெரும் நாகரீகப் பின்னணி இன்மையால் முன்னேறிய சமூகங்களைக் கண்டு ஏற்படக் கூடிய இயல்பான அச்சவுணர்வை பேரினவாதக் கட்சிகள் தூண்டி வளர்த்ததுமே இன்றைய பௌத்த தீவிரவாதத்தின் மூலங்கள்.

இதற்கு உதாரணங்களாக போர் நிறுத்தக் கண்காணிப்பைப் பொறுப்பேற்றவர் செயற்படும் முன்னரே சிங்களப் பௌத்தத் துறவிகள் கொடும்பாவி எரிப்பதையும் பௌத்தப் பிக்குக்களின் கட்சி தமிழர்களைச் சவப்பெட்டிகளில் அனுப்பிவைப்போம் என்று சூளுரைப்பதையும் சொல்லலாம். எண்பதுகளின் நடுப்பகுதியில் பலாலி வான்படைத் தளத்தில் கூலிப்படையாக உலங்குவானூர்தி ஓட்டிய பிரித்தானியர் தனது புத்தகத்தில் (The Reluctant Mercenary) குறிப்பிடும் நாமல் என்ற வான்படை அதிகாரி ஒரு தீவிர பௌத்தர். மரக்கறியை மட்டுமே உண்பார். ஆனால், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அப்பாவித் தமிழர்களைக் கொல்வார், ஆபாசப் படங்களைப் பார்ப்பார், பண்பின்றி நடந்து கொள்வார். இதுதான் சராசரிச் சிங்களர் பௌத்தத்தைப் புரிந்துகொண்டிருக்கும் விதம். இவர்களின் படையாக்கிரமிப்பின் கீழ் சிறுபான்மைத் தமிழர் எதை எதிர்கொள்வர் என்பது போக, உலக பௌத்த சமூகம் இன்னுமொன்றையும் சிந்திக்க வேண்டும். இஸ்லாம் பற்றிய ஒருதரப்பாரின் தவறான புரிந்துகொள்ளலால் இன்று உலக இஸ்லாமியச் சமூகம் சங்கடப்பட்டு நிற்பதைப்போன்ற நிலைவராது தற்காத்துக் கொள்வதாயின் சிறிலங்காவில் நடக்கும் பௌத்தத்தின் பிறழ்புரிதலை நிறுத்த உலக பௌத்த சமூகம் முயலவேண்டும்.

இவ்வகைப் பின்னணியிலான தீவிர நிலைப்பாட்டுக் கட்சிகளின் ஆதரவில் சனாதிபதியான மகிந்தர், அடுத்தமுறையாவது பிரச்சனையைத் தீர்ப்பதை மட்டுமே நோக்காகக் கொண்ட குழுவொன்றை அனுப்புவார் என்று எதிர்பார்க்கலாமா? அல்லது வழக்கமான சிங்கள உத்திகளின் அடிப்படையில் தமிழரின் பேரம்பேசும் பலத்தைக் குறைப்பதற்கான அவகாசத்தைப்பெறும் இன்னொரு பொஸ்ஸேயாக அது அமையுமா? அல்லது யாருக்கு என்ன வாக்குறுதி கொடுக்கப்பட்டாலும் தொடர்ந்தும் இராணுவத்துடன் பகிரங்கமாக இயங்கி வரும் ஒட்டுக்குழு விற்பன்னர்கள் வெகு விரைவிலேயே நாட்டை 'அந்தச்' சூழ் நிலைக்கு இட்டுச்சென்று விடுவார்களா? என்பவை காலத்தால் கரைக்கப்பட வேண்டிய கேள்விகளே.

தமிழர் தரப்பு சிறிலங்காவினருக்கும் பன்னாட்டுச் சமூகத்திற்கும் தங்கள் நிலைப்பாட்டை நன்கு தெரிவித்திருப்பதுடன் போதுமான கால அவகாசத்தையும் கொடுத்திருக்கிறது. அது இப்போது பொறுமையிழந்து தீர்வுநோக்கிய திசையில் மீண்டும் உத்வேகம்பெறத் துடித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்தத் தீர்வு அரசமைப்பின் உள்ளே இருப்பதாக தமிழர் தரப்பு நினைக்கவில்லை. ●

# காத்திருப்பது கரைந்துபோவதல்ல

வியாசன்

இந்தத் தடவை வானப்பயணம் போனவர்
வந்து இறங்கியதிலிருந்து
ஆவியாய் வெளியேறிக் கரைகிறது
மீதமாயிருந்த கொஞ்ச நம்பிக்கையும்.
மீண்டுமொருமுறை
போகத்தான் வேண்டுமா என்பதாய்
நெஞ்சின் சுவர்களில் நெருப்பெறிகின்றன
ஆயிரம் சுடுகேள்விகள்.
தொடங்கிய புள்ளியும்,
சுற்றிவந்த தூரமும்,
இப்போது தரித்து நிற்கும் இடமும்
இராஜதந்திரப் பிரமிப்பையும் மீறி
அச்சம் தருகின்றன.
மலையையே சுமக்கவல்ல வலியர்
தள்ளுவண்டி வியாபாரிகள் போல
திரியும் விதியென்றாச்சா நமக்கு?
மேசையிலமர்ந்து பேசுவதென்பது
பூதகியிடம் பால்குடிப்பது போன்றதே.
உறிஞ்சவேண்டும்
விழுங்கக் கூடாது.
சிரிக்க வேண்டும்
சிக்குப்படக்கூடாது.
கடின பணியில் நம்மவர் கைதேர்ந்துவிட்டனர்.
ஆயினும் எத்தனை காலத்துக்கென்றுதான்
இந்த அரிதார நாடகம்?
அவர்கள் தரப்போவதில்லை
நாங்கள் விடப்போவதுமில்லையென்றால்
பின்னெதற்கு இந்தப் பொம்மலாட்டம்?
பலத்திலிருந்தே கிடைக்கிறது பாகப்பிரிவினை
உலகமிதற்கு என்னதான் செய்ய இயலும்?
கொதித்தபால் ஆறும்வரை
கள்ளப்பூனைபோல் காத்திருந்துவிட்டு
ஆறியதும் நக்கிக்குடித்துவிட்டு நகரும்.
இதுவரையான படிப்பினைகள் எச்சரிக்கின்றன.
எவராக இருந்தாலும்
எமக்காக வடிக்கும் கண்ணீரின் மட்டத்தை
அளவெடுப்பது இருக்கட்டும்.
முதலில் வடிக்கும் கண்ணீரெல்லாம்
உண்மையானதா என்பதை உணரவேண்டும்.
சந்தையில் கூடியுள்ளோரெல்லாம்
வாங்கவும் விற்கவும் வந்தவரல்லர்.
அதற்குள் தரகர்களும் கலந்திருப்பார்கள்
நியாய விலைக்கு தரகர்களே நெருக்கடிதருவர்.
பேச்சுவார்த்தைக்கான மேசைகூட
முறிந்த கால்களுடன்தானே மூச்சிழுக்கிறது.
விருப்பமின்றி நடக்கும் விவாகங்களெல்லாம்
விவாகரத்திற்தானே முடிகின்றன.
அப்படியெனில்
காதலிப்பது போலவும்
கலியாணம் செய்வது போலவும்
இந்தக் கூத்துக்கள் எத்தனை காலத்துக்கு?
ஆகக்கூடியதாக அவர்கள் என்ன தருவார்கள்?
உலகமெமக்கு வாங்கித்தரும் உயர்ந்த தீர்வென்ன?
மிஞ்சி மிஞ்சிப்போனால்
மாநில சுயாட்சியெனும் மாரீசம் கிட்டும்.
போதுமா நமக்கு?
போராடியது இதற்குத்தானா?
துயிலுமில்லக் கதவுகள் திறந்துபோனால்
உள்ளே காற்றா வீசுகிறது?
இல்லையே
பிள்ளைகளின் மூச்சல்லவா பேசுகிறது.
அந்தரித்த வாழ்வும்,
அகதிகளென்ற பேரும்,
ஒவ்வொரு வீடும் கொடுத்த உயிர்விலையும்,




நாயாக ஓடிய நாட்களும்,
நடுக்கத்தில் கிடந்த இரவுகளும்,
செம்மணிப் புதைப்பும்,
கொக்கட்டிச்சோலைத் தகனமும்,
புலம்பெயர்ந்துபோன தெருக்களில்
எம் பிள்ளைகள் படுகின்ற வதையும்
தருகின்ற தீர்வுக்குச் சமனாகிவிடுமா?
மாநில சுயாட்சிக்காகவா நாங்கள் மண்டியிடுவது?
மண்ணாங்கட்டி
எச்சிற் சோற்றுக்கா இத்தனை வலிசுமந்தோம்?
ஈழத்தமிழர் சிந்திய இரத்தத்தாற்தானே
இந்துசமுத்திரம் இன்னும் வற்றாமற் கிடக்கிறது.
ஈழத்தமிழர் நிமிர்ந்த நிமிர்வாற்தானே
உலகெங்கும் தமிழருக்கொரு முகவரி கிட்டியது.
எல்லாவற்றையும் கையிலிருந்து எறிந்துவிட்டு
வளைந்துபோகுமா முதுகு?
வற்றிப்போகுமா கிணறு?
பிரபாகரன்
மாநில சுயாட்சிக்காகப் பிறப்பெடுக்கவில்லை.
காலம் நம்மிடம் தலைவனைத் தந்தது
ஒழுக்குநீரில் தாகம் தணிக்கவல்ல.
கனகாலம் அழுதபடி கிடக்கிறாய்
உனக்கொருவனைத் தருகிறேனென
இடியுண்டு கிடந்த எமக்குள்ளே
காலம் இறக்கிய பிள்ளையல்லவா கரிகாலன்.
கையிற்சுடரும் கற்பூர விளக்கொளியை
கனம்பண்ணத் தெரியாமல்
கரைந்துபோகும் திசையிற்தானே
நாங்கள் கணக்கெழுதுகிறோம்.
இனியும் வேண்டாம் இந்த இழிநிலை.
குனிந்து குனிந்து முதுகே கூனாகி
அழிவதற்கல்ல உன் அவதாரம்.
போராட்டமும்
அதன்மூலம் எட்டும் விடுதலை எல்லைகளும்
உனக்கானதல்ல
உன் தலைமுறைக்கானது.
மேசையிலிருந்து அற்புதங்கள் விளையாதென்பது
பேசப்போகிறவர்களுக்கே அதிகம் புரியும்.
பேச்சுவார்த்தைகளைப் போட்டுடைக்க வேண்டாம்
ஒப்பனைக்கு ஓரிருவர் போய்வரட்டும்
மற்றவர் எவரும் மயங்கக்கூடாது.
காத்திருப்பதும் கரைந்துபோவதும் ஒன்றல்ல.
நெஞ்சுக்குள்ளே நெருப்பை மூட்டியபடி
அஞ்ஞாதவாசத்தில் அருச்சுனன் இருந்தானே
அதுவே காத்திருத்தல்.
ஈழத்தமிழர்களுக்கும் அதுவே தவம்.
ஓடுகாலிகளைப் பலமென நம்பி
சிங்கள தேசம் சிரசேறி நிற்கிறது.
இனி முட்டி மூக்குடைந்து
எல்லாமிழந்து அம்மணமாகி
தானும் அழிந்து
தாங்குபவரையும் இழந்து
மகிந்த மன்னன் போரைத் தொடங்குவான்.
காற்றாய்ப் பரவும் நமக்கான காலம்
கனவுகளில் கரையாமற் காத்திருப்போமெனில்
அறுவடை நமக்காகும்.
வாடா எம் இளைய வரலாறே!
விடுதலைக்காய்
வாடி எம் இளைய வல்லபையே!
உன் விழியில்
கோடி மின்னல்கள் குடியிருக்க வேண்டுமடி.
விட்ட குறைப்பயணம் விரையட்டும்.
எம் முகத்தை
முட்டுபவர் இனிமேல் மூச்சிழந்து போகட்டும்